A/L 87 Day Class
பிரிவு III
ஆரம்பம்: 10-11-1986
Zoology : 1.30-2.30 p.m
Botany : 2.30-3.30 p.m.
Physics : 3.30-4.30 p.m
Chemistry: 4.30-5.30 p.m.
New Master Institute
B.M.C. Lane, JAFFNA.

# சஞ்சீவி

விலை ரூ 2/-

அறிவு-ஆக்கம்-அபிவிருத்தி

G.C.E. (A/L) 1987
Physics: VARNAM
நடைபெறுகின்றது.
திங்கள், வெள்ளி;
3-4 ELECTRICITY
திங்கள், வெள்ளி:
4-5 MECHANICS
New Master Institute
B.M.C. Lane, JAFFNA.

மலை:- 1 யாழ்ப்பாணம் அக்ஷய ஞு ஐப்பசி மீ 22 உ சனிக்கிழமை ஹிஜ்ரி 1406 ரபியு அவ் பிறை 05 (08-11-1986) SANJEAVY. REGENERATIVE TAMIL WEEKLY சிகரம் :42

## கருத்துக் கலசம்

மயூரா

### படிக்காத மேதைகள்

அறிவு கல்வி மூலம் வளர்வது. பாடசாலையிலும் பல்கலைக்கழகத்திலும் பயில்வதால் மட்டும்தான் கல்வி, அறிவு பெறலாம் என்பதில்லை. சொந்தத்தில் பல நூல்களை வாசிப்பதாலும், அனுபவத்தாலும் அறிவை வளர்த்துக் கொள்ளலாம்.

பள்ளிப் படிப்பால் மட்டும்தான் ஒருவனுக்குத் திறமை வருவதில்லை. விடாமுயற்சியாலும், தன்னம்பிக்கையாலும் திறமையைவளர்க்கலாம். அனுபவத்தால் அதனை மேலும் வளர்க்கலாம்.

அறிவும் திறமையும் எல்லோருக்கும் வாய்த்துவிடும் என்பதல்ல. அவை இயற்கை வழங்கும் கொடைகள். ஆண்டவன் அருளும் வரம்.

தமிழகத்தில் —

பல்கலைக்கழகம்செல்லாது சொந்த முயற்சியால் அறிவொளியாகத் திகழ்பவர் திருமுருக கிருபானந்த வாரியார்.

இடைநிலைக் கல்வியைக்கூட முழுதாக முடிக்காத சிவாஜி எனப்படும் வி. பி. கணேசன் தனதுமுயற்சியாலும், ஆற்றலாலும் தமிழ்நாடக — திரையுலகில் நடிகர் திலகமானவர்.

இவர்கள் இருவருக்கும் சௌரவ கலாநிதிப்பட்டங்கள் வழங்க அண்ணாமலைப் பல்கலைக்கழகம் முடிவு செய்திருப்பதாகச் செய்தி வந்துள்ளது.

எப்போதோ செய்திருக்க வேண்டிய காரியத்தைக் காலம் பிந்தியாவது பிரஸ்தாப பல்கலைக்கழகம் செய்ய முடிவு செய்ததே என்று திருப்திப்பட வேண்டி உள்ளது.

சுமார் மூன்று சகாப்தங்களுக்கு மேலாக சமயத்துறையிலும் நடிப்புத்துறையிலும் கொடிகட்டிப் பறக்கும் இந்த இருவரும் பல்கலைக்கழகப்படி ஏருத காரணத்தால் தான் இவ்வளவு காலமாக ஒதுக்கப்பட்டார்களோ என்று எண்ணத் தோன்றுகிறது.

உண்மையான அறிவும், திறமையும் உள்ளவர்களைப் பட்டமளித்துக் சௌரவிக்கும் பண்பு, பல்கலைக்கழகங்கள் (அவை எங்கிருந்தாலும்) மத்தியில் வளரவேண்டும்.

அந்தந்தத் துறையில் அறிவும் திறமையும் நிரம்பியவர்கள் எவராக இருப்பினும் அவர்களைக் கௌரவிக்கும் பரந்த நோக்கு பல்கலைக்கழக நிர்வாகங்களுக்கு வரவேண்டும்.

ஈழத்தைப் பொறுத்தவரை யாழ்ப்பாண, மட்டக்களப்பு பல்கலைக்கழகங்கள் இவ்விஷயத்தில் அக்கறை செலுத்தவேண்டும்.

எம்மத்தியில் உள்ள அறிஞர்கள், திறமைசாலிகளை அவர்களின் ஆற்றல் அடிப்படையில் இனங்கண்டு கௌரவிக்க ஆவன செய்யவேண்டும்.

படிக்காத மேதைகளைப் பாராட்டப் பழக வேண்டும்.

மும்முனைத் தாக்குதல் நடத்திய

# ஆயுதப் படையினருக்கு வல்வையில் புலிகள் பதிலடி

## ஆயுதம் இறக்க வந்த படகுகள் பின்நோக்கின

வல்வெட்டித்துறை, நவ 8

வல்வெட்டித்துறை இராணுவ முகாமுக்கு, ஆயுதங்களையும் துருப்புக்களையும் ஏற்றிக்கொண்டு மூன்று பீரங்கிப் படகுகள் நேற்று வந்தன. அவை மீது விடுதலைப் புலிகள் இயக்கத்தினர் தாக்குதல் நடத்தியதும் கடல், வானம், தரை ஆகிய மூன்று முனைகளில் அரசாங்கப் படைகள் தாக்கத் தொடங்கின.

ஆனால் புலிகள் தக்கபடி பதிலடி கொடுத்து அரச படைகளைப் பின்வாங்கச் செய்தனர். அதனால் பீரங்கிப் படகுகளும் பின்நோக்கிச் சென்றன-

நேற்றுக்காலை 9 மணி தொடக்கம் 12 மணி வரையும், பின்னர் பிற்பகல் 5-30 மணியளவிலும் மோதல்கள் நடைபெற்றன.

இம் மோதல்களில் இராணுவத்தினர் பலர் படுகாயமுற்றனர். புலிகள் தரப்பில் ஒருவர் காயமடைந்தார்.

வல்வைத் தாக்குதல் குறித்து தமிழீழ விடுதலைப் புலிகள் விடுத்த அறிக்கை விவரம் வருமாறு:-

நேற்றுக் காலை 9 மணியளவில் வல்வை இராணுவ முகாமிற்கு 3 பீரங்கிப் படகுகளில் பொருள்களும், இராணுவத்தினரையும் இறக்குவதற்காக வந்தசமயம் எமது வீரர்கள் பலத்த எதிர்த்தாக்குதல்கள் மேற்கொண்டனர்.

அத்துடன் முகாமை நோக்கி 6 அங்குல மோட்டார்த் தாக்குதலும் மேற்கொண்டனர். இதனையடுத்து கடற்படை படகுகள் பின்வாங்கிச் சென்றன.

அதே நேரம் ஹெலிக்கொப்டர் மூலம் முகாமினுள் தரையிறங்க முற்பட்ட போதும் எமது வீரர்கள் எதிர்த்தாக்குதல் நடத்தியதில் ஹெலிக்கொப்டர் உயரக் கிளம்பி வட்டமிட்டவாறு ரொக்கட் மோட்டார் தாக்குதலும், 50 கலிபர் துப்பாக்கித் தாக்குதலும் நடத்தியது.

இதன் மத்தியிலும் எமது வீரர்களின் எதிர்த்தாக்குதலால் ஹெலியும் பின்வாங்கியது.

பின்பு மாலை 5-30 மணியளவில் மீண்டும் 4 ஹெலிக்கொப்டர்கள் தாக்குதல் நடத்தியவாறே அதிலும் 3 ஹெலிக்கொப்டர்கள் முகாமினுள் தரையிறக்கப்பட்டன. பலத்த சிரமத்தின் மத்தியிலேயே இன்று முகாமுக்குள் ஹெலி தரையிறக்சப்பட்டது. பின்பு 6 மணியளவில் சகல ஹெலிக்கொப்டர்கள் அவ்விடத்தைவிட்டு அகன்றன.

எமது வல்வைச் செய்தியாளர் எழுதியிருப்பதாவது:-

கடலில் நின்ற பெரிய படகில் இருந்து ஆயுதம் போன்ற பொருள்களை இறக்கி முகாமுக்குக் கொண்டு வரச் சிப்பாய்கள் முயற்சித்தனர்.

அதனைத் தொடர்ந்து

(8ஆம் பக்கம் பார்க்க)

### வயிற்றினுள் துவாய்:

## ரூ. 10 லட்சம் நஷ்டஈடு கோரி இளம்பெண் வழக்கு

கொழும்பு, நவ.8

கவனயீனமான முறையில் சிசேரியன் சத்திர சிகிச்சை செய்ததன் மூலம் தனது உடல் நலத்துக்குப் பங்கம் ஏற்படுத்தியதற்காகப் பத்து லட்சம் ரூபா நஷ்டஈடு கோரி 27 வயது இளம் பெண் ஒருவர் கண்டி மாவட்ட நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்திருக்கிறார்.

சத்திரசிகிச்சை செய்ததாகக் கூறப்படும் பிரசவ நிபுணர், சிகிச்சை இடம்பெற்ற தனியார் வைத்திய நிலைய உரிமையாளர் ஆகியோர் மீதுதான் நஷ்டஈடு கோரி இந்த இளம் பெண் வழக்குத் தாக்கல் செய்துள்ளார்.

முதல் குழந்தையைப் பிரசவிப்பதற்காக இந்தச் சிசேரியன் சத்திர சிகிச்சை செய்யப்பட்டது. அப்போது தவறுதலாக வயிற்றினுள் பெரிய துவாய் ஒன்று உள்ளே வைத்துத் தைக்கப்பட்டது.

இதன் காரணமாக 'இன்னொரு சத்திர சிகிச்சை மூலம் தான் அந்தத் துவாய் அகற்றப்பட்டது. இதனால் எனது உடல் நிலை நிரந்தரமாகப் பாதிக்கப்பட்டுள்ளது.

இப்படி அந்த இளம் பெண் மனுவில் தெரிவித்துள்ளார்.

விசாரணை அடுத்த ஆண்டு பெப்ரவரி 19 ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டது.

(இ-எ)

## செய்திச் சாரம்

### விளையாட்டுச் சுடர்

யாழ்ப்பாணம், நவ.8

யாழ்ப்பாணத்தில் 'விளையாட்டுச் சுடர்' என்ற பெயரில் மாதாந்த விளையாட்டுச் சஞ்சிகை ஒன்று வெளியிடப்படுகிறது.

அதன்வெளியீட்டு விழா இன்றுசனிக்கிழமை காலை 10 மணிக்கு யாழ்ப்பாணம் பட்ரீஷியன் இன்ஸ்டிடியூட் மண்டபத்தில் இடம்பெறும்.(எ)

### வழிகாட்டி நூல் வெளியீட்டு விழா

யாழ்ப்பாணம், நவ. 8

கல்வியியலாளர்களின் 15 கட்டுரைகள் அடங்கிய பாலர் கல்வியும் விஞ்ஞான அணுகுமுறையும் என்ற தலைப்பிலான வழிகாட்டிநூல் வெளியீட்டு விழா நாளை ஞாயிறு காலை யாழ் வைத்தீஸ்வரா கல்லூரியின் விவேகானந்த மண்டபத்தில் நடைபெறும்.

### கலைவிழா

யாழ்ப்பாணம், நவ. 8

அகதிகள் புனர்வாழ்வுக் கழக நிதிக்காக உடுவில் சுதந்திரன் விளையாட்டுக் கழகத்தின் ஆதரவில் நாளை ஞாயிறு பிற்பகல் மருதனுமடம் இராமநாதன் மகளிர் கல்லூரியில் கலைவிழா நடைபெறும்.

அன்று காலை நடைபெறவிருந்த நிகழ்ச்சிகள் ரத்துச் செய்யப்பட்டுள்ளன. அவை பிற்பகலில் நடக்கும். (இ-எ)

### கவின்கலை அரங்கம்

யாழ்ப்பாணம், நவ. 8

தமிழர் கலாசார அவையின் கவின்கலை அரங்கம் நாளை ஞாயிறு பிற்பகல் 3 மணிக்கு யாழ் வின்ஸர் கலை அரங்கில் நடைபெறும்.

செல்வன் மதனுகரன் தயாபரனின் வேய்ங்குழல் இசை, பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரி வழங்கும் தர்மயுத்தம் 'நாட்டிய நாடகம், இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரியின் 'வால்பேத்தைகள்' நாடகம் ஆகியன இடம் பெறும். (இ-எ)

### உதைபந்தாட்டம்

யாழ்ப்பாணம், நவ. 8

இரண்டு முக்கிய உதைபந்தாட்டப் போட்டிகள் இன்று யாழ் சென். ஜோன்ஸ் மைதானத்தில் நடைபெறும்.

பிற்பகல் 3 மணிக்குக் கரவெட்டி விக்னேஸ்வரா அணியை எதிர்த்து சென் ஜோன்ஸ் அணி மோதும்.

பிற்பகல் 4 மணிக்கு இளவாலை சென் ஹென்றி கல்லூரி அணியை எதிர்த்து யாழ் சென் பற்றிக்ஸ் அணிமோதும். (இ-எ)

### கருத்தரங்கு

யாழ்ப்பாணம், நவ. 8

மாணவர் முன்னணியும் மறுமலர்ச்சிக் கழகமும் நடத்தும் கல்வியியற் கருத்தரங்கு நாளை (ஞாயிறு) காலை 9 மணிக்கு யாழ் பல்கலைக்கழக கைலாசபதி அரங்கில் நடைபெறும்.

அதிபர்கள், ஆசிரியர்கள், கல்விமான்களை கருத்தரங்கு ஏற்பாட்டாளர்கள் அழைக்கிறார்கள். (இ-எ)

### செவ்வாயன்று ஒய்வூதியம்

யாழ்ப்பாணம், நவ. 8

யாழ் பிரதம தபால் நிலையத்தின் கட்டுப்பாட்டில் உள்ள தபால்நிலையங்களில் ஒய்வூதியம் பெறுவோர் இதுவரை அக்டோபர்மாத ஒய்வூதியம் பெறாமல் இருப்பின் அதனை எதிர்வரும் 11-ம் திகதி செவ்வாய்க்கிழமை கோட்டை முகாம்தபால் அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளலாம் என்று, யாழ் பிரதம தபால் நிலையம் அறிவித்துள்ளது.

## தாயகமாக தனி மாநிலம்

### இயக்கங்கள் தமது யோசனையில் வலியுறுத்து

சென்னை நவ. 8

தாயகமாக தனி மாநிலம் தமிழருக்குத் தேவை.

ஐந்து போராளி அமைப்புக்கள், தமிழக முதலமைச்சர் எம். ஜி. ஆரிடம் அண்மையில் கையளித்த எழுத்துமூலமான யோசனைகளில் மேற்கண்ட அம்சம் வலியுறுத்தப்பட்டு உள்ளது.

இப்படி 'இந்து' நாளிதழ் செய்தி வெளியிட்டுள்ளது.

பின்வரும் காரணங்களினால் இலங்கை அரசின் யோசனைகள் ஏற்றுக்கொள்ள முடியாதவை என்றும் போராளி அமைப்புக்கள் தெரிவித்து உள்ளன.

அவையாவன:-

1. சட்டம் - ஒழுங்கு பராமரிப்பில் மத்திய அரசுக்கு மேலாதிக்க அதிகாரங்கள் வழங்கப்பட்டுள்ளன.

2. காணி அபிவிருத்தித் திட்டம், மாகாணங்களுக்கு இடையேயான காணி பாவனை ஆகிய விஷயங்களில் மத்திய அரசு பூரண அதிகாரங்களைக் கொண்டிருக்கும்;

3. மாகாண சபைக்கு இருக்க வேண்டிய விஷயங்கள் பல பொதுப் பட்டியல், மேலதிக பட்டியல் ஆகியவற்றில் இடம் பெற்றுள்ளன.

4. மாகாண சபைக்கு வழங்கப்பட உள்ள சட்டவாக்க நிறைவேற்று அதிகாரங்களைக் கட்டுப்படுத்தி வைக்கக் கூடிய அதிகாரங்களை ஜனாதிபதி பெறுகின்றார்; அவற்றை நாடாளுமன்றமும் பெறுகின்றது.

5. ஒற்றையாட்சித் திட்டத்தின் கீழ் எந்தத் தீர்வும் அமையக் கூடாது.

இப்படி போராளிகள் அமைப்புக்களின் யோசனைகள் தெரிவிப்பதாக 'இந்து' நாளிதழ் செய்தி வெளியிட்டுள்ளது. (இ எ)

### சம்பந்தமில்லை என்கிறது ஈ. பி. ஆர். எல். எவ்.

யாழ்ப்பாணம், நவ 8

யாழ் பல்கலைக் கழக மாணவன் அ. விஜிதரனின் கடத்தலுக்கும்தமக்கும் எவ்வித சம்பந்தமும் இல்லை என்று ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி (ஈ. பி. ஆர். எல். எவ்) நேற்று விடுத்த அறிக்கை ஒன்றில் தெரிவித்தது.

மாணவனின் கடத்தலைக் கண்டிப்பதாகவும், இதுவிடயம் சம்பந்தமாக மாணவர்கள் நடத்தும் போராட்டத்துக்குத் தாம் ஆதரவு வழங்குவதாகவும் ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி தனது அறிக்கையில் மேலும் தெரிவித்துள்ளது. (அ)

விஜிதரன் மறைவு விவகாரம்:

## வெளி மாவட்ட மாணவர் திரும்பிச் செல்லும் நிலை ஏற்படும் என்கிறார் வித்தி

யாழ்ப்பாணம், நவ. 8

காணமற்போன வர்த்தகபீட மாணவன் விஜிதரனின் மறைவு நீடித்தால் யாழ். பல்கலைக்கழகத்தில் பயிலும் வெளிமாவட்ட மாணவர்கள் திரும்பிப் போகும் நிலைதான் ஏற்படும்.

இப்படி யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் எஸ். வித்தியானந்தன் 'சஞ்சீவி'க்குத் தெரிவித்தார்.

காணமற்போன மாணவன் விஜிதரன் பற்றி தகவல் ஏதும் கிடைக்கவில்லை.

இதனால் மாணவர்கள் வகுப்புக்களுக்கு வருகிறார்கள் இல்லை. இந்த நிலை நீடிப்பின்வெளிமாவட்ட மாணவர்கள் திரும்பிப்போகும் நிலைதான் ஏற்படும்.

மாணவர்கள் மிக அச்சத்தோடு இருக்கின்றார்கள்.

விஜிதரன் எங்கு இருக்கின்றார் என்பதை தெரிந்தவர்கள் என்னுடன் தொடர்பு கொள்ளும்படி கோருகின்றேன்.

இப்படி துணைவேந்தர் 'சஞ்சீவி' மூலம் வேண்டுகோள் விடுத்து இருக்கிறார். (இ-எ)

## ஜனாதிபதியின் நிலையை அறிவதில் இந்தியா அக்கறை

கொழும்பு, நவ. 8

தமிழ்மொழி மாநிலம் அமைக்கப்பட வேண்டும் என்ற தமிழர் அமைப்புக்களின் கோரிக்கை பற்றி ஜனாதிபதி ஜெயவர்த்தனாவின் நிலையை அறிந்துகொள்வதில் இந்திய அரசு அதிக அக்கறை காட்டத் தொடங்கியுள்ளது.

கடந்த புதன்கிழமை இரவு இந்தியத் தூதர் ஜே ா கேந்திரநாத் சிங் டிக்ஸிற் திடீர் என்று ஜனாதிபதி ஜெயவர்த்தனாவைச் சந்தித்தார்.

அச்சந்திப்பு ஒரு மணி நேரத்துக்கு மேல் நீடித்தது.

தமிழர் அமைப்புக்கள் எல்லாம் கூட்டாக தற்போது முன்வைத்துள்ள தமிழர் தாயகக் கோட்பாட்டை வலியுறுத்தும் தமிழ்மொழி மாநிலக் கோரிக்கைபற்றியே திரு. டிக்ஸிற், திரு. ஜெயவர்த்தனவுடன் பேசினார் என்று தெரிய வருகிறது.

புதன்கிழமை நடந்த சந்திப்பில் முழுக்க முழுக்க தமிழ்மொழி மாநிலக் கோரிக்கைபற்றியே பேசப்பட்டது.

இக்கோரிக்கைகுறித்து திரு. ஜெயவர்த்தனவின் நிலையை அறிந்துகொண்ட இந்தியத் தூதர் திரு. டிக்ஸிற் மறுநாளே (வியாழன்) அவசரம் அவசரமாக புதுடில்லி சென்றார்.

இன்று (சனி) தான் திரு டிக்ஸிற் புதுடில்லி செல்வதாக இருந்தது.

பெங்களூர்ச் சந்திப்பின் பின்னரே திரு. டிக்ஸிற் கொழும்பு திரும்புவார் என்று இந்தியத் தூதரக வட்டாரங்கள் தெரிவித்தன. (இ-எ)

## போராட்டத்துக்கு உதவுமாறு அந்தமான் -- நிக்கோபார் தமிழருக்கு வேண்டுகோள்

சென்னை, நவ. 7

தமிழர் உரிமைப் போராட்டத்துக்கு உதவும்படி தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் அந்தமான்— நிககோபார் தீவுகளில் வாழும் தமிழ் மக்களுக்கு வேண்டுகோள் விடுத்து உள்ளது.

'அந்தமான் எக்ஸ்பிரஸ்' பத்திரிகையில் இச் செய்தி வெளியாகியுள்ளது.

தமிழீழப் போராட்டம் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த கால கட்டத்தில் உள்ளது.

சிங்கள இனவாத அரசு சர்வதேச பயங்கரவாதிகள் துணை கொண்டு எமது போராட்டத்தை நசுக்க முற்படுகின்றது.

இரு நாடுகளுக்கும் இடையேயான எல்லைகளைக் குறித்துத் தான் இனிப் பேச்சுவார்த்தைகள் நடைபெறுமே ஒழிய வேறு எந்த சமாதானத்திற்காகவும் அல்ல என்று தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத் தலைவர் திரு. பிரபாகரன் உறுதியாகக் கூறிவிட்டார்.

சிங்களப் பேரினவாதத்தால் அழிந்து கொண்டு இருக்கும் தமிழினத்தின் விடிவுக்காக போராட்டத்துக்கு அந்தமான்— நிக்கோபார் தமிழர்களும் உதவ முன்வரவேண்டும்—

இப்படி புலிகள் இயக்கம் வேண்டுகோள் விடுத்துள்ளதாக 'அந்தமான் எக்ஸ்பிரஸ்' பத்திரிகைச் செய்தி கூறுகின்றது (இ – எ)

## பல்கலைக்கழக மாணவர் ஆர்ப்பாட்ட ஊர்வலம்

யாழ்ப்பாணம், நவ. 8

யாழ். பல்கலைக்கழக மாணவன் விஜிதரன் காணமற்போன சம்பவத்தை ஆட்சேபித்து நேற்று பல்கலைக்கழக மாணவர்கள் ஆர்ப்பாட்ட ஊர்வலம் ஒன்றை நடத்தினர்.

''விஜிதரன் எங்கே? இயக்கங்களே பதில் கூறுங்கள்''

''மாணவர் கடத்தல் வேண்டாம்''

''மாணவருக்கு பாதுகாப்பு வழங்குங்கள்''

''மாணவர்களின் உரிமையைப் பறிக்காதே''

போன்ற கோஷங்களுடன் ஊர்வலம் நடைபெற்றது.

ஊர்வலம் காலை 10 மணிக்கு பல்கலைக்கழகத்தில் இருந்து ஆரம்பித்து பல்வேறு வீதிகள் வழியாகச் சென்று மீண்டும் பல்கலைக்கழகத்தைச் சென்றடைந்தது.

ஊர்வலம் முடிவில் மாணவர்கள் துணைவேந்தரைச் சந்தித்து தமது கோரிக்கைகளை எடுத்துக் கூறினர்.

இது தொடர்பாக யாழ். பல்கலைக்கழக மாணவர் அமைப்பு விடுத்த அறிக்கையில், கடந்த 30-10-86 (வியாழன்) இரவு வைத்திய பீட மூன்றும் வருட மாணவன் இ. கேசவன் வீட்டிலிருந்து அழைத்துச் செல்லப்பட்டு தாக்

(8-ஆம் பக்கம் பார்க்க)

### சுபநேரம்

08-11-1986

சனிக்கிழமை

சுபநேரம்:
3.05 முதல் 4.35 வரை

ராகுகாலம்:
9.05 முதல் 10.35 வரை

இவை பகலுக்கும் இரவுக்கும் பொருந்தும்

புதுமையும் எழிலும் பொலிவும் பல்சுவை வார இதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விற்பனையாளர்கள் தேவை

தேயிலை, சவர்க்காரம் போன்ற பொருட்களை வீடு வீடாகச் சென்று விற்பனை செய்வதற்கு பெண்கள் தேவை. முன் அனுபவம் உள்ளவர்கள் விரும்பத்தக்கது.

யாழ். நகரின் சுற்றுடலில் வசிப்பவர்கள் ஆகவும், ஐநூறு ரூபாய் (500/-) முற்பணம் கட்டக்கூடியவராகவும் இருத்தல் வேண்டும்.

விண்ணப்பங்களுக்கு:

நியூ எஸ். கே. பிரிண்டிங் வேக்ஸ்,
NO. 7, மின்சார நிலைய வீதி, (2-ம் ஒழுங்கை)
யாழ்ப்பாணம்.



## New Science Academy

(B M Cக்கு முன்பாக)
யாழ்ப்பாணம்.

**A/L 87 சனி, ஞாயிறு பிரிவு**

**8-11-1986 (சனி) ஆரம்பம்**

மின்னியல் — திரு. மணியம் 8 30 – 10.30
பிரயோக கணிதம்) தூயகணிதம் ) — திரு வெக்டர் 10.30 – 12.30
ஒலியியல் — திரு. மணியம் 12.30 – 1.30
இரசாயனவியல் — திரு. மணியம் 1.30 – 2.30

துரித மீட்டல் பயிற்சி வகுப்பு
சனி/ஞாயிறு 8.30 தாவரவியல்–திரு. பாலா
9.30 விலங்கியல் – திரு. இளங்கோவன்
10.30 விலங்கியல்–திரு.சிவபாதம்
11.30 பௌதிகவியல்– திரு. மணியம்
12.30 இரசாயனவியல்– திரு. மணியம்



## பிரயாண ஒழுங்குகள்

● டென்மார்க் ● ஜேர்மனி
● சவூதி அரேபியா

டென்மார்க், ஜேர்மனி ஆகிய நாடுகளுக்கு செல்ல விரும்புவோரை எமது முகவர் நேரடியாக அழைத்துச் செல்வார். இம் மாதம் 15ம் திகதி செல்லவுள்ள பயணத்தில் பதிவு செய்தோரும் செல்ல விரும்புவோரும் உடன் தொடர்பு கொள்ளவும்.

சவூதி அரேபியாவுக்கு கட்டிட பகுதி Laboures ஆக செல்ல விரும்புவோர் 14ம் திகதிக்கு முன்பதாக பாஸ்போட், 6 படம் ஆகியவற்றுடன் உடன் தொடர்பு கொள்ளவும்

குவைத்திற்கு பாஸ்போட் கொடுத்தவர்கள் 15ஆம் திகதிக்கு முன் தொடர் கொள்ளவும்.

தொடர்பு:

N.பாலா
திருச்செல்வம் வீதி,
கோண்டாவில் கிழக்கு,
கோண்டாவில்.

* தீவுப்பகுதி மக்களின் நலன் கருதி ஓமேகா ரவல்ஸ்&ரூர்ஸ் வங்களாவடி சந்தியில் நிறுவப்பட்டுள்ளது.

* எமது கிளை நிறுவனம் ஓமேகா ரவல்ஸ் &ரூர்ஸ் எனும் பெயரில் குப்பிளான் சந்தியிலும் நிறுவப்பட்டுள்ளது.


வியாபாரம் பெருக விளம்பரம் செய்க

# முதலில் கடவுள் பின் பூமி கடைசியாகவே நீ...

## சுவாமி சிவானந்த மகரிஷி அறிவுரை

சுவாமி சிவானந்த சரஸ்வதி மகராஜ் அவர்களின் 100 வது பிறந்த தினத்தை முன்னிட்டு 1986ஆம் ஆண்டு புரட்டாதி மாதம் 8ஆம் திகதி தொடக்கம் 1987 ஆம் ஆண்டு புரட்டாதி மாதம் 8 ஆம் திகதி வரை நூற்றுண்டு விழாவாக உலகெங்கிலுமுள்ள தெய்வ நெறிக் கழகங்கள் மிகவும் சிறப்பாகக் கொண்டாடி வருகின்றுர்கள்.

பத்தமடையில் பிறந்து எட்டையபுரத்தில் வளர்ந்து, திருச்சியில் அறிந்து, தஞ்சையில் தழைத்து, மலேசியாவில் மலர்ந்து, வடநாட்டில் காய்த்து, ரிஷிகேசத்தில் பழுத்து பரவிய விதை இன்று உலகிற்கெல்லாம் கர்மயோக நிழலும் பக்தி யோக மலரும், ஞான யோகக் கனியும் அளிக்கும் யோக வேதாந்தச் சோலையாக விளங்குகின்றது

சுவாமி அவர்கள் சமாதியடைய முன் மக்களுக்கு அளித்த கடைசிப் பிறந்த தின அறிவுரை யாவது–

முதலில் கடவுள், அப்புறம் உலகம், கடைசியாகவே நீ

இந்த இலகுவான மகாவாக்கியத்தை மறப்பதனுற்தான் மனிதனின் வாழ்க்கையிற் பல கேடுகளும் துன்பங்களும் உண்டாகின்றன. எவனொருவன் இவ்வாக்கியத்தை மறக்கத் தொடங்குகிறுனே அப்பொழுதே மனக்குழப்பங்களும், தொந்தரவுகளும் தொடங்கின்றன

இச்சுயநலநோக்குக்குக் காரணம் அறியாமை அல்லது அஞ்ஞானம். எம்முள்ளே வீற்றிருந்து எமது எண்ணங்களுக்கும் உணர்ச்சிகளுக்கும் சாட்சியாக விளங்கும் இறைவனை மறப்பது அறியாமை. அழியும் உடம்பை நான் என்று கருதி மயங்குவது அறியாமை. ஒரே கடவுள் தான் எல்லாரிடத்திலும் நிறைந்துள்ளார் என்பதை மறப்பது அறியாமை. வேறுபாடுகளைக் கற்பிப்பது அறியாமை. நாமங்கள், ரூபங்கள் என்னும் சுழல் காற்றில் சிக்கி ஏமாந்து ஏங்கும் எல்லாரிடத்திலும் நிறைந்துள்ள ஆத்மாவை மறப்பதும் அறியாமை தான்.

அறியாமையினுல் ஆசையும் வெறுப்பும் அச்சமும் உண்டாகின்றன. அறியாமை உங்களுக்குள்ளே உள்ள உண்மையான ஒளியினை மறைத்து உங்களை ஏமாற்றியும் தாழ்மைப் படுத்தியும் விடும். உனது உட்பகையாகிய அறியாமையை வேரோடழிப்பாயாக. இவ்வுட்பகையின் உறைவிடம் உன்னுடைய மனமாகும். எவனொருவன் தனது மனத்தை அடக்கியாள்கின்றுனே அவனே பெரிய வீரன். மனத்திற்கு அடிமைப்படுவது அறியாமை. ஆதலின் மனத்தை வெற்றி கொண்டாயாளுல்சாந்தி பெறுவாய்.

உன்னையே நீ திருத்திக் கொள்ளுதல் மூலம் மனத்தை வெல்க. நற்குணங்களை விருத்தி செய்க இறவனைப் பிரார்த்தனை செய்க. தெய்வீக வாழ்க்கை நடத்துக.

காமம் பகை, கோபம், பொருமை எனும் நான்கு அக்கினிகள் மனத்தில் குடி கொண்டுள்ளன. தூய்மை அன்பு, பெருந்தன்மை என்பவற்றுல் இந்த அக்கினிகளை அளித்துவிடல் வேண்டும். அன்றேல் இந்த அக்கினிகள் உன்னையே மாய்த்து விடும்.

உன்னுள்ளே தெய்வம் உண்டு என்பதை அறிக, எல்லாரிடத்திலும் தெய்வம் உள்ளதென்றறிக. உலகம் முழுவதுமே இறைவன் மயம். ஒரு பொல்லாப்புமில்லை, கேடொன்றுமில்லை. வெறுத்துத்தள்ள வேண்டியது ஒன்றுமில்லை. உலகம் ஒரு பள்ளிக்கூடம். பாடங்களை அனுபவம் மூலம் அறிக. உலகத்திலுள்ள அனைத்திலுமிருந்து ஏதாவது ஒரு பாடத்தை நீ கற்றுக் கொள்ளலாம்.

ஆகவே "முதலில் கடவுள், அப்புறம் உலகம், கடைசியாகவே நீ" இந்த மகாவாக்கியத்தை நடைமுறைக்குக் கொண்டு வருவாயேல் சாந்தியைப் பெறுவாய், ஆனந்தம் உன்னுடையதே.

தொகுப்பு சி. கனகரத்தினம்

# அரசாங்க அலுவலகங்களில்... "சிகதி"

## வானொலி விடும் தவறுகள்

இலங்கை வானொலி பல தடவைகளில் செய்திகளை திரித்தும் உண்மைக்குப் புறம்பாகவும் வெளியிடும் பொழுது அதனை கேட்பவர்கள் அத்தனைபேரும் அதனை நம்புவார்கள் என்றுதான் எண்ணுகின்றது. பொதுவாக எல்லோருக்கும் இச்செய்திகள் பக்கச் சார்புடன்தான் வெளியிடப்படுகின்றன என்பது தெரியும்.

பத்திரிகைகளில் பிழையான செய்திகள் பிரசுரிக்கப்பட்டால் பத்திரிகை சபை நீதிமன்றம் மூலம் விசாரணைகள் இடம்பெறுகின்றன. இங்கே அரசு செய்யும் தவறுகளை யார் கேட்பது?

பி. பி. ஸி பாரபட்சமின்றி செய்திகளை வெளியிடும் மரபு முறையினுலும் பாரம்பரியத்தினுலும்தான் உலகின் மதிப்பை பெற்றுள்ளது. இந்நிலையை அடைய இலங்கைக்கு எவ்வளவு காலம் எடுக்குமோ?

* *

யாழ்ப்பாணத்தில் பொது இடங்களில் பலர் குப்பைகளை கொட்டி விடுகிறுர்கள். தங்கள் இடங்களில் உள்ளவற்றை வெளியில் போட்டு விட்டால் போதும் என்ற நிலைப்பாடு பொது மக்கள் மத்தியில் சமூக உணர்வு இருப்பதாக தெரிவதில்லை. வீட்டில் உள்ளவர்கள் கூட தங்கள் குப்பைகளை– உடைந்த கண்ணுடிகள்– பழைய தகரங்கள் முதலியவற்றை சந்தியிலும் பாதை ஓரங்களிலும் கொட்டி விடுகின்றனர்.

அத்துடன் 'இங்கே குப்பை போடாதீர்கள்' என்ற வாசகம் உள்ள இடத்திலும் மலைபோல் குப்பையை குவிக்கின்றனர். இது எல்லோருக்கும் சுகாதாரக்கேடு விளைவிக்கும் என்பதை உணர்ந்து பொறுப்புடன் தவிர்த்துக் கொள்ளல் வேண்டும். அப்பொழுது தான் மழை காலங்களில் வெள்ளம் இலகுவாக வழிந்தோடும்.

* *

இரவல் கொடுப்பது வாங்குவதும் சங்கடமான விவகாரம் இரவல் வாங்கிய பொருளை உரிய காலத்தில் திரும்பக் கொடுக்க வேண்டும் என்ற உணர்வும் மரபும் நம்மிடம் மிகக்குறைவு. சில சமயங்களில் மறதியால் 'இரவல்' பொருள்களை மறந்து விடுவதும் உண்டு. அப்பொருள்கள் எவை என்பதை நாம் விபரிக்க வேண்டியதில்லை ஆனுல் பொது நூல் நிலையங்களில் இரவல் கொடுக்கும் பகுதியிலிருந்து புத்தகங்களை பெறுபவர்கள் உரிய காலங்களில் அதனை ஒப்படைத்தல் வேண்டும். அறிவித்தல் பெற்ற பின்னரும் புத்தகங்களை திருப்பி ஒப்படைக்காதிருப்பது நியாயமானதல்ல. ஒரு நகராட்சி மன்றம் எடுத்த புத்தகங்களை உரிய காலத்திற்குள் திருப்பி கொடாவிடில் வழக்கு தொடரப்போவதாக அறிவித்துள்ளது. இதற்கு நாம் இடமளிக்காது உணர்வுடனும் பொறுப்புடனும் நடந்து கொள்ளல் வேண்டும்

* * *

பல நோக்கு கூட்டுறவுச் சங்கங்கள் புதிய உப விதிகள் பற்றி கலந்துரையாடல் நடாத்துவதாக செய்தி வெளிவந்துள்ளது. இவற்றின் விபரங்கள் பற்றி பொது மக்கள் அறிந்து கொள்வதற்கு கூட்டுறவுத் திணைக்களம் நடவடிக்கைகள் மேற்கொண்டால் அவற்றினை அறியவும் கூட்டுறவாளர்களின் அபிப்பிராயத்தை பெறவும் உதவியாக இருக்கும்.

# தமிழருக்கு சுய நிர்ணய உரிமை: முதலில் குரல்கொடுத்தவர் ஜீ.ஜீ.

**தமிழ்த் தலைவர் ஜீ. ஜீ. பொன்னம்பலத்தின் 84ஆவது பிறந்த தினம் இன்றாகும்.**

தமிழ் பேசும் மக்களின் தனிப்பெருந் தலைவர் அமரர் ஜீ. ஜீ. பொன்னம்பலம் அவர்களின் பிறந்தநாள் என்றதுமே எமது உள்ளங்களில் எத்தனையோ நினைவலைகள் பொங்கி எழுகின்றன. சேர். பொன் இராமநாதன் அவர்களின் மறைவுக்குப்பின் அரசியல் வானில் ஒளி குன்று ஜோதியாக பிரகாசித்தவர் பெரியார் ஜீ. ஜீ. இவரின் அறிவாற்றலையும், தமிழ் அபிமானத்தையும், துடிப்பையும், இளமையிலேயே இனங்கண்ட மகாத்மா காந்திஜியின் வாழ்க்கை வரலாற்று நூலாசிரியர் ஒருவர் "இலங்கையின் சிறுபான்மை மக்களின் இரட்சகர்" என்று ஜீ. ஜீ. யைக் குறிப்பிட்டிருந்தது இங்கு நினைவிற் கொள்ளற்பாலது.

தமிழ் பேசும் மக்கள் இன்று வாழும் நெருக்கடியான காலகட்டத்தில் ஜீ. ஜீ. ஐயாவின் அரசியல் சித்தாந்தங்கள் எந்த அளவுக்குப் பொருத்தமானவை என்பதை அறிந்திருப்பது நன்று. இன்று நாம் சுய நிர்ணய உரிமை பற்றி அதிகமாகப் பேசுகின்றேம். இது பற்றி முதன் முதலில் குரலெழுப்பியவர் மேதை ஜீ. ஜீ. அவர்களே!

தமிழ் பேசும் மக்களின் நியாயமான கோரிக்கைகளை அங்கீகரிக்காத பட்சத்தில் அவர்கள் தமது பிறப்புரிமையும் மறுக்கப்பட முடியாததுமான சுயநிர்ணய உரிமையை பயன்படுத்த வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படும் என்று 40 ஆண்டுகளுக்கு முன்னரே ஆங்கிலேய ஆட்சியாளருக்கு இடித்துரைத்த பெருமை திரு. ஜீ. ஜீ. பொன்னம்பலம் அவர்களையே சாரும்.

ஒற்றையாட்சியின் கீழ் தமிழ் பேசும் மக்கள் தன்மானத்துடனும், சமத்துவத்துடனும் நாட்டின் மூலை முடுக்குகளெங்கும் வாழமுடியாத நிலை ஏற்பட்டால் நாடு பிரிவுபடுவதை தவிர்க்க முடியாது என்று தீர்க்கதரிசனத்துடன் பெரியார் செ. சுந்தரலிங்கம் ஐயாவுடன் சேர்ந்து நாடாளுமன்றத்தில் முதன்முறையாக ஒரு பிரேரணையைக் கொண்டு வந்தவரும் ஜீ. ஜீ. அவர்களே. அப்போது வழமைபோல் தமிழ் மக்களில் ஒரு சாரார் அதனை எதிர்த்தார்கள். ஆனுல் காலப் போக்கில் அதனை அவர்களும் ஏற்றுர்கள்.

**அஞ்சாமை**

ஜீ. ஜீ. ஐயாவிடம் ஒரு தனிக்குணம் இருந்தது. அதுதான் அவரது அஞ்சாமை. தனக்குச் சரி எனத் தோன்றுவதை எதிர்ப்பையும் பொருட்படுத்தாது சாதிப்பார். 1949 ஆம் ஆண்டு அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் பிளவுபட்டதைத் தொடர்ந்து பிரிந்தவர்கள் புதுக் கட்சியை ஆரம்பித்து அதனை சபாநாயகர் அங்கீகரித்து அதன் தலைவர்களுக்கு எதிர்க்கட்சி முன்வரிசையில் ஆசனங்கள் கொடுக்கப்படல் வேண்டுமெனக் கேட்டிருந்தனர். அரசாங்கம் அதனை ஆதரிக்கவில்லை. ஆனுல் திரு. ஜீ. ஜீ. யோ அந்த வேண்டுகோளை ஆதரித்துப் பேசி கோரிக்கைக்கு அரசாங்கத்தை இணங்கவைத்தார்.

அன்னுர் அமைச்சராக இருந்த பொழுது இவரின் கைத்தொழில் கொள்கைகளுக்கு அமைச்சரவையில் பெரும் எதிர்ப்பு இருந்தது. ஆனுல் அந்த எதிர்ப்புகளை எல்லாம் வென்று தன் திட்டங்களை நிறைவேற்றியது அவரது பகைவர்களையே வியக்க வைத்தது. "யங் சோஷலிஸ்ட்" என்ற சஞ்சிகையில் பேராசிரியர் வில்சன் இது பற்றி ஒரு முறை குறிப்பிட்டிருந்ததும் இங்கு நினைவு கூரத் தக்கது.

அஹிம்சை, சத்தியாக்கிரகம்பற்றி ஜீ.ஜீ.அவர்களின் இல்லத்தில் நாம் அடிக்கடி உரையாடி வருவது வழக்கம். ஒருநாள் எங்களைப் பார்த்து தனக்கே உரிதான சிரிப்புடன் "குளு மாட்டுக்கு முன்னுல் சிவபூஜையா?" என்று ஒரு போடு போட்டார். அதிலிருந்து அவரது உள்ளக்கிடக்கை என்ன என்பது எம்மால்

(7-ஆம் பக்கம் பார்க்க)

- சு. இராஜ பரமசிவம் -


## விற்பனைக்கு

இறைச்சிக்கான கோழிகள், மொத்தமாக விற்பனைக்குண்டு. நல்ல இன மாங்கன்றுகள், பலாக் கன்றுகள் விற்பனைக்குண்டு. உடன்தொடர்பு கொள்ளவும், இளைஞர் விவசாயப் பண்ணை, [பழைய விமாகி பாம்], கோப்பாய்.


# தமிழ் மரபு பேணுவதில் அக்கறை காட்டியவர்

இற்றைக்கு 85 ஆண்டுகட்கு முன்னர் 1901–ஆம் ஆண்டு நவம்பர் மாதம் எட்டாம் திகதி ஈழமண்ணில் உதித்த அரசியல் வாதி ஜீ. ஜீ. பொன்னம்பலத்தின் சேவை சர்ச்சைக்குரிய விடயமாகவே இன்றும் இருக்கிறது.

அவருடைய பேச்சுவன்மையையும் நீதிமன்றில் வழக்கு நடாத்தும் திறமையையும் புகழ்ந்து பேசாதார் இல்லை. ஆனுல் அரசியலில் அவர் ஆற்றிய சாதனைகள். கையாண்ட கொள்கைகள்.கடைப்பிடித்தஇலட்சியங்கள் நியமங்களைப் பற்றி சிலர் மெச்சுகிறுர்கள்; சிலர் தூற்றுகிறுர்கள். ஆனுல் அவருடைய பண்பாட்டையும் சீரிய மனிதத் தன்மைகளைப் பற்றியும் பலர் அறிய மாட்டார். ஒரு நிகழ்ச்சியை இங்கு எடுத்துரைக்கலாம் என நினைக்கிறேன்.

1969-ஆம் ஆண்டு [illegible] கிரஸ் மகாநாடு நடந்தது. இரண்டாம்நாள் காலை மண்டபத்தில் பொதுக்கூட்டம் மாலை மைதானத்தில் பகிரங்கக் கூட்டம். அன்று மாநாட்டுக்கு வந்தவர்கள் அனைவருக்கும் விநாயக முதலியார் வீதியில் ஆதாரவாளர் ஒருவர் வீட்டில் மதிய போசனம் ஒழுங்கு செய்யப்பட்டிருந்தது. நான் முதற்பந்தியிலேயே உணவுஅருந்திவிட்டேன்.

சுமார் அரை மணித்தியாலம் கழித்துத் திரு. பொன்னம்பலமும் தேர்தலில் வேட்பாளராக நின்றசிலரும் வேறு சில இளைஞர்களுமாக போசனத்திற்கு ஒருங்கே வந்தனர். திரு. பொன்னம்பலம் என்னை "வா சாப்பாட்டுக்கு" என்று அழைத்தார். நான் ஏற்கனவே உணவு உண்டு விட்டேன் என்றேன். நகைப்பாக ஒரு வார்த்தை கூறி விட்டு மேசையிலே அருகே வந்திருக்கும்படி கூறினுர்.

(7-ஆம் பக்கம் பார்க்க)

சோமசுந்தரம் வன்னியசிங்கம்


## முதன் முறையாக யாழ்நகரில்!

இலங்கையிலே மிகப்பெரிய கோழிப் பண்ணையில் விஞ்ஞான முறைப்படி. மிருக வைத்தியர்களின் ஆலோசனைக்கிணங்க வளர்க்கப்பட்டு. இஸ்லாமிய மதக்கோட்பாடுகளுக்கமைய (HALAL–ஹலால்) சுகாதார முறைப்படி தயார் படுத்தப்பட்ட சுவைமிக்க **கோழி இறைச்சி!**

**"BAIRAHA FARM BROILERS"**

((B)பைரா (F)பாம் புறெய்லர் கோழிஇறைச்சி)

**1kg – 62-50**

குறிப்பு:

* பொருட்கள் கொழும்பிலிருந்து குளிரூட்டப்பட்ட வாகனத்தில் (FREEZER TRUCK) தருவிக்கப்பட்டு, இங்கு குளிரூட்டிய அறையில் (COLD ROOM) சேமித்து வைக்கப்பட்டுள்ளது.

—எம்மிடம் பொருட்களைக் கொள்வனவு செய்யும் வாடிக்கையாளர்களுக்கும், வியாபாரிகளுக்கும் பொருட்களின் தரம், சுவை என்பன உத்தரவாதப்படுத்தப்பட்டுள்ளது என்பதை அறியத்தருகிறேம்,

* மொத்தமாகவும் சில்லறையாகவும் எப்பொழுதும் பெற்றுக் கொள்ளலாம். வியாபாரிகளுக்கு விசேட கழிவுண்டு.

வடமாகாண ஏக விநியோகஸ்தர்:-

**The Medical Hall** மெடிக்கல் ஹோல்

No. 224, Hospital Road, JAFFNA. Phone: 22575

இல. 224, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி: 22575



## றெருசோ ஷிப்ஸ் TERRAZZO CHIPS

IMPORTED

* கலர் பவுடர் (எல்லா வர்ணங்கள்) (GERMAN AND HOLLAND)
* அலுமினியம் தகடுகள் (18g x 16g)
* வெள்ளைச் சீமெந்து
* காபரண்டம் கற்கள் (FLOOR CUTTING STONE)
* TERRAZZO மற்றும் தரைக்குத் தேவையான சகல பொருட்களும் கிடைக்கும்.

Rs. 6/75-க்கு மேல்

**றம்சன்ஸ்**

443, பழைய சோனகத் தெரு,
கொழும்பு-12
தொலைபேசி: 34411 - 31511



## GLORIA TRAVELS

● கனடா ● டென்மார்க்
● பிரான்ஸ் ● ஜேர்மனி

ஆகிய நாடுகளுக்கு பிரயாண ஒழுங்குகள் செய்து தருவதுடன்

எமது பிரயாணமுகவர் அழைத்துச் செல்வர்.

**டென்மார்க், கனடா செல்வதற்கு**

உடனடி பிரயாண ஒழுங்குகள் செய்து தரப்படும்.

மற்றும்

பாஸ்போட், பொண்ட் (BOND), விசா, ரிக்கற் ஆகியனவும் செய்து கொடுக்கப்படும்.

**GLORIA TRAVELS**

சின்னத்தம்பி அவெனியூ,
மானிப்பாய்.


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# இனப்பிரச்சினைக்கு விரைவான அரசியல் தீர்வு காணவேண்டும்

## இல்லையேல் மலைநாட்டிலும் விசுவரூபம் தான்

## வண பிதா கஸ்பேர்ஸ் சொல்கிறார்

இனப் பிரச்சினைக்கு அரசு சமாதானமான முறையில் அரசியல் தீர்வு காணவேண்டும் அதனைக் காலந் தாழ்த்தாது செய்ய வேண்டும் அவ்வாறு செய்யத்தவறின் இப்பிரச்சினை மலைநாட்டிலும் விசுவரூபம் எடுக்கும்.

கண்டியில் இருந்து யாழ்ப்பாணத்துக்கு வருகை தந்த வண பிதா போல் கஸ்பேர்ஸ் இவ்வாறு சஞ்சீவிக்கு அளித்த விசேட பேட்டியில் குறிப்பிட்டார்.

இவர் கண்டி சத்தியோதய நிலையத்தைக் காலஞ்சென்ற வண. பிதா ஆயர் லியோ நாணயக்காரவுடன் இணைந்து ஆரம்பித்தவர். மலைநாட்டுத் தமிழர் மத்தியில் நீண்ட காலமாகச் சேவையாற்றி வருபவர் ஒக்ஸ்வோர்ட் பல்கலைக்கழகப் பட்டதாரி.

யாம் சென் ஜோன்ஸ் கல்லூரி மண்டபத்தில் நடந்த கூட்ட நிகழ்ச்சி முடிந்ததும் 'சஞ்சீவி' வாசகர்களுக்கு அவரது கருத்துக்களைத் தெரிவிக்குமாறு வேண்டினேன்.

'கூட்ட அமைப்பாளர்கள் நாம் பத்திரிகையாளர்களுக்குப் பேட்டி அளிக்கக் கூடாது என்று கருதுகிறார்கள் எனவே பேட்டி முடிவில் உங்கள் ஆக்கத்தை கூட்ட அமைப்பாளருக்குக் காட்டிவிட்டுப் பிரசுரியுங்கள்' — என்று வண பிதா கஸ்பேர்ஸ் அப்போது சொன்னார்

Respectfully. I must state that norms of journalisim do not permit me to show my write up to anybody other than my Editor.

—பத்திரிகைத் துறையின் ஆரோக்கியமான மரபுகள் அவ்வாறு எமது ஆக்கத்தை எமது ஆசிரியரைத் தவிர வேறு யாருக்கும் காட்ட அனுமதிக்க மாட்டாதென்று நான் உறுதியுடன் அடக்கமாகக் கூறினேன்.

இதைக் கேட்டு அதிர்ந்து போன பிதா கஸ்பேர்ஸ் —

'உங்கள் நிலைப்பாட்டைப் புரிந்து கொள்கிறேன். பத்திரிகையாளர்களுக்கு இல்லை என்று சொல்வது கஷ்டமான காரியம்' என்று கூறினார்.

பின்னர் கொழும்புத் துறை செமினரியில் அவர் சஞ்சீவிக்கென விசேட பேட்டி அளித்தார்.

மலைநாடு மிகவும் ரம்மியமான இயற்கை அமைப்பினை உடையது.

பூத்துக் குலுங்கும் கொடிகளையும், வானுயர்ந்த மரங்களையும் குன்றுகளையும் பாய்ந்து வரும் அருவிகளையும் கண்டு நாம் மனதைப் பறிகொடுப்போம்.

ஆனால் வாழ்க்கைப் போராட்டம் வறுமையின் கோரப்பிடி காரணமாக மலைநாட்டுத் தமிழ்த் தோட்டத் தொழிலாளர்கள் இயற்கை அழகில் தம்மைப் பறிகொடுப்பதில்லை.

மலையக இயற்கை அழகில் திளைக்கும்போது தோட்டத் தொழிலாளர் வாழும் 'லயன்களை'த் திரும்பிப் பார்ப்போமானால் நாம் எமது மகிழ்ச்சியை ஏன் மன நிம்மதியை இழந்து விடுவோம் சதா துன்பத்தில் உழல்பவர்கள் அவர்கள்.

வெள்ளம், மண்சரிவு போன்றவை மலைநாட்டில் ஏற்பட்டால் ஏழ்மை காரணமாக மிகவும் பாதிப்பு அடைபவர்கள் தோட்டத் தொழிலாளர்கள்

நிலச் சீர்திருத்தம் என்ற திட்டத்தின் கீழ் தனியார் தோட்டங்கள் 1972 இலும், கம்பனி நிர்வாக தேயிலைத் தோட்டங்கள் 1975 இலும் அரசுடைமையாகின

### பாதித்தது

ஏகாதிபத்தியத்துக்கு எதிரான சோஷலிச நடவடிக்கையாக இத்திட்டம் வரவேற்கப்பட்ட போதிலும் நடைமுறையில் இது தமிழ் தோட்டத் தொழிலாளர்களைப் பெரிதும் பாதித்தது. பெரும்பாலானோர் தோட்டங்களை விட்டு வெளியேற வேண்டிய நிலை ஏற்பட்டது.

இதனைத் தொடர்ந்து அரசியல், தொழிற்சங்க

## பேட்டி: வி. வரதசுந்தரம்

சார்பற்ற ரீதியில் இப் பிரச்சினையை அணுக 22 இயக்கங்கள் கண்டியில் கூடி 'தோட்டப் பிராந்திய ஒருங்கிணைப்பு செயலகம்'' என்ற அமைப்பினை உருவாக்கின.


தோட்டத் தொழிலாளர் கண்டிய விவசாயிகள் பிரச்சினைகளைப் புரிந்துணர்வுடன் அணுகுவது இவ்வமைப்பின் நிலைப்பாடு ஆகும்.

### 1977 இல்

1977 இல் ஏற்பட்ட இனக் கலவரத்தில் தமிழர் என்ற ஒரே காரணத்துக்காக தோட்டத் தொழிலாளர்கள் பெரும் அளவில்] தாக்கப்பட்டனர் அவர்கள் உடைமைகள் (ஒரு சில பெட்டிகளாக இருப்பினும்) நாசமாக்கப்பட்டன அந்த நேரத்தில் இனப்பிரச்சினை பற்றி அவர்களுக்கு எதுவுமே தெரியாது.

### இருண்ட காலம்

தோட்டத் தொழிலாளர்களைப் பொறுத்த அளவில் 1820 — 80 காலப்பகுதி மிகவும் இருண்ட காலம் 1820 இல் இவர்கள் தென்னிந்தியாவில் இருந்து தெருக்



கள் அமைக்கவும் கோப்பித் தோட்டங்கள் உருவாக்கவும் கொண்டு வரப்பட்டனர்

ஆபிரிக்க நீக்ரோக்கள் அமெரிக்காவுக்கு அடிமை வியாபாரத்துக்கு கூட்டிச் சென்ற வரலாறு எனக்கு ஞாபகத்துக்கு வருகிறது. அவ்வாறு கஷ்டப்பட்டவர்கள் இவர்களின் மூதாதையர்கள்.

1880 — 1948 அவர்களுக்கு இருண்ட காலம் இக்கால கட்டத்தில் அவர்கள் வேதனம் மிகவும் குறைவு. ஆண்களுக்கு ஒரு நாளைக்கு 33 சதமும் பெண்களுக்கு 22 சதமும் வேதனம் வழங்கப்பட்டது படிப்பு சுகாதார, குடியிருப்பு வசதிகள் மிகவும் மோசம்

### நாடற்றநிலை யுகம்

1948 - 1969 ஆண்டு காலப்பகுதி நாடற்ற நிலையை அவர்களுக்கு ஏற்படுத்தியது 1948இல் உருவான இரண்டு சட்டங்கள் அவர்களின் குடியுரிமையைப் பறித்தன. 1949 ம் ஆண்டுச் சட்டம் அவர்களின் வாக்குரிமையைப் பறித்தது.

1947 ஆம் ஆண்டுத் தேர்தலில் ஏழு ஆசனங்களில் ஆறு ஆசனங்களை தோட்டத் தொழிலாளர்கள் வென்றமையும். மலைநாட்டில் ஏனைய 20 தேர்தல் தொகுதிகளில், இவர்கள் ஐக்கிய தேசியக் கட்சியைத் தோற்கடிக்க உதவியமையும், வாக்குரிமை பறிக்க மறைமுகமான காரணங்கள் ஆகும்

இவர்களின் வாக்குரிமை பறிக்கப்பட்டதை சிங்கள முற்போக்கு சக்திகள் எதிர்த்தன. 'தென்னுபிரிக்க அரசின் அதிபராக இருந்த கலாநிதி மலானின் நிழல் இலங்கையில் படியத் தொடங்கிவிட்டதா? என்று சொல்லின் அப்போது கர்ஜித்தார்

தோட்டத் தொழிலாளர் நலனை அடிப்படையாக வைத்துத் தமிழ் அரசுக்கட்சி ஆரம்பமான போதிலும் பின்னர் அவர்கள் நலன்பேண அக்கட்சி தவறிவிட்டது.

### நிலைபெயர்வு யுகம்

1964-81 காலப்பகுதி மலைநாட்டுத் தமிழரின் நிலைபெயர்வுக் காலமாக வர்ணிக்கப்படலாம். சிறிமா-சாஸ்திரி சிறிமா-இந்திரா ஒப்பந்தங்கள் அவர்களை இந்த நிலைக்குத் தள்ளின.

தொழிலாளர்களுக்கு இப்போது சம்பளம் அதிகரிக்கப்பட்டுள்ள போதிலும் அரசாங்கம் கொடுத்த வாக்குறுதிகள் இரண்டு இன்னும் சட்டமாகவில்லை.

தோட்டத் தொழிலாளர்களில் 50 சத வீதத்துக்கும் அதிகமானோர் பெண்கள். அவர்களுக்குச் சம சம்பளம் தருவதாகவும், மாதம் 26 நாட்கள் தொழிலாளர்களுக்கு வேலை வழங்குவதாகவும் வாக்குறுதி அளிக்கப்பட்டுள்ளது. அவை இன்னும் சட்டமாகவில்லை.

இனப்பிரச்சினையில் அவர்கள் பிரச்சினையும் இரண்டறக் கலந்திருக்கிறது.

—இவ்வாறு வணபிதா-கால்பேர்ஸ் தமது பேட்டியில் கூறினார்.

*

# பலவகை மதங்கள் உருவாகுவதற்கு மனிதனின் கற்பனைவளமே காரணமாகும்

கடவுளைப் பற்றிப் பலரும் பலவிதமாகக் கூறியிருக்கின்றார்கள். ஆனால் எவராயினும் அதுபற்றி தெளிவாகக் கூறியதாகத் தெரியவில்லை.

ஒவ்வொரு மதத்தவரும் தத்தமது கடவுளைக் (Personal gods) கொண்டுள்ளனர் அதாவது ஒவ்வொருவரும் கடவுளைப்பற்றித் தத்தம் சொந்தக் கருத்துக்களைக் கொண்டுள்ளனர். இப்படி மனிதன் தனது எண்ண விம்பங்களிலேயே கடவுளைப் படைக்கின்றான்.

பூதங்கள் மத்தியில் பலதரப்பட்ட விம்பங்கள் கடவுளாக வணங்கப்படுகின்றன.

கடவுளைப் பற்றிப் பலராலும் பல வேறுபட்ட கருத்துக்கள் வெளியிடப்படும் பட்சத்தில் அக்கருத்துக்கள் யாவையும் சரியானவையாக கொள்ள முடியாது. அனைத்தும் பிழையானவையாக இருக்கலாம். அப்படியில்லாவிட்டால் அவை அனைத்திலும் ஒன்றே சரியானதாக இருக்க முடியும்.

ஆன்மீக முதிர்வு பெறுதவர்கள் கடவுளைத் தமக்குரிய கடவுளாகவே (Personal God) கருதுகின்றனர்— வணங்குகின்றனர். அதனால்தான் கடவுளை மனித உருவங்களுடனும் தேவதைகளின் உருவங்களுடனும் இணைத்துப் பார்க்கின்றனர்.

ஆன்மீகத் துறையில் பழுத்த முதிர்வும் கூரிய நுண்ணறிவும் உடையவர்களோ கடவுளை மனித விம்பங்களோடும் வெறும் மனித கற்பனைகளோடும் சம்பந்தப்படுத்தி தமது பொன்னான காலத்தை வீணடிக்காமல் அதனைப் பிரபஞ்சத்தினுள் ஊடுருவிச் செல்லும் சக்தியாகக் காண்கின்றனர்.

### அறிவும் நுண்ணறிவும்

அறிவானது (Knowle-dge) காலத்திற்கு உட்பட்டது முக்காலத்திற்கும் உட்பட்டது அறிவு நாம் அறிந்ததே எமது அறிவாகிறது. அறிவைக் கொண்டு நாம் கடவுளைப் பார்க்க முனைவது காலத்தினூடாகக் கடவுளைப்ப பார்க்க முனைவதற்குச் சமமாகும்

அறிவால் கடவுளைப் பார்க்க முனையும்போதே நாம் எமக்குரிய கடவுளைப் படைக்கின்றோம். அத்தகைய எமது கண்டுபிடிப்புக்களில் எல்லாம் எமது கருத்துக்களையும் கோட்பாடுகளையும் மிகவும் சாதுரியமாகப் புகுத்திவிடுகின்றோம்.

நுண்ணறிவானது (Intelligence) காலத்திற்கு உட்பட்டது அன்று. அறிவானது சுட்டிக்காட்டும் முள்ளாகச் (Pointer) செயற்பட நுண்ணறிவானது செயற்படுகின்றதேயன்றி அறிவைப்போல் நுண்ணறிவானது காலத்திற்கு

**சிந்தனை விருந்து**

உட்பட்டு செயற்படுவதில்லை.

நுண்ணறிவானது எம்முள் கூர்மை பெறப்பெற நாம் கடவுளைப்பற்றிய எமது கருத்தால், எம்மால் தோற்றுவிக்கப்பட்ட புறவிம்பங்களை நிராகரித்துவிட்டு கடவுளை எமது அகங்களுக்குள் தேடுகின்றோம்.

புறத்தில் மட்டும் கடவுளைத் தேடினால் போதாதது என்று எமது நுண்ணறிவானது எமக்குப் புகட்டுகின்றது.

புறத்தில் கடவுளை தமது கருத்துக்களாலும் கோட்பாடுகளாலும் சிருஷ்டிப்பவர்களே தமது புறவாழ்வையும் புறத்தோற்றங்களையும் அழகுபடுத்துவதில் கூடிய சடுபாடுகளை காட்டுகின்றனர்

### பல மதங்கள் தோன்றியது எப்படி?

புறத்தில் தமக்குரிய கடவுளை (Personal Gods) பற்றி நிற்பதனால் தான் மதங்கள் பல தோன்றின. புறத்தில் தமக்குரிய கடவுள்களை பற்றி நிற்பதனால்தான் ஒவ்வொரு மதத்தவரும் தத்தமது மதம் சிறந்ததென வாதாடியும் மற்றவரது மதம் குறைபாடுடையதென்றும் இகழ்ந்தும், பிறரைத் தமது மதத்திற்கு மாற்ற எத்தனித்து வருகின்றார்கள்.

இவை பாவும் புற உணர்ச்சியினாலும் அறி

## கந்தையா நவரேந்திரன்

யாமையினாலும் வழி நடத்தப்படுபவர்களின் செயற்பாடுகளேயாகும்.

கடவுளை எல்லாவற்றிற்கும் மேலான சக்தி என உணர்பவர்களிடம் தமக்குரிய கடவுள் என்ற கருத்து இராது.

மனிதனது சிந்தனையால் உருவாக்கப்பட்டவையனைத்தும் காலத்திற்கு உட்பட்டவை. மனிதனது அறிவுக்கும் சிந்தனைக்கும், கற்பனைக்கும் அப்பாற்பட்ட கடவுளை, மனிதன் தனது காலத்திற்குட்பட்ட சிந்தனையால் உருவாக்கப்பட்ட அடையாளத்தால் கிரகிக்கவோ அளவிடவோ அடையாளம் காட்டவோ முனைவது அவனது அறியாமையின் உச்சக் கட்டத்தையே வெளிப்படுத்துகின்றது.

கடவுளைப் பற்றிய இயல்புகளை மனிதனே கற்பனை செய்வதனால் தான் ஒரே கடவுளை அதன் பல இயல்புகளிற்காக பல கோயில் வாசற்படிகளில் ஏறியிறங்குகின்றான். இந்த விம்பங்களையும் இயல்புகளையும் மனிதன் பண்டுதொட்டுப் பேணிப்போற்றிப் பாதுகாத்து வந்துள்ளான்.

### தப்பான கருத்து

முதலில் உண்மையை —கடவுளை வெறும் சமயமாகவும் கோட்பாடுகளாகவும், கொள்கைகளாகவும் கோட்பாட தப்பான கருத்துக்களை மனிதன் களையவேண்டும்.

உண்மையானது குறிப்பிட்ட ஸ்தாபனத்திற்கோ மதத்திற்கோ உரியதன்று.

நவீன விஞ்ஞானிகள் இந்தப் பிரபஞ்சத்தில் தனிப்பட்ட கடவுளிற்கு

**அக ஒளி !**

இடமேயில்லையெனக் காணத்தொடங்கி விட்டனர்

இந்தப் பிரபஞ்சத்திற்கான மூலம் எல்லையற்றது. பிரபஞ்சத்தையளவிடவியலாது.

படைத்தவன் எந்த ஓர் உருவத்திற்கும் அப்பாற்பட்டவனாகவே இருக்கவேண்டும்.

அப்படிப் படைத்தவனை சக்தியென்று நாம் அழைக்க விரும்பினால் அச்சக்தியானது எந்த ஓர் உருவத்திற்கும் உருவகத்திற்கும், எண்ண வரையறைகளிற்கும் அப்பாற்பட்ட அளவிடமுடியாத சக்தியாகவே இருக்கவேட்டும்

இதனையே நவீன விஞ்ஞானிகளும் காணுகின்றனர் ஆனால் அவர்கள் அதனை கடவுள் என்று அழைக்கமாட்டார்கள். வேறு பெயர்களைக் கொண்டு அழைப்பார்கள்.

### அறியாமை

பொருண்மை வாதிகளை (Materialists) நாம் குறைகூற முடியாது. ஏனெனில் அவர்களிற்கு முடிவான ''உண்மை'' தெரியாது. உண்மையைக் கண்டுபிடிக்காவிட்டால் மட்டுமே அவர்களைக் குறை கூறவேண்டும். ஆராய முற்படாவிட்டால் அவர்கள் உண்மையைக் காணமாட்டார்கள். அவர்கள் தம்மையும் ஏமாற்றித் தம்மை ஏமாற்றவும் வைக்கின்றார்கள்

அறியாமை (Ignorance) மன்னிக்கக்கூடிய தொன்றே. ஆனால் அறியாமையுடையவர்களாக இருக்க விரும்பும் அவர்களது மனத்திடத்தை — பிடிவாதத்தைத்தான் மன்னிக்கவியலாது

விஞ்ஞானிகள் ஏற்கனவே கண்டதுபோல திண்மப் பொருள்களையும் (Matters) சகல தனிப் பொருள்களையும் ஒரு தனிப்பொருளாக ஒரு தனிச்சக்தியாகப் பிரிக்கலாம். இந்த ஓர் ஆணிவேரிலிருந்தே அனைத்தும் வளர்ந்தன, படர்ந்தன. இந்த ஓர் ஆணிவேர் தான் சக்தியென்பதையும் கடவுளென்பதையும் விஞ்ஞானிகளும் ஏற்றுக்கொள்ள வேண்டும்.

இந்த அளவிடமுடியாத சக்தியைப் பரிசோதனைக் குழாயொன்றினுள் போட்டு ஆய்வு கூடத்தில் பரிசோதனை செய்யமுடியாது

எனவே விஞ்ஞானிகள் தங்களது ஆய்வு கூடத்திற்கு அப்பாலேயே கடவுளைப் பார்க்கவேண்டும்.

அவர்கள் உண்மையைத்தேடி அண்டவெளிக்குள் செல்ல வேண்டியதில்லை.

பதிலுக்கு அவர்கள் தத்தமது அகங்களுக்குள் ஊடுருவிச் செல்ல வண்டும் இந்த அகப்பயணம் அகற்றையற்ற காலத்திற்கு அடங்காத நுண்ணறிவு ஒன்றினால் மட்டுமே மேற்கொள்ளமுடியும்.

இவ்வகப் பயணமானது நல்லபடியாக நிறைவேறும் பட்சத்தில் விஞ்ஞானிகளும் உண்மையைக் காண்பர். தான் என்ற முனைப்பையுடைய எவராலும் இவ்வகப்பயணத்தை மேற்கொள்ளும்போது அறியாமை அகன்று உண்மை ஒளி தானாகத் துலங்கும்.

(தொடரும்)

# சந்திரா சுவாமி அதிசய மனிதர்; ராஜீவ் அவரைச் சந்திக்கவில்லை

திரு. ரொமேஷ்பண்டாரி, இந்தியாவின் பிரபல ராஜதந்திரி இலங்கைத் தமிழர் பிரச்சினையில் புதிய அணுகுமுறை ஒன்றைக் கடைப்பிடித்துத் தோல்வி கண்டவர்

ஊழல் பேர்வழி என்று வர்ணிக்கப்படும் சந்திரா சுவாமியுடனும் சர்வதேச ஆயுத விற்பனையாளரான சவூதி அரேபிய கோடீஸ்வரர் அட்னன் ஹாஷ்ஹொகியுடனும் நெருங்கிய தொடர்பு கொண்டு இருந்தார் ரொமேஷ் பண்டாரி என்று லண்டன் ஒப்சேர்வர் பத்திரிகை வெளியிட்டாளர் ரைனி ரோலண்ட்ஸ் கூறியிருந்தார்

இக் குற்றச்சாட்டுக்களுக்கு பதிலளிக்கும் வகையில் ரொமேஷ் பண்டாரி, 'இல்லஸ்ரேட்டட் வீக்லி' வார இதழுக்கு பேட்டி ஒன்று அளித்திருக்கிறார்

திரு ரொமேஷ் பண்டாரி கூறுகிறார்;

நான் சந்திரா சுவாமியின் சீடன் அல்லன் அவரை எனக்குத் தெரியும். அடிக்கடி சந்தித்து இருக்கிறேன் ஆத்மீக வழி காட்டியாக அவரை நான் சந்திக்கவில்லை. சுவாமியின் மாந்திரீகத்திலும் எனக்கு நம்பிக்கை இல்லை.

சந்திரா சுவாமி ஒரு சுவாரஸ்யமான மனிதர். உலகைச் சுற்றி வருகிறார் பெரும் மனிதர்களை சந்தித்து உள்ளார். சுவாராஸ்யமான தகவல்களை அவர் எனக்கு தெரிவித்துள்ளார்.

குரு - சீடர் உறவு அவருக்கும் எனக்கும் இடையில் இல்லை என் மீது அவர் செல்வாக்கு உபயோகிக்கவில்லை.

சுவாமியை நான் இந்தியாவிலும் வெளிநாடுகளிலும் சந்தித்துள்ளேன் அப்படி சந்தித்ததில் என்ன பிழை!

சந்திப்பதை இரசியமாக வைக்கும்படி நான் தெரிவித்ததாக சந்திரா சுவாமி கூறுவது என் கருத்தல்ல. அது அவர் கருத்து.

இவ்வாறு திரு. பண்

### பண்டாரி பதிற்பேட்டி

டாரி தமது பேட்டியில் தெரிவித்திருக்கிறார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

உபயோகமான பல தகவல்களை சுவாமி எனக்கு தந்து வந்திருக்கிறார். நிறையப்பேர் அவரைச் சந்தித்து வருகிறார்கள். சுவாமியின் அறிவு பற்றி நான் பேச விரும்பவில்லை.

### விழுந்து வணங்கவில்லை

நான் அவருக்குத் தகவல்கள் கொடுக்கவில்லை. ராஜதந்திரத்துறையில் சுவாமிக்கு அக்கறை இல்லை.

சவுதி கோடீஸ்வரர் அட்னன் ஹாஷ்ஹொகியுடன் தொடர்பு வைப்பதற்கு எனது பெயரை சுவாமி பயன்படுத்தவில்லை.

லண்டன் 'சர்ச்சில் [illegible]' இருந்த சுவாமியின் கால் [illegible] வணங்கியது என்ற கேள்விக்கு இடமில்லை.

எனது மகனின் திருமணம் பற்றி ரைனி ரோலண்ட்ஸ், அட்னன் ஹாஷ்ஹொகி ஆகியோருக்கு சொன்னேன் ஆனால் அவர்கள் தனி விமானம் அமர்த்திக் கொண்டு வருவார்கள் என்று நான் எதிர்பார்க்கவில்லை, அதுவும் அரை மணித்தியால வரவேற்பு நிகழ்ச்சிக்கு.

ரைனி ரோலண்ட்ஸை இரண்டு மூன்று முறை தான் சந்தித்தேன் ஏன் தனி விமானம் அமர்த்தி வந்தார் என்பதை ரோலண்ட்ஸிடம் தான் கேட்கவேண்டும்

[illegible] ஹொங் இந்தியாவில் முதலீடு செய்ய இருந்தார் என்பது பற்றி நேரடியாக ஒன்றைத் தெரிவிக்க விரும்புகிறேன்.

### அமைச்சரவை மட்டத்திலேயே முடிவு

வெளிநாட்டுச் செயலாளர் அல்லது அதிகாரியுடன் பேசியவுடன் முதலீடு செய்யும் சில அரசாங்கங்கள் போன்றதல்ல, இந்திய அரசு அமைச்சரவை மட்டத்தில்தான் இந்தியாவில் எல்லா முடிவுகளும் எடுக்கப்படுகிறது.

எனது மகன் தேனிலவை சவுதி கோடீஸ்வரர் ஹாஷ்ஹொகிக்குச் சொந்தமான உல்லாசப் படகு 'நபிலா'வில் கழிக்கவில்லை ஹொனுலுலுவில் தான் தேனிலவை எனது மகன் கழித்தார் ஆனால் புதுவருடக் கொண்டாட்டத்தை 'நபிலா' படகில் கழித்தார் அலங்காரப் படகு ஒன்றில் கொண்டாட்டத்தைக் கழிக்கும்படி கோரும் அழைப்பை இள வயதினர் வெறுப்பார்

(7 ஆம் பக்கம் பார்க்க)

# ஞான சஞ்சீவி

## அ- குமரகுரு

'ஓம்' என்னும் ஓங்கார பிரணவ மந்திரம் பரப்பிரம்மத்தைக் குறிக்கும் சின்னம் மூல முதலான நாதமும் பிந்துவும் (ஒலியும் ஒளியும்) பிறப்பித்த ஓசை தான் 'ஓம்'. தெய்வசக்திக்குச் சாட்சியாக பிரபஞ்சத்தில் முதன் முதலில் ஓங்காரமாக ஒலித்தது இந்த ஒலியே.

'ஆரம்பத்தில் ஓசை (வோட்) இருந்தது ஓசை கடவுளிடம் இருந்தது. ஓசையே கடவுள்...' (ஜோன் 1 1-3) என்று பைபிள் உரைக்கின்றது

பிரபஞ்சத்தில் உண்டாகும் அதிர்வுகளுக்கும் சக்திகளுக்கும் மூலமாயுள்ளது ஆதி காரணமான மெய்ப்பொருள். இம் மெய்ப் பொருளின் அதிர்வுகளுக்கான அம்சத்தையே 'சப்த பிரம்மம்' என்றும் 'நாத பிரம்மம்' என்றும் அதிலிருந்து எழும் அதிர்வுகளை நாதம் என்றும் வேதங்கள் கூறுகின்றன.

இந்துக்களின் 'ஓம்' இவ் தியர்களின் 'ஹம்', முஸ்லிம்களின் 'அமின்' கிறிஸ்தவர்களின் 'ஆமென்' எல்லாம் ஓரே மெய்ப்பொருளையே குறிக்கும்.

மாண்டூக்கியோபநிஷதம் சர்வமும் 'ஓம்' என்பதை வலியுறுத்துகிறது. எல்லா ஒலிகளுக்கும் 'ஓம்' என்பதே அடிப்படையானது என்று கூறுகிறது

சமஸ்கிருத மொழியின் அகர, உகர, மகர எழுத்துக்களை உள்ளடக்கியது 'ஓம்' என்னும் சொல். மனிதன் பூவுலகில் பிறந்தவுடன் முதன் முதலாக உச்சரிக்கும் 'அகர' ஒலி பிரணவத்திற்கு முதன்மையாயுள்ளது.

'உகர' ஒலி மனிதனின்

(7 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கடல் கடந்த கடிதம்

**பளிச்சிடுதே பண்பாடு!**

தம்பி,

பரபரப்பான, நாடகபாணியிலான பலசெய்திகளை எழுதியிருந்தாய்! பழைய இலக்கியங்களிலே பண்டைத் தமிழர் பண்பாடு பற்றிப் படித்துவிட்டு, இப்படியும் நடந்திருக்குமா, நம்ப முடியவில்லையே என்று நீ சலித்துக்கொண்டது நினைவுக்கு வருகின்றது.

''பழங்கணக்கு எதற்கு? பண்பாடா? தூக்கி எறி!'' என்று எல்லாம் அரைவேக்காடுகள் ஏளனம் பேசிய காலமுமிருந்தது. ஆனால் இன்று நடக்கும் சில சம்பவங்கள் ''தமிழன் என்றோர் இனமுண்டு, தனியே அவனுக்கோர் குணமுண்டு!'' என்ற பாடலை நிரூபிப்பது உனக்குத் தெரிகிறதா?

''பேராண்மை என்பது தறுகண்; ஒன்று உற்றக்கால்
ஊராண்மை மற்றதன் எஃகு''
— குறள் 773

(ஊராண்மை – உபகாரியாகும் தன்மை).

இக்குறளுக்கு டாக்டர் மு. வ. தந்த விளக்கம் இதோ!

பகைவரை அஞ்சாமல் தாக்கி அடக்கும் ஆற்றல் பெரிய ஆண்மை என்று சொல்வார்கள். ஆனால் அதே பகைவர்க்குத் துன்பம் வந்தபோது இரக்கம் கொண்டு உதவி செய்வதே அந்த ஆண்மைக்குச் சிறப்புச் செய்வதாகும். பகைவரை அழிப்பதே நோக்கம் அன்று; அவர்களுடைய தீமையை அடக்கி ஒழித்தால் போதும்!

அடம்பனில் சண்டது போராண்மை; சிறைபிடித்தவர்கட்கு சிகிச்சை அளித்தது, சடலங்கள் ஒப்படைத்தது ஊராண்மை அல்லவா?

அன்புடன்
– சிவா –

# சரித்திர நாவலை முதலில் எழுதியவர் கல்கி அல்லர்; வெங்கடாசலம் தான்

சஞ்சீவி 11-10-86 இதழில் சிவசங்கரி எழுதிய 'தமிழ் நாவல் இலக்கிய முன்னோடியாக விளங்கிய கல்கி' என்ற தலைப்பிலான கட்டுரையைப் படித்தேன்.

அக்கட்டுரையின் 3வது பந்தியில் 'சமூக நாவல்கள் மட்டுமல்லாது முதன் முதலில் மிகச் சிறப்பாகச் சரித்திர நாவல்களை எழுதி அவற்றைப் படிக்கும் ரசனையை மக்களிடையே உயர்த்திய பெருமையும் கல்கியையே சாரும்' என எழுதியுள்ளார்.

இதனைப் படிப்பவர்கள் சரித்திர நாவலை முதன் முதல் எழுதித் தமிழ் வாசகரிடையே செல்வாக்குப் பெற்றவர் கல்கி என்றுதான் முடிவு கட்ட வேண்டியுள்ளது.

ஆனந்த விகடன் வெளிவந்த காலத்தில் முதல் நாவலை வாசன் எழுதினார். அடுத்துப் பலரும் எழுதினார்கள். கல்கி ஆனந்த விகடனில் சேர்ந்தபோது எட்டிக்குப்போட்டிசிறு கதைபை எழுதியதிலிருந்து அநேக நாவல்களை எழுதினார். கல்கி அனேக சமூக சரித்திர நாவல்களை விகடனில் எழுதினார் என்பது உண்மைதான். ஆனால் முதன் முதல் கல்கி சரித்திர நாவலை எழுதினாரோ

### புத்தொளி

வென்றால் இல்லை என்று தான் தயங்காது சொல்ல வேண்டும்

கல்கியின் சரித்திர நாவல்களை ஆராய்ந்து பட்டம் பெற்றவர் திரு. வேத கோபாலகிருஷ்ணன் 'பூவண்ணன்' அவர்கள். கல்கியின் சரித்திர நாவல்பற்றி அவர் பின்வருமாறு எழுதியுள்ளார் 'கல்கிக்கு முன்னரும் சிறப்பான சரித்திர நாவல் வெளிவந்துள்ளது விகடன் நடத்திய நாவல் போட்டியில் 'மஞ்சுளா' என்ற சரித்திர நாவல் பரிசு பெற்றது இதனை எழுதியவர் திரு. வெங்கடாசலம் 1934ல் இச்சரித்திர நாவல் தொடராக விகடனில் வெளிவந்தது.

முதன் முதல் சரித்திர நாவல் வெளிவந்திருக்கலாம் ஆனால் மிகச் சிறப்பாக எழுதிய முதல்வர் கல்கிதான் என்று சிவசங்கரி நினைத்தாலும் மஞ்சுளா சரித்திர நாவல் பல நாவல்களில் தேர்ந்தெடுக்கப்பட்டு பரிசு பெற்று வெளிவந்தது என்பதனால் அதுவும் மிகச் சிறப்பான சரித்திர நாவல்தான் என்பதை எவரும் எளிதில் ஏற்றுக்கொள்வர்.

எனவே முதன் முதல் சரித்திர நாவலை எழுதியவர் கல்கி அல்லர் என்பதும் முதன் முதல் சிறப்பான சரித்திர நாவலை எழுதியவர், சரித்திர நாவலின் தாயகராக விளங்குபவர் திரு. வெங்கடாசலம் தான் என்பதும் தான் உண்மை. எனவே சிவசங்கரி வெளியிட்டிருக்கும் கருத்துத் தவறானது என்பது தெட்டத் தெளிவாகத் தெரிகின்றது. ★

### மழை

மழைத்துளி ஒவ்வொன்றும் முத்தாக நமக்குப் பயன்தருதல் வேண்டும் அது இறைவன் திருவருள் என்று மாணிக்கவாசகர் அருளியுள்ளார் அமுத அமிர்தம் என்று திருவள்ளுவர் கூறியுள்ளார் அது இரக்கத்தில் சின்னமானது என்பது இளங்கோவடிகளின் கருத்து.

பொன்னை, மணியை, முத்தை, வைரத்தைப் பாதுகாத்தாலும் அவை வயிற்றுக்குதவா. ஆனால் மழைநீரைப் பாதுகாத்தால் அது வயிற்றுக்குதவும், நாட்டை வளம் படுத்தும், அதனால் வாழ்வு நிலைக்கும்— வறுமை நீங்கும்.

மழை பெய்யுங்காலம் இதோ வந்துவிட்டது மழை பெய்யும்போது இன்னும் மழை வெள்ளத்தை வெளியே விடாது வளவிற்குள் தடுத்து நிறுத்துவோம் அது தேங்கி நின்றால் எங்கள் மண் வளஞ்சுரக்கும். வளவிலுள்ள கிணறுகளில் நீர் வற்றாது. மழையைப் போற்றி வளத்தைப் பெருக்குவோம் குளங்களை ஆழமாக்குவோம்.

(நன்றி: மில்க்வைற் செய்தி)

## இல்லாதொழிக்கும் பொல்லாத ஷெல்லடி

அந்தோபார் ஷெல்லடி; சிந்தும் சன கூட்டம்
சந்தா! துணையெனக் காலே டுப்—பிந்தியவர்
அந்தோ! நடுத்தெருவில் ஆயிரங்கால் மண்டபம்போல்
சந்துபொந் தெல்லாஞ் சரிந்து.

விண்வெளி யுத்தமோ! வேறுபுது யுத்தமோ!
கண்ணின் தெரியாத ஷெல்லடியும் — மண்மூட்டை
பின்னே தருமோர் பதிலடியும்; அப்பப்பா!
வானிடிந்து வீழ்ந்திடுமோ வேட்டு.

ஷெல்லடி வீழ்ந்திடும்; சித்தம் நிலை குலையும்;
புல்லு மெரியறும்; பூமிதான் — மெல்லதிரும்
கொல்லனுலை தனிநம்; கோவில்மணி தான்சிதறும்
சொல்லி லடங்காதிச் சூடு

சொல்வடித்த நூலெல்லாம் செல்லரித்த காலம்போய்
கல்வடித்த வீடுமனை நாடெல்லாம் இப்போது
இல்லா தொழிக்க இறுமாப்புக் கொண்டவொரு
பொல்லாத ஷெல்லடி தமிழ் மண்ணில்

-வி. மகாலிங்கம்

### குழந்தையின் பெயர் 'இன்று'

எங்களின் தப்பும் தவறுகளுக்காக, நாமே குற்றவாளிகள் ஆனால், குழந்தைகளிடம் நாம் பாராமுகமாக இருப்பதே மிகப் பாரதூரமான குற்றமாகும்

வாழ்க்கையின் நீர் ஊற்றை நாம் அசட்டை செய்கின்றோம். எமக்குத் தேவைப்படுவதற்காக நாம் காத்திருக்கலாம். ஆனால் குழந்தை அப்படியல்ல

இந்த நிமிஷமே அவர்களின் மிருதுவான எலும்புகள் உருவாகின்றன.

அவனது இரத்தம் உண்டாகின்றது: புலன்கள் விருத்தியடைகின்றன 'நாளை' என்று நாம் அவனைப் பார்த்துப் பதில் கூறமுடியாது ஏனெனில் அவனது பெயர் ''இன்று''

மூலம்: கேப்றியலா மின்றல்.
தமிழில்- மு. சி. சினித்தம்பி

# அந்நியன் படை பின்வாங்கி நகர்வு! மன்னன் படை மண்கோட்டை விரைவு!

- போர்க்களம் நுழைந்த சொக்கு மன்னனை அண்மிக்கிறது...

மன்னனின் கண்களில் நெருப்புக்கனல் பறக்கிறது மீசை துடிக்க அகன் விரிந்த மார்பு ஓர் கணம் விம்மிப்புடைக்கிறது சொக்கு வருவதைக் கண்டதும் போர்க்களத்தின் மேல்த்திசையில் நின்ற துணைத்தளபதி ரைபிடி வன்னியனும் வேகமாக வந்து தளபதியின் பக்கத்தில் நிற்கிறான்.

தன் வருகையையிட்டு ஊக்கம் கொண்ட மன்னன் கோபம் கொண்டு நிற்பதைக் கண்ட சொக்கு குதிரை மீதிருந்து குதித்து இறங்கி, சிரம் தாழ்த்தி மன்னனை தொழுது வாழ்த்தி, பணிந்து நின்று தணிந்த குரலில் சேதி செப்புகிறது

சொக்கு: வேந்தே! ஆறு பாய்க்கப்பல்களில் பறங்கிப்படை கொழும்புத்துறை வந்தடைந்துள்ளது...

மன்னன்: (கோபாவேசத்துடன்) வருகிறார்கள்... வருகிறார்கள் வந்து கொண்டேயிருக்கிறார்கள்... துரோகிகள் இதற்கு முடிவே இராது போலிருக்கிறது!

சொக்கு: வேந்தே... இன்று வந்திருப்பவர்கள் கடல் படையாம்...

மன்னன்: ஆ... கடற்கொள்ளைக்காரர்களின் மறுபெயர் கடற்படையா? கடற்கொள்ளையடித்து கடலிலே உயிர் குடிக்கும் கடல் பிசாசுகள்... கடற் கொள்ளையடிக்கவும் நாடு பிடிக்கவும் கடல் பலம் வேண்டுமென்றால் நாடு காக்க நாமும் இனி கடற்படையை உருவாக்க வேண்டியது

### கடலிலே கடற் பிசாசுகள் தரையிலே கொள்ளிவால் பேய்கள்

தான்...

தளபதி: மன்னா... நேர்முகம் வராமல் பின்புறமாக எம் புறமுதுகு பார்க்க வந்திருக்கிறார்...

மன்னன்: ஆமாம் ... பண்ணைத்துறையில் எம் படை நிற்பதைக் கண்டு கீழ்த்திசைக்கு சுக்கான் பிடித்து கொழும்புத் துறையில் இறங்கியிருக்கிறார்கள்...

து.த: சுக்கான் பிடித்து சுகமாக வந்திறங்குகிறார்கள். மன்னா...

மன்னன்: எம் சுயமரியாதையை சுண்டிப் பார்க்க வருகிறார்கள்... எம் தன்மானத்தை தட்டிப்பார்க்க வருகிறார்கள்... எம் மண்ணைப் பறித்து அதில் நம் கூழி பறிக்க வருகிறார்கள்... வந்து கொண்டிருக்கிறார்கள்!

தளபதி: வேந்தே அது பகல் கனவு...

து.த: மன்னா அது கோழிக்கனவு...

மன்னன்: ஆமாம் ... முதலில் மண்கோட்டை கட்டினார்கள் இப்போது

### பறங்கியரின் களிமண் கோட்டை மீது படைகொண்டு மோதிய நல்லூர்அரசு (பகுதி பத்து)

மனக்கோட்டை கட்டிக் கொண்டிருக்கிறார்கள். அந்த இரண்டுகோட்டைகளையும்...

தளபதி: உடைத் தெறிவோம் மன்னா!

து.த: தகர்த்து நொறுக்குவோம் வேந்தே!

மன்னன்: எம் அன்னை பூமியும் கொஞ்சு தமிழ் மொழியும் வாழ மிஞ்சி எழுவோம்!

தளபதி: அஞ்சியே அறியோம் வேந்தே?

து.த: விஞ்சிப் பாய்வோம் மன்னா!

மன்னன்: பலே! பலே! இப்போது அந்த கடல் படையை...

து.த: வேந்தே கடற்கரையில் அவர்களுக்கு சமாதி கட்டுவதே பொருந்தும்...

மன்னன்: சாலவும் பொருத்தம் தான்... மாசாலக்காரர்கள் இப்போது புறப்பட்டிருந்தால்?

சொக்கு: வேந்தே... அவர்கள் சற்று தாமதிக்கிறார்கள் கப்பலில் சமையல் நடப்பது போல் தெரிகிறது. காற்று சற்று உரமாக வீசுவதால் சமையல் சுணங்கலாம்... அல்லாவிட்டால் வேறு கப்பல்களும் படைகளும் வருமென எதிர்பார்த்

### ம. க. அ. அந்தனிசில்

திருக்கிறார்களோ தெரியாது...

மன்னன்: அப்படியானால்...

சொக்கு: பூசாரி வேடமிட்ட கழுகு பூவரசு நிழலில் குந்தியிருந்து வேவு பார்த்துக் கொண்டிருக்கிறது... நான் சேதி கொண்டு வந்தேன் மன்னா!

மன்னன்! ஓ... நேற்று தோற்றுடி தேணிய நிய சிலரை இவர்கள் கடலில் சந்திக்கவில்லைப் போலும்...

தளபதி: வேந்தே ... அது சரிதான்... அப்படி அவர்களைச் சந்தித்து சேதி அறிந்திருந்தால் இவர்கள் இவ்விடம் வருவதற்கு அவதிப்பட்டிருப்பார்கள்... அல்லாமலும் நீரோட்டம் வீச்சாக இருந்தால் அவர்கள் வேறு திசையால் தரங்கப்படிக்குப் போய்க் கொண்டிருக்கலாம்...

மன்னன்: ஆமாம் ... அப்படியெனில் இவர்கள் சமையல் முடித்து வயிறு புடைக்கத் தின்று விட்டுத்தான் நம்மிடம் பயறு அக்க வரவிருக்கிறார்கள்...... இப்போதே படையை அனுப்புவது நல்லது...

சொக்கு: துறையில் அடிக்கடி வெடி தீர்க்கிறார்கள் மன்னா!

மன்னன்: ஓ ... அதுவா... அது எச்சரிக்கை ஒலியல்ல... பயத்தின் அறிகுறி... பதற்றத்தின் எதிரொலி...

சொக்கு: மண்கோட்டையிலிருந்தும் வெடிச் சத்தம் கேட்பதாக கழுகு சொன்னது மன்னா...

மன்னன்: (ஆச்சரியத்துடன்) மண்கோட்டையிலிருந்து வெடிச் சத்தமா? வைத்தியங்களைத் தங்களைத் தாங்களே சுடுகிறார்களா? அத்தகையோருக்கு சித்த வைத்தியம்தான் செய்யவேண்டும்... நேற்று சத்தம் போடாமல் பாதிவழியில் புறமுதுகு காட்டி ஓடிச்சென்ற மீதிப் பறங்கியர் மண்கோட்டைக் வெடி... கொள்ளிவால் பேய்கள்!

தளபதி: வேந்தே... நம் கல்லிடைத்தேவன்...

மன்னன்: ஆம்... கல்லிடைத் தேவனும் படைகளும் பண்ணைத்துறையில் காவல் நிற்பதால் பறங்கியருக்கு உதறல் எடுக்கிறது. அதன் சிதறல் தான் அந்த வெடிகள்...

து.த: வேந்தே இப்

### மமதை தலைக்கேறிய பறங்கி சமதையாக போர் புரிவானா?

குள் நுழைந்த பின்னர் புற்றுக்குள் புகுந்து கொண்ட சர்ப்பம்போல் சீறுகிறார்கள்...

அது தான் அந்த வெடிச்சத்தம்... அவர்களுக்கு பல்லை மட்டும் பிடுங்கினால் போதாது... நாக்கையும் சேர்த்துப் பிடுங்கி விட்டால் சீற மாட்டார்கள்... சே... அவர்களுக்குத் தேவையான பொருள்கள் மண்கோட்டைக்குப் போவதையும், மண்கோட்டையிலிருந்து இந்த போர்க்களத்துக்கு அவர்களின் சகாக்களுக்கு உணவு வகை வருவதையும் தடை செய்யாமல் விட்டோம்...

மேலாக உதவிகளும் செய்தோம்... அது பாம்புக்கு பால் வார்த்த மாதிரி ஆகிவிட்டது... வெடிக்கிறார்களாம் படி ஆகுமென்று எண்ணியிருக்கமாட்டார்கள் ...

மன்னன்: இதுவரை பாதிதான் கற்றார்கள்... மீதி இனிமேல்தானே... சே... வியாபாரமென்று புகுந்து நம்தரை துறையெல்லாம் அறிந்து வைத்திருக்கிறார்கள் கடலிலே கடல்பிசாசுகள், தரையிலே கொள்ளிவால் பேய்கள்...

இராமாயணத்தில் இராவணன் புஷ்பவிமானத்தில் பறந்ததாகச் சொல்வது போல் இவர்களும் அப்படி ஏதேனும் கண்டுபிடித்துவிட்டால் வானத்திலும் வல்லூறு போல் வட்டமிட்டு நம் மைத்தாக்க முயல்வார்கள்... நாடு பிடிப்பதில் அவ்வளவு மோகம்...

தளபதி: வேந்தே அதுதான் அவர்களின

(6 ஆம் பக்கம் பார்க்க

## காலத்தால் அழியாத வரலாற்றுக் கடிதங்கள்

### வட இந்தியாவைவிஞ்சி நிற்கிறது தென் இந்தியா (இறுதிப் பகுதி)

பல நூற்றாண்டுகளாகத் தென் இந்தியா ஆரியர்களின் பரம்பரைச் செல்வத்தை வைத்துக் காப்பாற்ற முயற்சித்து வந்திருக்கிறது இதற்காக அவர்கள் நிறுவித்த சமுதாயமுறை இன்றுகூடச் சிறிதேனும் வளைந்து கொடாமலும் பிற கொள்கைகளுக்கு இடம் கொடாமலும் இருப்பது ஆச்சரியத்தை உண்டுபண்ணுகிறது.

நம்மைச் சுற்றிலும் சுவர்கள் எழுப்பிக் கொள்வது அபாயமான முறையாகும் வெளியிலிருந்து வரும் வேண்டாதவர்களையும், தீமைகளையும் தடுத்து அவைகள் நம்மைச் சில சமயங்களில் காப்பாற்றலாம்.

ஆனால் அவைகள் நம்மை அடிமைப்படுத்தி விடுகின்றன நமது சுதந்திரத்தை விலையாகக் கொடுத்துப் பத்திரத்தை வாங்க வேண்டியுள்ளது ஆனால் எல்லாவற்றிலும் அபாயமானவர்கள் உள்ளத்திலே எழும் சுவர்களாகும். ஆனால் பழைமையாக வரும் காரணத்தாலேயே தீமையை விலக்கவும், புதுமையாக உள்ள காரணத்தினாலேயே நன்மையை ஏற்றுக்கொள்ளவும் நாம் திறனில்லாதவர்கள் ஆகிவிடுகிறோம்

ஆயிரம் ஆண்டுகளுக்கு மேலாக இந்திய - ஆரிய அரசியல் துறையில் தென்னாட்டு ஜனப் பிரதிநிதி சபைகள் அரசர்களின் அதிகாரத்தை ஒரு கட்டுக்கு உட்படுத்தி வைத்திருந்தன என்று கிரேக்க யாத்திரிகரான மெகஸ்தனிஸ் கூறுகின்றார்.

மதம் வீழ்ச்சியடைய ஆரம்பித்ததும் அங்கிருந்து கல்வி, கேள்வி, கல்லார் மட்டுமன்றிக் கலை கட்டடம், கைத்தொழில் முதலியன வல்லாரும் தெற்கு நோக்கிச்சென்றார்கள்

தென் இந்தியாவுக்கும்

### நேருவிடம் இருந்து இந்திராவுக்கு

பர்களுடைய மதம், கலை, அரசியல் முதலான செல்வங்களையெல்லாம் தென் இந்தியா ஓம்பிப் பாதுகாத்து வந்திருக்கிறது இது மகத்தான சேவையாகும் பழைய இந்தியக் கலையின் மாதிரியைக் காண வேண்டுமானால் நாம் தென் இந்தியாவுக்குத்தான் செல்ல ஐரோப்பாவுக்கும் இடையே நல்ல வியாபாரம் நடந்துகொண்டிருந்தது முத்து, பொன், தந்தம்,அரிசி மிளகு முதலியனவைகளும்மயில்களும், குரங்குகளும்கூட பாபிலோன், எகிப்து, கிரீஸ் ஆகிய நாடுகளுக்கும் பிறகு ரோமாபுரிக்கும்

(6 ஆம் பக்கம் பார்க்க)

# பண்டிதமணி: வரலாறும் காலமும் ★

## மௌன தவமுகி கைலாசபதி

சைவத்தமிழ்ப் பாரம்பரியத்தில் தோன்றி வளர்ந்து பெருந்தன்மையோடு விவேக முறுக்கேறிய விற்பத்தி மான்களைத் தேடித் தமது சைவாசிரிய கலாசாலையில் பேராசிரியர்களாய் நியமித்து வந்த சௌவ இராசரத்தினம் அவர்களின் கழுகுக் கண்ணில் உருவிற் சிறிய கைலாசபதி அவர்களும் இலக்காயினார்.

எந்தநேரமும் சித்தத்தைச் சிவன்பால் வைத்திருந்த சிறிய உருவமைந்த பெரிய அதிமனிதன் கைலாசபதி அவர்கள் தமிழ்நாட்டின் வட பாலமைந்து சைவத்தமிழ்ப் பண்ணைகளிலொன்றாய் விளங்கிய அளவெட்டி என்னும் ஊரில் விரகத்தியார் பொன்னம்பலம் என்னும் பெரியார் பார்பதி என்னும் பெருமாட்டியாரை மணந்து பெற்ற மைந்தர்களுள் இளையவரான இவர், 1902ஆம் ஆண்டு ஆறும் மாதம் ...

வாதிரைத் தினத்தில் தோன்றியவர்

குருமார் அரவணைப்பு

இவர் குறுகுறு நடைநடந்து இட்டும் தொட்டும் விளையாடிய நாள்களிலே அயலில் வாழ்ந்த வேதாரணிய குருமார்கள் தங்கள் விக்கிரகம் போல விளங்கிய இவரை அள்ளி அணைத்துத் தங்கள் மடிமீது வைத்துப்பண்ணிசை பாடி மகிழ்ந்து வழக்கம் இந்த வகையில்விளையாட்டுக் கண்ட இவர் மூவாண்டுப் பருவத்திலேயே கையால் தாளம் போடப் பழகிக் கொண்டார் நாளடைவில் தலையசைத்துத் தேவாரப் பண்பழகிவரத் தலைப்பட்டார்

ஐயாண்டளவில் வித்தியாரம்பம் செய்யப் பெற்ற இவர், அயலில் உள்ள அருணோதயக் கல்லூரியிலும், ஞானோதய வித்தியாலயத்திலும் ஆரம்பக்கல்வி கற்றபின், வித்துவான் சிவானந்தையர் அவர்களின் தொடர்பு கிடைக்கவே இவர் செந்தமிழை வரன் முறையாகக் கற்றறிந்தார் பின்னர் ஆங்கிலம் கற்பதற்காக மல்லாகம் ஆங்கில வித்தியாலயத்தில் 1916 ஆம் ஆண்டில் சேர்ந்தார்.

அக்காலத்தில் மல்லாகத்தில் அதிபராயிருந்தவர் மயிலிட்டி சுவாமிநாதன் அவர்களாவர் உதவியாசிரியர்களுள் ஒருவர் ஞானி என வழங்கிய இரத்தினசபாபதி என்னும் பெரியார். இந்தப் பெரியார் அங்கே மாணவர்களுள் சேர்ந்த கைலாசபதி அவர்களைத் தேடி ஆட்கொண்டார். அவரின் தொடர்பால் இவர் அற்புத விவேகியாய்ப் படித்துவந்த காலத்தில் சைவப் பெரியார் புலோலி சிவபாதசுந்தரம் அவர்களின் சீரிய தொடர்பும் இவருக்குக் கிடைத்தது

இவர் ஐயாண்டுகள் ஆங்கிலம் படித்த காலத்தில் 1921 ஆம் ஆண்டில் லண்டன் மற்றிகுலேசன் பரீட்சைக்கு எழுதி முதற்பிரிவிற் சித்தி பெற்றார் இவரின் திறமைச் சித்தியைக் கேட்டறிந்த பாடசாலை முகாமையாளர் பலர் இவரைத் தங்கள் பாடசாலைகளில் ஆசிரியராக நியமிப்பதற்கு விரும்பினர் இவர் தாம் படித்த மல்லாகத்திலே சிலமாதங்கள் ஆசிரியராயிருந்த பின், அக்காலத்தில் பரமேஸ்வராக் கல்லூரியில் ஆரம்பிக்கப்பெற்ற இன்ரர்சயன்ஸ் வகுப்பிற் சேர்ந்து பட்டதாரியாவதற்குப் படித்தார். சேர் இராமநாதன் கேட்டுக்கொண்டதற்கு இணங்கிச் சில மாதங்கள் அங்கே ஆசிரியராயும் இருந்தார்

ஈரப்பலா விடுதி

இவரோடு இன்ரர் சயன்ஸ் வகுப்பிற் படித்த மட்டுவில் வேற்பிள்ளை நடராசா அவர்கள், விவேகிகளாய தாங்கள் தனிமையாக வாழ்ந்து படிப்பதற்குத் தனிவீடு தேடிக்கண்ட இடமே புகழ்பெற்ற ஈரப்பலா விடுதியாகும். ஈரப்பலா விடுதியில் கூடிய உச்ச விவேகிகள் கூட்டத்தில் சேர்ந்தும் சேராமல் உடனுறைந்து வாழ்ந்து படித்தவர் கைலாசபதி அவர்கள். இவரைப் பற்றி நடராசா அவர்கள் எழுதியவற்றை ஈண்டுக் குறிப்பிடுதல் பொருத்தமானதாகும்.

''பிரசித்தி பெற்ற ஈரப்பலா வளவிலே கூடினோம். நமக்கு நாமே வழிகாட்டிகள் பொழுது போவது தெரியாமற் போய்க்கொண்டிருந்தது. எங்கள் மத்தியில் புறநடையாக ஒருவர் மிகவும் மிருதுவானவர். உருவத்தால் சிறியவர் வந்து சேர்ந்தார். அவரும் நானும் பரமேஸ்வராக் கலாசாலையில் இன்ரர்சயன்ஸ் வகுப்பிற் படித்துவந்தோம். புதிதாய் வந்து சேர்ந்த

(6 ஆம் பக்கம் பார்க்க

● க. சி. குலரத்தினம் ●

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாடம் பயில்வோம் - பாடம் பயில்வோம் - பாடம் பயில்வோம்

## க. பொ. த. ப. (சாதாரணம்) மாதிரி வினாக்கள்

இன்னும் சில வாரங்களில் பரீட்சைக்குத் தோற்றவிருக்கும் க. பொ. த. ப. (சாதாரண தர) மாணவர்களின் பரீட்சைப் பளுவை இலகுவானதாக்குவதற்காக வாராவாரம் மாதிரி வினாவிடைகளை பிரசுரிக்க ஆரம்பிக்கின்றோம்.

ஒவ்வொரு பாடமும் அந்தந்தத் துறையில் ஆற்றல் பெற்றவர்கள் மூலம் மாணவர்களுக்கு உகந்த முறையில் தரப்படவுள்ளது.

அந்த வகையில் விஞ்ஞான மாதிரி வினாவிடைப் பகுதியை இன்று ஆரம்பிக்கின்றோம்.

ஒவ்வொரு வினாவிலும் 1, 2, 3, 4 என எண்ணிடப்பட்டுள்ள விடைகளுள் சரியானது அல்லது மிகப்பொருத்தமானது என நீர் கருதும் விடையைத் தெரிவு செய்க.

1. புதிய லக்ஸ் சவர்க்காரத்தின் திணிவு 85g எனின் அதன் நிறை பற்றிய சரியான அளவு
1) 8 5N 2) 850தனை 3) 0 85N 4) 0 85kg

2 ஓர் செப்புப் பாத்திரத்தில் மேக்குரசு நைத்திரேற்றை பிரபு ஊற்றி வைத்தான். மறுநாள் அவதானித்த போது நிறமற்ற கரைசல் நீலநிறமாக மாறியிருந்தது இதற்கான காரணம்:
1 செப்புப் பாத்திரமும் மேக்குரசு நைத்திரேற்றும் தாக்கமுற்றதால்
2) வளியிலுள்ள நீராவி மேக்குரசு நைத்திரேற்றுடன் தாக்கமுற்றதால்

### விஞ்ஞானம் பகுதி I


3) சூழல்வெப்பநிலைல் மேக்குரசு நைத்திரேற்று பிரிகை அடைந்தமையால்
4) மேக்குரசு நைத்திரேற்றுக் கரைசலிலுள்ள இரசத்தை செப்பு இடம் பெயர்த்துள்ளமையால்

3. ஒரே ராகம் பல இசைக் கருவிகளிலிருந்து ஒலிக்கப்படும்போது ஒரே சுரம் வெளிப்படுகின்றது எனினும் ஒவ்வொரு ஒலிக்கருவியின் ஒலியையும் வேறுபடுத்தக் கூடியதாக இருப்பதற்குக் காரணமான இயல்பு
1) சுருதி 2) பண்பு 3 உரப்பு 4) ஒலிக் கருவிகளின் வெவ்வேறு அதிர்வுகள்

4. சிறுநீரகத்தினுள் புன்குடிகளிலிருந்து போமனின் உறைக்குள் பாய்திரவப் பதார்த்தங்கள் வடிகட்டப்படுவதற்கான காரணம்
1) புவியீர்ப்பு விசை
2) நாடிக்குழாய் சுவர்களினால் ஏற்படுத்தும் மின்சக்தித்தன்மை
3) பிரசாரண அமுக்கம்
4) இதயம் குருதியில் ஏற்படுத்தும் அமுக்கம்

5 தாவரத்தின் நீர் கடத்தும் காழ்கலன் தொகுதி இலைகளின் படிந்ததும், வலிமையானதும் ஆகும் விலங்குகளில் இத்தொகுதியுடன் ஒப்பிடுவதில் மிகப் பொருத்தமான தொகுதி
1) நாடித்தொகுதி
2) நாளத் தொகுதி
3) வன்கூட்டுத் தொகுதி
4) நரம்புத்தொகுதி

6. மின்சுற்று வரிப்படத்திலிருந்து மின்னோட்டங்கள் a $a_1$ $a_2$ $a_3$ ஆகியவற்றினைத் தொடர்புபடுத்தலில் பொருத்தமானது.
1) $1/a = 1/a_1 + 1/a_2 + 1/a_3$
2) $a = a_3 + a_2 + a_1$
3) $a < a_3 + a_2 + a_1$
4) $a_3 + a_2 + a_1 < a$




7 மதுவக்கலம் ஒன்றினால் குளுக்கோசு உடைக்கப்படும்போது சூழல் வெப்பநிலை போதுமானது ஆனால் குளுக்கோசு வெளியில் உடைக்கப்பட உயர்ந்த வெப்பநிலை தேவைப்படுகிறது. இதற்கான காரணம்?
1) மதுவக்கலத்துடன் ஒட்சிசன் செல்வதால்
2) காற்றின்றிய சுவாசத்தாக்கத்தில் நொதியங்கள் பங்கு பெறுவதால்
3) மதுவக் கலங்களுள் காபனீரொட்சைட்டு காணப்படுவதால்
4) மதுவக் கலங்களுள் ஒட்சிசனும் நொதியங்களும் இருப்பதால்

8 $Na_2SO_4 + BaCl_2 \rightarrow BaSO_4 + 2NaCl$ ஒருலீட்டர் 1M. $Na_2SO_4$, ஒரு லீட்டர் 1M. $BaCl_2$ கரைசலுடன் தாக்கம் புரிந்த போது உண்டாகக் கூடிய சோடியங்குளோரைட்டுக்கரைசலின் செறிவு
1) 2m 2) 1m
3) 1மூல் 4) 2மூல்

9. மனிதனின் அகச்சூழலில் உள்ள பொருட்கள்
1) குருதி, கலங்கள், திணநீர்
2) திணநீர், இழையப் பாய்பொருள், திரவ

ச. ஸ்ரீரங்கநாதன்


இழையம்
3) இழையங்கள், குருதி, ஓமோன்கள்
4) நொதியங்கள், ஓமோன்கள். திணநீர்

10 ஒரு மூல் மக்னீசியம் என்பது
1) 24 மக்னீசிய அணுக்களைக் கொண்டுள்ளது.
2) 24 ஐதரசன் அணுக்களுக்குச் சமமானது
3) 24 கிராம் மகனீசியத்தின் நிறை
4) மேற்கூறிய யாவும் சரி

11. ஒரு கதவின் கைப்பிடியானது, கதவுப் பிணைச்சலுக்கு அண்மையிலமையாது அதற்கு மறு முனையில் இருப்பதன் காரணம்.
1) கதவுக்குப் பாதுகாப்பாக இருக்கும்.
2) சுழலும் கதவின் அச்சிலிருந்து தூரத்தில் விசை பிரயோகிக்கும் போது குறைந்த விசை போதும்
3) சுழலும் கதவின் அச்சிலிருந்து தூரத்தில் விசை பிரயோகிக்கும் போது கூடிய விசை தேவை
4) கதவின் அச்சிலிருந்து தூரத்தில் விசை பிரயோகிக்கும்போது கூடிய வேலை செய்யப்படும்.

12. பின்வரும்தொகுதிகளில் எது அமிலத்துடனும் காரத்துடனும் தாக்கமுற்று "பொப்" ஒலியுடன் எரியும் வாயு வைத்தரும.
1) நாகம் இரும்பு
2) மக்னீசியம் செம்பு
3) செம்பு, வெள்ளி
4) நாகம் அலுமினியம்.

13 மனிதனின் உணவுக் கால்வாயின் காரவூடகத்தில் தொழில் புரியும் நொதியங்களின் தொகுதி
1) பெப்சின் திருசின்
2) தயலின் அமிலேசு
3) ரெனின் காசுத்திரின்
4) இலிப்பேசு இரெனின்




14 முள்ளிப் புனலின் உள்ளே கரைசல் x முகவையினுள்ளே கரைசல் y உண்டு. x y சீனிக் கரைசல்களாகும். முள்ளிப்புனலிலுள்ள புயத்தின் திரவமட்டம் மாற்றமடையவில்லை பொருத்தமான விளக்கம் அல்லாதது.
(படத்தில்)
1) முள்ளிப்புனல் 2) கரைசல் x 3) கரைசல் y 4) செலோபேன் மென்சவ்வு.
(1) துணிக்கைகள் x இலிருந்து y இற்கும், y இலிருந்து x இற்கும் சம அளவில் பரவும்.
(2) x கரைசல், y கரைசல் சமசெறிவுடையன.
(3) கரைசல் x, கரைசல் y யின் துணிக்கைகள் இயக்கமற்றுள்ளன.
(4) கரைசல் x இன் பிரசாரண வேகமும் y இன் பிரசாரண வேகமும் சமனாகும்.

15. சிறந்த எரிபொருள் பற்றிய கூற்றுக்கள்:-
A) ஒட்சிசனுடன் தாக்கமடையும்போது உயர் வெப்பம் தரும்.
(B) எரிபொருள் எரியும் போது எவ்வித விளை பொருளும் எஞ்சியிருக்காது.
(C) எரிபொருள் திரவ நிலையிலேயே இருக்க வேண்டும்.
1) A, B, C சரி
2) A, B மட்டும் சரி
3) A மட்டும் சரி
4) B மட்டும் சரி

(6 ஆம் பக்கம் பார்க்க)

# பரம ஆண்டியும் பைங்கிளியும்

(முந்திய தொடர்ச்சி)

அரசன் முன்னைவிட விசேஷமாக சன்மானங்கள் கொடுத்து கூடுதல் மரியாதைக்காக ஒரு சால்வையும் பிரம்பு ஒன்றையும் கொடுத்தான். ஆண்டி மிகவும் மிதப்பாக வீடு நோக்கிப் புறப்பட்டான். அந்த ஆலமரத்துக்கிளி எதிர்ப்பட்டு 'கிக்கி கிக்கி' என்று குரல் கொடுத்தது.

அரசன் கொடுத்த சன்மானத்தில் அதற்கும் பங்கு கொடுக்க வேண்டுமே! என ஆண்டிக்கு ஆத்திரம் வந்தது.

'தினமும் விளாம்பழம் தின்கிற உனக்கு இன்று பிரப்பம்பழம் தருகிறன்' என்று சொல்லி கையிலிருந்த பிரம்பைக் கிளியின் மேல் வீசினான். கிளியின் காலில் பிரம்படிபட்டு இரத்தம் கசிந்தது. ஆண்டியை ஒருமுறை திரும்பிப்பார்த்து விட்டு கிளி பொந்தினுள் போய் விட்டது.

மேலும் ஒரு வருஷம் ஓடிற்று முந்திய வருஷத்தைப் போலவே இரண்டாம் வருஷமும் கிளி தெரிவித்தபடி எல்லாம் நடைபெற்றன. அரசனின் அந்தரங்க ஊழியனே எதிரி ராஜாவுடன் சேர்ந்து போருக்கு வழிவகுத்தான். பெரிய யுத்தம் நடந்தது. இரத்த ஆறே ஓடியது முடிவில் சுவர்ணபுரி அரசனே வெற்றி மாலை சூடினான்.

அப்பால் ஒருநாள் அரசனுக்கு ஒரு வினோதமான கனவு வந்தது மானும் புலியும் ஒரு துறையில் நீர் அருந்தும் காட்சி.

கண் விழித்த அரசன் உடனே அந்த ஆண்டியை வரவழைத்தான். ஆண்டி இப்போது ஆண்டிப் பரதேசியல்ல பெரும் தனக்காரன். வழி நெடுக அரசனின் கனவுக்கு என்ன பதில் சொல்வது என யோசித்தான்.

'நான் ஏன் அந்தக் கிளிக்குப் பிரம்பால் அடித்தேன்? இப்போது அதன் உதவி இல்லாமல் எப்படி அரசனிடம் கனவின் பலனைச் சொல்வேன் சரியாகச் சொல்லாவிட்டால் என்னைச் சிரச்சேதம் செய்தாலும் செய்வார் அரசர்' என்று யோசித்தபோது அவனுக்குத் தலை சுற்றியது. மயக்கமாக வந்தது. தள்ளாடி விழப்போகும் சமயம் எங்கிருந்தோ அந்தக் கிளி பறந்து வந்தது.

'கவலைப்படாதே ஆண்டி. இந்த வருஷம் நாட்டில் அமைதியும் சாந்தமும் நிலவும் புலியும் மானும் ஒரே துறையில் நீர் அருந்துவதால் மக்களிடையே அன்பும் ஆதரவும் பெருகும்' என்றது

ஆண்டி மனந்தெளிந்து அரசனிடம் வந்து வணங்கி கனவுக்குரிய பலனை எடுத்துரைத்தான். அரசனும் மனமகிழ்ந்து ஏராளமாகச் சன்மானம் வழங்கினான்.

திரும்பும் வழியில் ஆலமரத்தடிக்கு வந்து கிளியை அழைத்து, தான் செய்த தீங்குகளை எல்லாம் மறந்து சன்மானம் முழுவதையும் எடுத்துக் கொள்ளும்படி வேண்டினான்.

அதற்குக் கிளி 'இந்தப் பொன்னையும் மணியையும் எனக்கு எதற்கு! நீயே எடுத்துக்கொள். முன் நடந்தவற்றிற்கெல்லாம் நீயும் நானும் பொறுப்பல்ல. மூன்றும் வருஷம் அரசன் கனவில் நரி சிரித்தது

சூதும் வஞ்சனையுமான வருஷம் அது. நீ வாக்களித்தபடி சன்மானத்தைத் தராமல் வஞ்சித்தாய். இரண்டாம் வருஷம் வாளும் பூமாலையும் கனவில் தென்பட்டன. போர்க்கலவரம் மூண்டது. நீயும் பகைவனாகி என்னைப் பிரம்பாலடித்தாய்.

இந்த வருஷம் புலியும் மானும் ஒரு துறையில் நீர் அருந்துவது போலக் கனவு வந்திருக்கிறது. நீயும் நல்லெண்ணத்துடன் என் நட்புறவை நாடி வந்திருக்கிறாய். எல்லாமே காலத்தின் கோலம்.

யாரும் யாரையும் நோவதற்கில்லை போய் வா ஆண்டி. மற்றவர்களுக்கும் உதவி செய்து நீயும் சுகமாய் இரு' என்று கிளி அற்புதமாகப் பேசிவிட்டுப் பறந்து போயிற்று. ★

த. உமையாள்




## அனைத்து உயிரிலும் அன்பு கொள்வோம்

சிபியெனுஞ் சக்கர வர்த்தி எவன்
சிறப்பாய் ஆட்சி செய்தன னே
அபிமானங் கொண்டு இருந்தன னே
அனைத்து உயிர்களின் மீதும் அவன்!
விருந்தென எண்ணி ஓர் நாள் தான்
வண்ணப் புறவினை வலிமை மிகு
பருந்தது துரத்திடச் சிபி யரசன்
பாதத்தில் விழ்ந்ததே தஞ்சம் என!
அன்புடன் எடுத்து அணைத் திட்டான்
அச்சம் கொண்ட அப் புறவைத்
தன்னுடை உணவு என்றதுவே
துரத்தி வந்த பருந்தது தான்!
காத்திட வேண்டும் புறவினது
உயிரினை என்றான் சிபி மன்னன்
தீர்த்திட வேண்டும் என் பசியைத்
தந்திடு என்றது பருந்தும் உடன்!
புறவதன் பதிலாய் உந்தன து
தசையினைத் தருவாய்' என்றிடவும்
தராசில் புறவை வைத்துத் தன்
தசையினை வெட்டி வைத்தன னே!
புறவதன் பாரம் அதிகரித் துப்
போதல் கண்ட மன்னவ னே
தராசில் தானே ஏறிடவும்
சமமாய் ஆகி நின்ற தாமே!
அங்கொரு அற்புதம் நிகழ்ந்த தம்மா
பருந்தொடு புறவும் மறைந்திடவே
இந்திர னோடு அக்கினித் தேவனும்
தோன்றி வாழ்த்திச் சென்றனரே!
'அன்பினைக் கொண்டாய் மன்னவ னே
அனைத்து உயிர்களின் மீது அது போல்
அன்பினைக் கொண்டே எல்லோரும்
வாழ்க! வாழ்க!! வாழ்ந்திடுக!!!

—நாயன்மார்கட்டு ப மகேந்திரதாசன்—

## கேள்வி - பதில்

செல்வி. ஐஞெஸ் கபூர்

1. அம்மை தடுப்பூசியைக் கண்டு பிடித்தவர் யார்?
2. விசர் நாய்க்கடி மருந்தைக் கண்டு பிடித்தவர் யார்?
3. துச்சக்கர வண்டியைக் கண்டு பிடித்தவர் யார்?
4. தையல் மிசினைக் கண்டு பிடித்தவர் யார்?
5. ரிவால்வரைக் கண்டு பிடித்தவர் யார்?

1. எட்வேர்ட் ஜெனர் 2. லூயி பாஸ்ரர்
3 மக்மிலன் 4. ஹோவே 5. கோல்ட்

## மறப்பதும் மறவாததும்

அன்பு என்ற மூன்றெழுத்தை ஆயுள் முழுவதும் மறவாதே
ஆசை என்ற கொடும் நஞ்சை அறிந்ததும் உடனே மறந்துவிடு
அச்சம் என்ற நான்கெழுத்தை பெண்ணே நீயும் மறவாதே
ஆசை நிறைந்த பொருட்களைப் பார்த்ததும் உடனே மறந்துவிடு
கல்வி என்ற மூன்றெழுத்தை காலம் தோறும் மறவாதே
கண்ணியம் தப்பி வாழ்வோரைக் கண்டதும் உடனே மறந்துவிடு
கடவுள் என்ற நான்கெழுத்தை மானிலமே நீ மறவாதே
கள்ளம் செய்யும் மனிதரைக் கண்டதும் உடனே மறந்துவிடு.
பொறுமை என்ற மூன்றெழுத்தைப் பூமியிலே நீ மறவாதே
பொறாமை கொண்ட ஆளைவரையும் பூமியிலே நீ மறந்துவிடு
பொறுப்பு என்ற நான்கெழுத்தை எப்போதும் நீ மறவாதே
போலியான மனிதர்களைப் போற்றாதே நீ மறந்துவிடு

இ. முரளிதரன்

# பெண்களுக்கு ஏன் பொன்விலங்கு?

அண்மையில் ஒரு திருமணவிழாவில்; தமது உயர் கல்விக்காக மேலை நாடு சென்று வந்திருந்த ஒரு பெண்மணியைச் சந்திக்கும் வாய்ப்புக் கிட்டியது. பொருளாதாரத் துறையில் மேல்படிப்புக்காக அவர் வெளிநாடு சென்று திரும்பியிருந்தார்.

பொருளாதாரத்தில் உயர்கல்வி கற்ற அவரது உடம்பைப் பார்த்த போது எனக்கு திகைப்பாகவிருந்தது.

சங்கிலி, நெக்லஸ், காப்பு, மெட்டி, ஒட்டியாணம், உச்சிப்பிறை, மோதிரம், மூக்குத்தி, தோடு என்று தன் உடம்பை நகைகளாலேயே மறைத்திருந்தார்.

பொருளாதார நிபுணரான அவரது உடம்பிலே மட்டுமே சுமார் எண்பதாயிரம் ரூபாய் பெறுமதியான பணம் நகைகளாக முடங்கிக் கிடந்தன.

பெருமளவு நகைகளை அணியும் பழக்கம் பெரும்பாலும் எமது தமிழ்ப் பெண்களிடமே அதிகம் உள்ளது. இதனால் கோடிக்கணக்கான ரூபாய்கள் வெறுமனே முடங்கிக் கிடக்கிறது.

இன்றைய வட்டி வீதத்தில் ஒரு குறிப்பிட்ட பணத்தின் பெறுமதி இரண்டரை வருடங்களில் இருமடங்காகிறது. ஆனால் நகையின் பெறுமதி அதைவிடக் குறைவே.

அவசர, ஆபத்துதவிகளுக்காகப் பலர் நகைகளை வைத்திருப்பதுண்டு. திடீர் பணத்தேவைகளின் போது அவற்றை விற்றுப் பணத்தை ஈட்டிக்கொள்வர். அல்லது அடகு வைத்துப் பணம் பெறுவதும் உண்டு இதற்காக பெருந்தொகையான பணத்திற்கு நகைகள் வாங்குவது புத்திசாலித்தனம் அல்ல.

வீட்டிலோ, வீதியிலோ, பொது இடங்களிலோ எங்குமே இலகுவில் களவு போகக் கூடியதும், திருடனுக்குச் சுலபமாக திருடக்கூடியதும் நகைகளே.

அதிலும் எமது தமிழ் பெண்களின் தாலிக்கொடிகள் ஒவ்வொன்றும் ஒவ்வொரு துலாக்கொடிகள் போன்றவை.

ஆண்கள் பெரும்பாலும் நகைகளில் மோகம் கொள்வது குறைவு.

பெண்விடுதலை பற்றி பேசுவோர் பெண்கள் நகை அணிவது குறித்து வித்தியாசமான ஒரு விளக்கத்தை அளிக்கின்றார்கள்.

ஆண்கள் பெண்களைத் தங்களின் அழகுப் பொருளாகவும் அடிமைப் பொருளாகவும் பாவிப்பதற்காக நகைகளை பெண்களுக்கு அணிவித்தனர் என்கின்றனர் அவர்கள்.

மிருகங்களை அடக்கி வைப்பதற்காக சங்கிலிகளை கட்டுவது போல்; பெண்களை விலங்குகளாகப் பாவித்து பொன் விலங்குகள் பூட்டுவதாக கருதுகிறார்கள்.

யானைக்குக் காலிலே கட்டுவது போல் பெண்ணுக்கு கொலுசும், குரங்குக்கு இடுப்பிலே கட்டுவதுபோல் ஒட்டியாணமும், நாய்க்குக் கழுத்திலே கட்டுவது போல் சங்கிலியும், ஆட்டுக்குக் கொம்பிலே கட்டுவது போல் உச்சிப்பிறையும், மாட்டின் மூக்கணாங்கயிறுபோல் மூக்குத்தியும் மாட்டிப் பெண்களை அடக்கி வைத்துள்ளனர் என்கிறார்கள் சிலர்.

பழைய முறை எப்படியோ, இந்தக் காலத்தில் பெண்கள் அளவுக்கு அதிகமாக நகை அணிவதைக் குறைத்துக் கொள்வது பல விதங்களிலும் நன்மை தரும். ★

"ரட்ணு"




# அள்ளி அணைத்திடும் பிள்ளைச் செல்வம்

பயிராலே நிலம் அறிமுகமாவதைப்போலவும், பழத்தாலே மரம் அறிமுகமாவதைப் போலவும். நிழலாலே உருவம் அறிமுகமாவது போலவும், மொழியாலே ஒரு நடு உலகிற்கு அறிமுகமாவதும் உண்மை. அவ்வகை நாட்டினை அறிமுகப்படுத்தும் மொழியோ தன்மாட்டு மலர்ந்து மணம் வீசும் இலக்கியங்களிலே தன்னை அறிமுகம் செய்துகொள்ளும். அவ்வாறே மழலைகளும் அறிமுகமாகி பனையிலே மணம் பரப்புகின்றனர்.

காலந்தோறும், இடந்தோறும் கவிதைகளில் இடம்பெறும் கருப்பொருள்களில் ஒன்று மழலை. 'பெறுமவற்றுள் யாமறிவது இல்லை அறிவறிந்த மக்கட் பேறு அல்ல பிற' என்று கூறப்பட்டுள்ளது. எவ்வளவுதான் பணம் இருந்தாலும், பண்பிருந்தாலும் (ஒருத்திக்கு) குழந்தை இல்லையானால் அந்த வாழ்வு சிறக்காது. என்றும் துன்பம் நிறைந்த காடாகவே வாழ்க்கை தோன்றும்

வாழ்க்கைக்கு இன்பம் பயப்பதும் இல்லத்தை மகிழ வைக்கும் செல்வமும் மழலை ஒன்றே ஆகும். இல்லறவியலின் நல்லியல்பெல்லாம் உரைத்துணர்த்தும் வள்ளுவப் பெருந்தகை நன்கலமாகிய நன்மக்கட் பேற்றின் இனிமையை ஓவியமாகக் காட்டியுள்ளார்.

இ. சுலோசனா

'குழலினிது யாழினிது என்பர் தம் மக்கள் மழலைச் சொல் கேளாதவர்' எனும் குறட்கிண்ணத்திலே பெய்து தருகின்றார் நகை முத்தாகிய கிண்ணத்திலே இட்டு வழங்கிய உணவை பெற்றோர் ஊட்டினால் உண்ணாது. தன் சிறு கைகளினாலே குழப்பியும் கலக்கியும் அதனை அளைந்து பாழ்படுத்தப் படினும் பாழ்படுத்திய அப்பிஞ்சு விரலாடு கூழ் விலே கலந்துவிடுகின்ற முற்றாத இளம்பிறை மகவின் மனப்பிரிவும் இளமை பயக்கும் பெற்றோருக்கு வெறுப்பை எழச்செய்யாது விருப்பையே மிகுவிக்கும். சுன்றெடுத்த இளமகனின் தளிர்விரல்களால் கலக்கிக் குழப்பினால் அவ்வுணவே உயர்ந்து சிறந்த இந்திரர் அமுதிலும் சிறந்ததாக மாற்ற வல்ல ஆற்றல் பிள்ளைக் கனியமுதாகிய பேசுஞ் சித்திரத்தின் பிஞ்சு விரல்களிலே அமைந்திருப்பது பெரும் விந்தையே இதனை

'அமிழ்தினும் ஆற்ற இனிதே தம் மக்கள் சிறுகை அளாவிய கூழ்' என்று வள்ளுவர் கூட அதன் சுவையறிந்து கூறியுள்ளார்.

ஆனால் இன்றைய பெற்றோரோ இந்த மழலைகள் அளைந்த உணவின் சுவையை அறிய மாட்டார்கள். அவர்களுக்கு தாங்கள் ஊட்டுவதில்தான் திருப்தி. மழலையின் திருப்தியில் கவனம் செலுத்துவதைக் காண முடியாது இது மழலைகளை உற்சாகமின்றி இருக்கச் செய்யும் என்பதை ஒவ்வொரு தாயும் உணரவேண்டும் இது மட்டுமன்றி அக்குழந்தை தளர்நடை பயிலும் போதும் பேசும் போதும் அவர்கள் பெற்றோர்களை அணைக்கும்போதும் ஏற்படும் மகிழ்ச்சி என்பன இல்வாழ்க்கைக்கு மட்டுமல்ல இல்லத்திற்கு இன்பத்தை கொடுக்கின்றது.

இவற்றைக் காணவோ கேட்கவோ இன்றைய பெற்றோருக்கு நேரம் இல்லை அவர்கள் தொழிலில் திரிவதால் குழந்தைப் பாசம் பெற முடியாத நிலை ஏற்படுகிறது.

நோய் தீர்க்கும் மருந்தாக இம்மழலைகளின் மொழி அமைகிறது

'சொல்லும் மழலையிலே—கண்ணம்மா துன்பங்கள் தீர்த்திடுவாய்' என்று பாரதி கூட சுவையாத இன்பத்தை சுவைத்ததாகப் பாடிவிட்டான்.

தாயோ, தந்தையோ, ஏனையோரோ எவ்வளவு கோபத்தோடுவந்தாலும் அவர்கள்முன் சிரித்த முகத்துடன் குழந்தையைக் கண்டால் அவர்கள் கோபம் ஆறிவிடுகிறது சீற்றத்தை தீர்க்கும் அருமருந்து மழலை. ★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறந்த நடிகன் என்ற பெயரை நிச்சயம் பெற்றே தீருவேன்!

## மலேசியா வாசுதேவன் நம்பிக்கை

தமிழ்த் திரையுலகில் புகுந்து மிக விரைவாக புகழ் பெற்றவர் பாடகர் மலேசியா வாசுதேவன்.

இப்பொழுது நடிப்புத் துறையில் புகுந்து 'சிறந்த நடிகன்' ஆவதற்கு முழு முயற்சியாக செயலில் இறங்கியுள்ளார்.

அவர் தமிழில் அறிமுகமாகிய படம் 'ஒரு கைதியின் டைரி'.

அதைத் தொடர்ந்து 'மெட்டி', 'பாலைவன ரோஜாக்கள்', 'ஊமை விழிகள்', 'உன்னிடத்தில் நான்' போன்ற படங்களில் நடிக்கும் சந்தர்ப்பம் கிடைத்தது.

இப்பொழுது 'சிறைப் பறவை' 'உங்களில் ஒருவன்', 'வைரவிழா' உட்பட சுமார் பத்துப் படங்களில் நடித்துக் கொண்டிருக்கிறார்.

அவர் சொல்கிறார்:

'படங்களில் முதலில் நடிக்கத் தொடங்கிய போது ஒருவித பயம் என்னைச் சூழ்ந்து கொண்டது. நன்றாக நடிக்க முடியாமல் போய் விடுமோ என்ற பயம் அல்ல அது.

நான் நடிப்பதை ரசிகர்கள் ஏற்றுக் கொள்வார்களா என்ற பயம் தான் அது.

ஏனென்றால் ஒரு துறையில் இருக்கும் புகழை வைத்து நடிக்க வந்த பலரும் தோல்வியைத் தான் தழுவியிருக்கிறார்கள்.

இப்பொழுது தொடர்ந்து படங்களில் வந்து கொண்டிருப்பதால் எனக்கு இருந்த அந்தப் பயம் நீங்கி விட்டது.

சிறந்த பாடகர் என்ற பெயரை எடுத்த நான், சிறந்த நடிகன் என்ற பெயரையும் நிச்சயம் எடுத்தே தீருவேன். இதில் முழு நம்பிக்கையும் இருக்கிறது என்றார்.

## திரை உலகில்

"ஏழாவது மனிதன்" ஒளிப்பதிவாளரான தர்மா, ஓம்புரி - ஸ்மிதா பாட்டில் இணைந்து நடிக்கும் ஓர் இந்திப் படத்திற்கு ஒளிப்பதிவாளராகிறார்.

* * *

சுமார் பதினைந்து ஆண்டுகள் இடைவெளிக்குப் பிறகு சிவாஜி - பத்மினி ஜோடியை வைத்து கே. எஸ். கோபாலகிருஷ்ணன் படம் ஒன்றை உருவாக்குகிறார்.

* * *

இதுவரை காலமும் கதாநாயகனாகவே நடித்து வந்த முரளி 'மண்ணுக்கேற்ற வைரம்' என்ற படத்தில் ஒரு சிறுவேடத்தில் நடித்து வருகிறார்.

* * *

இந்த ஆண்டு இதுவரை வெளியான படங்களில் அதிக படங்களில் நடனம் ஆடியிருக்கும் கவர்ச்சி நடிகை டிஸ்கோ சாந்திதான்.

* * *

பிரபு தனது வயது கலைஞர்களை "என்ன வாப்பா?" என்று உரிமையுடன் அழைத்துக் குசலம் விசாரிப்பார். தந்தையைப் போல இவருக்கும் தொழில் பக்தி அதிகம்.

* * *

சிவாஜி பொன்விழாவில் ஊரில் இருந்த அத்தனை நடிகர் - நடிகைகளும் கலந்து கொண்டார்கள். கலைஞர்களின் ஒற்றுமை உணர்ச்சியை இவ்விழாவில் காண முடிந்ததாம்.

* * *

பல தொழில்நுட்பக் கலைஞர்களும் நடிகர் - நடிகைகளும் அறிமுகமாகிறார்கள் "சுவடுகள்" படத்தில்.

## ரசிகர் மன்றங்களை ரசிகர்களே வளர்க்கிறார்கள்

### சத்தியராஜ் கூறுகிறார்

எனது பெயரில் ரசிகர் மன்றங்கள் பெருகி வருகின்றன. அந்த மன்றங்களை நான் வளர்ப்பதில்லை. ரசிகர்களே வளர்க்கிறார்கள்.

இப்படிக் கூறுகிறார் தமிழகத்தின் முன்னணிக் கதாநாயகர்களுள் ஒருவரான சத்தியராஜ்.

அவர் மேலும் கூறுகையில்;


இந்த மன்றங்களை நான் ஊக்குவிப்பதே இல்லை. ஆனால் எனக்கு ரசிகர்கள் பெருகி வருவதைப் பார்த்து மகிழ்ச்சி அடைகிறேன்.

ரசிகர்களின் கடிதங்களைப் படித்து பதில் போடுகிறேன். தியேட்டரில் படம் பார்க்க ஆசை. அதேநேரம் 'ரசிகர்களின் அன்புத் தொல்லை' குத்தான் பயமாக இருக்கிறது.

எல்லா நடிகைகளோடும் நடிக்க ஆசை, நளினி, அம்பிகா, ரேவதி, கார்த்திகா என்று பலரோடும் நடித்துக் கொண்டிருக்கிறேன்.

இப்படிக் கூறுகிறார் சத்தியராஜ்

**தயாரிப்பு: பேரின்பம்**




## சாந்தம் மிக்க குருவின் சந்தம் மிக்க சிஷ்யன்

புலிக்குட்டிக்குப் பாய்ச்சலையும் மீன் குஞ்சுக்கு நீச்சலையும் கற்பிப்பார் எவருமில்லை. அவை மிகவும் இயல்பானவை. இதே பாணியிலே தான் செல்வன் யாதவனுக்கும், சகோதரி நந்துவுக்கும் இசையாற்றல் நன்கு பொருந்தியிருக்கின்றது.

இவர்கள் இருவரும் திருமதி திரிபுரசுந்தரி யோகானந்தன் அவர்களின் புத்திரச் செல்வங்களாகும்.



செல்வன் யாதவன் பதின்மூன்று வயதுப் பராயத்தினன். பரியோவான் கல்லூரியின் ஏழாவது வகுப்பு மாணவன்.

அண்மையில் அரியாலையில் நடந்த வாணி விழாவில் 'வாதாபி கணபதிம் பஜேம்' என்ற

### வளரும் கலைஞர் அறிமுகம்

ஹம்ஸத்வனி ராகப் பாடலோடு செல்வன் யாதவன் பாட ஆரம்பித்தான். ஆரம்பமே அற்புதமாய் அமைந்தது, தேனாக இனித்தது.

'ஸ்ரீ வல்லி தேவசேனாபதே' என்ற நடபைரவி ராகப்பாடலையும், "சாமிசதா" என்ற ராமப்பிரியா பாடலையும் பாடினான். பாடற் சரணத்தில் இராக பாவம் பொங்கி வழிந்தது. அசாதாரணமான கற்பனை வளங்களைக் காண முடிந்தது. இன்னும் மோகன ராகத்திலமைந்த 'ராமா நின்ன நம்மினு' என்ற

### கலைக்கோட்டம்

தியாகையர் பாடலையும், 'ஜெகதீஸ்வரி' என்றாரம்பிக்கும் ஹிந்தோள இராகப் பாடலையும் வியக்கும் வகையிலே பாடி ரசிகர்களைப் பாராட்ட வைத்தான்.

'பாசி படர்ந்த' என்னும் மெல்லிசைப்பாடலை யமன் கல்யாணி ராகத்திலே பாடும்போது, பல ரகத்திலுள்ள இரசிகர்களையும் ஒன்று சேரப் பரவசப்படுத்துகின்றான்.

இறுதியிலே அருணகிரியாரின் அகரமுமாகி எனும் திருப்புகழ்ப் பாடலை இராகமாலிகையில் பாடிப் பூர்த்தி செய்தான்.

யாதவனைப் பெற்றவர்கள் மட்டுமல்ல, இசை கற்றுக் கொடுக்கும் சங்கீதபூஷணம் திரு ச. பாலசிங்கம் அவர்களும்

### ஏ. நமசிவாயம்


பாராட்டுக்குரியவர் அவரின் இசை வழியும் அவரைப் போலவே சாந்தமானது. மனதை ஈர்க்கக் கூடியது.

அவர் உருவாக்கிய கலைஞர்களின் நீண்ட பெயர்ப்பட்டியலில் செல்வன் யாதவனும், சகோதரி நந்துவும் முக்கியமான இடத்தைப் பெற்றுள்ளார்கள்.

—இசைப் பயணத்தில் பலவற்றை யாதவன் சாதிப்பான். ✱

# சொற்சிலம்பம்

## போட்டி இல. 41



அனுப்புபவர் பெயர்:-

திரு/திருமதி/செல்வன்/செல்வி: ..................

..................

வயது: ..................

விலாசம்: ..................

..................

ஒப்பம்: ..................

### போட்டி விதிகள்

சொற்சிலம்பப் போட்டி விதிகள் ஒவ்வொரு மாதமும் முதல் வாரத்தில் வெளிவரும்

**மேலிருந்து கீழ்**

1. நகலம்
2. நிலகுலை
3. குள்ளப்புத்தி உடைய மிருகம்
4. எவருக்கும் அழகு தரும் தோற்றம்
5. கம்பன் மகனில் கடைசி எழுத்தைக் காணவில்லை
8. இதில் நடைபெற்ற இனப்பிரச்சினை பேச்சுக்களும் தீர்க்கமான முடிவு காணவில்லை. இங்கு இந்நகரமும் முடிவடையவில்லை.
9. சிங்கம்
11. கைக்குழந்தை தலைகீழாக நிற்கிறது
13. சக்கரவர்த்திகளில் ஒருவன்
14. ஆபரணம்

**இடமிருந்து வலம்**

1. தோத்திரப் பாடல்
4. யானை
5. சிற்சபை
6. மூங்கிலில் இருந்து இது பெறப்படுகின்றது
7. பயம்
9. உச்சி
10. ஒரு பறவை
11. இந்த வேளைகளில் தான் நல்ல காரியம் செய்வர்
12. எழுதுவதற்குப் பயன்படும் மையை இப்படியும் சொல்வர்
15. மூக்கு
16. விசுவாசம்

### சொற்சிலம்பம் இல. 39 விடைகள்

**மேலிருந்து கீழ்**

1 பகவத்கீதை 2. துறவு, 3 குலை, 4 குமரிமுனை, 5. வுறைப 8 பஞ்சு, 10. சமத்துவம் 12 சர. 15. அரி 17 மடல், 18. சிவ 19. புதை

**இடமிருந்து வலம்**

1 பதுங்குகுழி, 6 கறலை, 7. லம, 8. பறை. 9 வவுச, 11. ரிசஞ்ம. 13 முரசு, 14 கீர்த்தனை, 16. குமரி, 18. சிவபு 20, அவம், 21 தையல்.

### சொற்சிலம்பம் இல. 39 பரிசு பெற்றவர்கள் விபரம்

முதலாம் பரிசு:- திருமதி சந்திரா சண்முகசுந்தரம், வித்தனை ஒழுங்கை, வல்வெட்டித்துறை.

இரண்டாம் பரிசு:- செல்வி. சாவித்ரா மாணிக்கவாசகர். சாயி இல்லம், மல்லாகம்.

மூன்றும் பரிசு:- செல்வி பாலினி அருணகிரி, தேவி வாசம், சங்கானை.

✱ குறிப்பு:-

பரிசு பெற்றவர்கள் கடிதம் மூலம் அழைக்கப்படுவர். பரிசுப் பணத்தைப் பெறுவதற்கு பத்திரிகையில் வெளியான பெயருக்குரியவரே உரிய அடையாள அத்தாட்சிகளுடன் நேரில்வரவேண்டும் எக்காரணம் கொண்டும் வேறு எவரிடமும் பரிசுப்பணம் கையளிக்கப்படமாட்டாது.

## அந்நியன் படை பின்வாங்கி---

(4ஆம் பக்க தொடர்ச்சி)

வேண்டாம்!

மன்னன்; நாமும் நம் வேலைக் கையிலெடுப்போம்! எதிரிகள் ஆயத்தமாகி விட்டார்கள்... இப்போது கொழும்புத் துறைக்கு...

து த: வேந்தர் ஆணையிட்டால் கொழும்புத் துறைக்கு நானே படை நடத்திச் செல்வேன்!

மன்னன்: தடையென்ன... விடை தந்தேன்... ஆனால் எந்த அணியை...

து. த: வேந்தே கோட்டைக்குச் சென்று 'புயல் படை'யை அழைத்துச் செல்வேன்...

மன்னன்: பறங்கியர் கப்பலில் இருந்து வெடி தீர்ப்பார்கள்...

கொக்கு: வேந்தே... பறங்கியர் சொற்ப தூரத்தில் தான் நங்கூரம் பாய்ச்சியிருக்கிறார்கள்! நோட்டம் பார்ப்பதற்காக ஐவர் மட்டும் சிறுதோணியில் கரைக்கு வந்து விட்டு மீண்டும் போய்க் கப்பலில் ஏறிக் கொண்டார்கள் துறையில் நின்ற மீனவர்கள் அந்நியரைக் கண்டதும் முகத்தைச் சுழித்துக் கொண்டு அப்பால் நகர்ந்து விட்டார்கள் அதன் மூலம் நாட்டு மக்களின் மனோ நிலையை அறிந்து கொண்ட பறங்கியர் இரண்டு முறை கரையை நோக்கி வெடி தீர்த்தார்கள் பூசாரியார் பூவரசுக்குப் பின்னால் மறைந்து கொண்டார். நான் வேம்புக்குப் பின்னால் நின்று விட்டு நெடுங்களம் வந்து வாகையில் கட்டி நின்ற குதிரையை அவிழ்த்துக் கொண்டு வேகமாய் வந்தேன்...

து த: அப்படியானால் நாம் கடலில் குதித்து நீந்திச் சென்று கைக்கோடாரியால் அவர்களது கப்பல்களின் அடிப்பாகத்தை சிதைப்போம் வேந்தே!

மன்னன்; அப்போது அவர்கள் குறி பார்க்க முடியாது... துப்பாக்கியை கவிழ்த்துப் பிடித்தால் வெடி மருந்து கடலில் சிந்திவிடும்...

து த: அவர்கள் கடலில் குதித்தால் எம் குத்துவாள் அவர்களின் உதிரத்தை கடலில் சிந்த வைக்கும் மன்னா!

மன்னன்; சபாஷ்! சில வேளை பறங்கியர் கப்பலில் அல்லாமல் கரையில் இறங்கி நின்றிருந்தால்...

து. த: புற்றீசல் போல் எம் அம்புகள் புறப்படும்... புயல் வேகத்தில் எம் வேல்கள் பாயும்... தொடர்ந்து பதுங்கிப் பாய்ந்து வாளேந்தி பறங்கியரை அங்கேயே சாய்ப்போம் மன்னா!

மன்னன்; பலே ... செல்க, வெல்க, மீள்க!

மன்னன் விடை கொடுத்து முடிந்ததும் தளபதி விரமாணிக்க தேவனும் தன் கரமுயர்த்தி விடை கொடுக்க துணைத்தளபதி குதிரைமீது நல்லூர் கோட்டைக்கு விரைகிறான் கொக்கு மீண்டும் கொழும்புத்துறை நோக்கிப் பறக்கிறது.

அக்காலத்தில் கொழும்புக்கு மரக்கலங்கள் மூலம் போக்குவரவு செய்யப்பட்ட துறை தான் கொழும்புத்துறை என அழைக்கப்பட்டது

புயல் படை என்பது நல்லூர்ப் பெரும் சேனையின் ஓர் அணி எக்காலத்திலும் நல்லூர்க் கோட்டையில் தயார் நிலையிலிருக்கும் ஓர் வேகப்படை! சமரவாகுதேவனின் படை கோட்டையில் நிற்பதால் புயல் படையை வரைப்பிட்டி வன்னியன் படை நடத்திச் செல்ல மன்னன் அனுமதி வழங்கினான்)

நல்லூர் கோட்டைக்குச் சென்ற வரைபபிட்டி வன்னியன் அங்கு தயார் நிலையிலிருந்த புயல் படையை அழைத்துக் கொண்டு கொழும்புத் துறை நோக்கிச் செல்லவே காவற்படைத் தளபதி பராந்தகன் போர்க்களம் வந்து சேருகிறான்

நேற்று போர்க்களத்துக்குப் பருந்து வந்து போனதையும்; பாதிவழி வரை வந்த பறங்கிப் படை போர்க்களத்துக்குள் நுழைய முடியாமல் தோற்றோடியதையும் பின்னர் அறிந்து ஓடிப்போயிருந்த பறங்கித்தளபதி அன்ரூபூர்த்தாடுக்கு, இன்று கொக்கு வந்து மன்னனைச் சந்தித்ததும் அதைத் தொடர்ந்து துணைத்தளபதி சென்றதும் அவனிடத்திற்கு காவற்படைத் தளபதி வந்ததும் பெரும் யோசனையைக் கிளப்பி விடுகிறது ஆயினும் எந்த விதத்திலும் மேலும் மேலும் புதுப்படைகள் வந்து சேருமென்ற நம்பிக்கையும், தமக்குள்ள பிற்பலம் யாருக்குண்டு என்ற நினைப்பும் பறங்கித் தளபதியைத் தைரியம் கொள்ளச் செய்கிறது அதன் நிமித்தம் திமிர் கொண்ட அன்ரூ பூர்த்தாட் பறங்கிப்படையிடம் தொடர்ந்து வேட்டு வைத்து நேரத்தை மாற்ற உத்தரவிடுகிறான் இப்படியே கால நேரத்தைக் கழித்துக் கொண்டிருந்தால் புதிய திருப்பம் ஏற்படுமென்பது அவனது அசையாத எண்ணம்!

பண்ணைத் துறையில் கல்லிடைத்தேவன் படை காவல் நிற்பதையும். மற்றைய துறைகளில் அரண்மனை ஒற்றர்கள் வேவு பார்த்து நிற்பதையும் அவனால் அறிய முடியவில்லை கொழும்புத்துறை வந்தடைந்த பறங்கியரின் கடல் படையை எதிர்கொள்ள புயல்படை சென்றிருப்பதும் அவனுக்குத் தெரியாது. (தொடரும்)

## க. பொ. த. சாதாரண--

(5ம் பக்கத் தொடர்ச்சி)

16 படத்தில் காட்டிய சுருள் C யை நோக்கிக் காந்தச் சட்டம் M அசைக்கப்பட்டபோது கல்வனோமானியில் திரும்பல் வலப்பக்கமாகத் திரும்பியது. இடப்பக்கம் திரும்பல் ஏற்படுத்தப்பட வேண்டுமாயின்,

1) காந்தச்சட்டம் சுருள் C யை விட்டு விலகி அசைதல் வேண்டும்

2 காந்தச்சட்டம் சுருள் C யை நோக்கி விரைவாக அசைய வேண்டும்

3) காந்த சட்டம் சுருள் C யை நோக்கி மெதுவாக அசைய வேண்டும்

4) காந்தச்சட்டத்தை நோக்கி சுருள் C அசைதல் வேண்டும்.

17 ஆடலோட்டமின்னோட்டத்தினால் இயங் முடியாத மின்னமைப்பு


1) மின்மணி

2) மின்மோட்டார்

3) மின் மூலாம் பூசும் அமைப்பு

4) மின்வேத்தல்

18 கூற்று -தாவரங்கள் ஒளித்தொகுப்புச் செய்யச் சூரிய ஒளி அவசியமாகும.




(16 ஆம் கேள்விக்கான படம்)

விளக்கம்;- சூரிய ஒளியானது தாவரங்களில் பச்சையத்தை உற்பத்தியாக்க மட்டுமே அவசியம்

1) கூற்று விளக்கமும் சரி

2) கூற்றும்சரி பொருத்தமற்ற விளக்கம்

3) கூற்று சரி பொருத்தமான விளக்கம்

4) கூற்றுபிழை விளக்கம் சரி.

(விடைகள் அடுத்த வாரம்)

## காலத்தால் அழியாத---

(4ம் பக்கத் தொடர்ச்சி)

அனுப்பப்பட்டன

இவைகளுக்கு முன்பே மலையாளக் கரையிலிருந்து தேக்குமரம் சால்டியாவுக்கும் பபிலோனுக்கும் அனுப்பப்பட்டு வந்தது. திராவிடர்களால் ஓட்டப்பட்ட இந்தியக் கப்பல்களிலே இப்பொருள்கள் அனைத்தும் அல்லது பெரும்பாலும் கொண்டு போகப்பட்டன.

புராதன உலகத்தில் தென் இந்தியா எத்தகைய உன்னத ஸ்தானம் வகித்து வந்ததென்று நீ இதனால் தெரிந்துகொள்ளலாம் தென் இந்தியாவில் பல ரோமநாணயங்கள் கண்டுபிடிக்கப்பட்டிருக்கின்றன. நான் ஏற்கனவே சொல்லியுள்ளபடி மலையாளக்கரையில் அலெக்ஸ் சாந்திரியரின் குடியேற்றமும் அலெக்ஸ் சாந்திரியாவில் இந்தியரின் குடியேற்றமும் இருந்துவந்தன.

அசோகன் இறந்த உடனே தெற்கில் ஆந்திரா ராஜ்யம் சுதந்திரம் பெற்று நின்றது ஆந்திரதேசம் இப்போது சென்னைக்கு வடக்கே இந்தியாவின் கிழக்கரையில் உள்ள காங்கிரஸ் மாகாணம் என்பதை நீ அறிந்திருக்கலாம்.

ஆந்திர தேசத்தில் பேசப்படும் பாஷை தெலுங்கு அசோகனுக்குப்பின் ஆந்திர அரசு விரைவில் பரவிப் பெருகியது. கீழ்க்கடலிலிருந்து மேற்குக்கடல் வரையில் தக்ஷிண பீடபூமி பூராவும் அது வியாபித்தது

தென் இந்தியாவிலிருந்து வெளிதேசங்களுக்குச் சென்று அங்கே குடியேறும் முயற்சிகள் பல மேற்கொள்ளப்பட்டன அவைகளை பற்றி பிறகு கூறுகிறேன்.

இந்தியாமீது படையெடுத்துவந்து வடக்கே குடியேறிய சாகர், யவனர் முதலானோரைப் பற்றி மேலே கூறினேன்.

அவர்கள் இந்தியரோடு ஒன்றி இந்தியராகவே ஆகிவிட்டார்கள்.

வட இந்தியாவிலுள்ள நாம் எவ்வளவுக்கு ஆரியரின் சந்ததியாரோ அவ்வளவுக்கு இவர்களின் சந்ததியாரும் ஆவோம் சிறப்பாக அழகும் வீரமும் படைத்த ராஜபுத்திரர்களும், ஆற்றல் படைத்த கத்தியவார் மக்களும் இவர்களுடைய சந்ததியார் ஆவார்கள். ✱

## பண்டிதமணி--

(4ம் பக்கத் தொடர்ச்சி)

அவர் கெகு நாகனமானவர். எங்களுடன் சேர்ந்தும் சேராமலேயிருந்து வந்தார். பயனில் சொல் என்பது அவர் வாயில் வந்தறியாதது படிப்பு நேரத்திலேதான் அந்தக் கூட்டத்தில் எங்களிடையில் விஞான சம்பாஷணைகள் கிளம்புதல் வழக்கம் அந்த நேரங்களில் அவர் ஒரு மூலையில் குந்திக்கொண்டிருப்பார். நாங்கள் எங்கள் வீண் சம்பாஷணைகளில் கைந்து கொள்ளும்படி வலிந்து இழுத்தால் சிறிதே சிரிப்பார். அவ்வளவு தான். அப்பால் மௌனமாகச் சிந்தித்துக் கொண்டிருப்பார்

கைலாசபதி அவர்கள் இன்ரர்சயன்ஸ் பரீட்சையில் சித்தியெய்தி ஆங்கில தராதரபபத்திரப் பரீட்சையிலும் மல்லாகத்தில் சில மாதங்கள் படிபித்தபின், 1927 ஆம் ஆண்டில் சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரியில் ஆசிரியராய்ச் சேர்ந்தார் அங்கே கற்பித்து வந்தகாலத்தில் தம் முயற்சியால் லண்டன் பி. எஸ். சி பரீட்சையில் 1930இல் சித்தியெய்தி விஞ்ஞான பட்டதாரி ஆனார்

### பேராசிரியர்

விஞ்ஞான பட்டதாரியான இவரைப்பற்றிக் கேட்டறிந்த இராசரத்தினம் அவர்கள் இவரை அணுகிச் சைவாசிரிய கலாசாலையில் பேராசிரியராயிருக்கும் வண்ணம் உருக்கமாக வேண்டிக்கொள்ளவே இவரும் உடன்பட்டு. 1930 ஆம் ஆண்டில் அங்கே சேர்ந்து கடமையாற்றத் தொடங்கியபோதே உப அதிபர் பதவியையும் வகித்தார்.

திரு பொன் கைலாசபதி அவர்கள் நிறைவும் திருப்தியும் அன்பும் ஆதரவும் இன்சொல்லும் அமைதியும் மௌனமான போக்கும் உள்ளவராயிருந்தகொண்டே சமயம், விஞ்ஞானம், சுகாதாரம், கணிதம், உளநூல் முதலிய பாடங்களை எவ்வித முன்னாயத்தமுமின்றி முகமலர்ச்சியோடமர்ந்து நல்ல தமிழில் கற்பித்தார். சிலவேளைகளில் தரமான ஆங்கில முதல் நூல்களை பார்த்து உடன் மொழிபெயர்த்துத் தமிழில் குறிப்புரைகளை விரிவுரை போலக் கூறுவார்

கணிதம், உயர் கணிதம் பிரயோக கணிதம் என்னும் கணித வகை நூல்களைக் கதைப்புத்தகம்போல வாசித்தவாறே மனக்கணிதமாக அப்பியாசஞ் செய்தவர். சிந்தனையுலகில் சஞ்சரித்தவாறே மேலிருந்து கீழே இறங்கிச் சூழலையும் நோக்குபவர் தங்கவிக்கிரகம் போன்ற பொன் மேனியை மறைத்தும் மறையாமலும் தூய வெண்துகிலாற் போர்த்துக் கொள்பவர்.

கலாசாலைப் புராணமுடையார் ஒரு செய்யுளில் அவரைப் படம் பிடித்துக்காட்டும் அழகு அருமையாயமைந்தது.

(வரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புதிய கைத்தொழில் முயற்சி

## எமது பகுதியில் அருகி வருகிறது

எமது நாட்டின் கைத்தொழில் வளர்ச்சி பின்தங்கியேயுள்ளது. குறிப்பாக எமது பிரதேசத்தின் வளர்ச்சி இம் மண்ணில் பிறந்தவர்களின் திறமைகளின் அடிப்படையில் நோக்கும்போது மிக மிகப் பின்தங்கியுள்ளது. அரசின் கொள்கைகளை மாற்றிரம் குறை கூருமல் கிடைத்த வசதிகளுக்கு உட்பட நாம் வளர்ந்திருக்கிருேமா என்பது கேள்விக்குறியே?

இந்நிலையில் எமது பிரதேசத்தில் வளர்ந்திருக்கும் இலகு பொறியியற் கைத்தொழில்கள் குறிப்பிட்ட சில காரணிகளால் உந்தப்பெற்று வளர்ந்தவை, இவை இத்துறையின் சகல பிரிவுகளையும் உள்ளடக்கவில்லை பரந்த நோக்கிற் பார்க்கும்போது இலகு பொறியியற் கைத்தொழில் சிறு இரும்புப் பொருள்களிலிருந்து பாரிய கைத்தொழில்களுக்குத்தேவையான உதிரிகள் வரை பல பொருள்களின் உற்பத்திகளை அடக்கும் சிறு கைத்தொழிலுக்கான இயந்திர சாதனங்களும் இதில் அடங்கும். மேலும் எமது உற்பத்தியும் தற்சமயம் சர்வதேச தரத்தில் இல்லை.

இலகு பொறியியலுக்கு கணிசமான பங்களிப்பைத் தந்ததோடு சிறு இயந்திர சாதனங்கள் செய்வதற்குத் தேவையான செய்முறை அறிவும் வசதிகளும் பெற்றவை என மிகச் சில நிறுவனங்களையே குறிப்பிடலாம். இத்துறையின் வளர்ச்சி சிறு கைத்தொழில் வளர்ச்சியாலும் பாரிய கைத்தொழில்களின் வளர்ச்சியாலும் திறம்பட ஊக்குவிக்கப்படும்.

புதிய கைத்தொழில் முயற்சிகளில் ஈடுபடும் தன்மை எமது பிரதேசத்தில் அருகியே இருக்கிறது. அடிப்படை நோக்கங்கள், வாழ்க்கையில் தனிநபர் வளர்ச்சிக்கு அளிக்கப்படும் முன்னுரிமை ஆகியவையேகூட்டு முயற்சியின்றி, சமூக ஆதரவு இன்றி வளரமுடியாத கைத்தொழிற்றுறை எமது பிரதேசத்தில் வளர்ச்சியற்றுப் போயிற்று.

எமது பிரதேசத்தில் இருக்கும் கமத்தொழிற் கருவிகள், உபகரணங்கள், அரிசி ஆலை உபகரணங்கள், எண்ணெய் ஆலைகள், உணவு பதனிடும் உபகரணங்கள், பனம்

சியால் சமுதாயத்தில் தாக்கம் ஏற்பட வேண்டுமாயின் அபிவிருத்தியின் தேவை சமுதாயத்தினுல்

> ஆய்வு நிறுவனம் நடத்திய எமது பிரதேச தொழிற்றுறை ஆற்றல்களும் எதிர்கால மும்: என்ற கருத்தரங்கிலிருந்து தொகுக்கப்பட்டது.

உணரப்பட வேண்டும். இன்று இவ்வுணர்வு தோற்றுகின்றது. தீர்க்கமான தெளிவான கைத்தொழில் கொள்கை ஒன்றிற்கு சமுதாயம் முன்னுரிமை கொடுக்க

ஒருங்கே பேண இலகு பொறியியற் கைத்தொழில்களைவிட பாரிய தொழில்களுக்கே எளிதில் இயலும்


சமுதாயத்தின் ஏற்புடைய ஒரு கைத்தொழிற் கொள்கை வகுக்கப்பட்டு அது குறிப்பிட்ட காலத்திற்கு மாற்றங்களின்றி வைத்திருக்கப்பட வேண்டும் தொழில் நுட்பங்களில் நாம் சர்வதேச தரத்தை நோக்காகக் கொள்ளவேண்டும். மண்ணிலிருந்து கண்ணுடி, கடல்நீர், உப்பு சம்பந்தப்பட்ட இரசாயனத் தொழில், கடதாசிக் கைத்தொழில், சீமெந்துக் கைத்தொழில் போன்ற சிலகனரக கைத்தொழில்கள் செய்முறையிலும் உற்பத்திப் பொருளின் தராதரத்தைப் பொறுத்தவரையும் சர்வதேச தரத்துக்கு உயர்த்தப்பட்டு இயக்கப்படவேண்டும் இலகு பொறியியற் கைத்தொழில்களின் ஸ்திரத்தன்மை கனரகக் கைத்தொழில்களும் இயக்கத்துடன், தொழில் நுட்ப மாற்றம் உரிய பொருட்களின் அபிவிருத்தி ஆகிய துறைகளில் இணைக்கப்பட

### கைத்தொழில்

பொருள் உற்பத்திச் சாதனங்கள் ஆகியவற்றை உற்பத்தி செய்யும் கைத்தொழில்கள் உலோகங்களை உருக்கி வார்க்கும் கைத்தொழில்கள் உலோகத் தகடுகள் சம்பந்தப்பட்ட தொழில்கள் சிறுகைத்தொழில்களுக்கான இயந்திர சாதனங்களை உருவாக்கும் கைத்தொழில்கள் மற்றும் எம் பிரதேசத்தில் வளர்ச்சியடையாத மின்னணுவியல் மாற்றுச் சக்திப் பிரயோகம் மற்றும் பாரிய கைத்தொழில்களின் வளர்ச்சியின்மை இவற்றின் இன்றைய நிலையை அலசி ஆராயும்போது நாம் கீழ்க்காணும் முடிவுக்கு வருகிறேம்.

கைத்தொழில் வளர்ச்

வேண்டும். அபிவிருத்தி, உற்பத்தி ஆகியவை சர்வதேச தரத்தையும், சர்வதேச சந்தையையும் நோக்கமாகக் கொள்ள வேண்டும். இதில்




உயர் தொழில் நுட்பம் அறிமுகப்படுத்தல் மிக அவசியமாகும்.

சர்வதேச தரம், உயர் தொழில்நுட்பம், தொழில்நுட்பம் வல்ல உயர்த்தகுதியுள்ளோர். சிறப்புப் பயிற்சி பெற்ற தொழில்நுட்ப ஊழியர் இவை அனைத்தையும்

வேண்டும்

கைத்தொழில் வளர்ச்சிக் குசுமுக உணர்வும் கூட்டு முயற்சியும் இன்றியமையாதவை. அத்தியாவசியமானவை

(எம் ஜனநாயகம், ஏ. பி இரஞ்சிதபாலன், எஸ் சிவபாலன் )

# திராட்சை உற்பத்தியில்

## பலனளிக்கும் உத்திகள்

### கமமும் புலமும்

(முந்திய தொடர்ச்சி)

பனிப்பூச்சிகள் பயிரிலிருந்து விழுந்து நிலத்தில் அடங்கியிருந்து உவப்பில்லாத காலத்தைக் கழிக்கவல்லன. ஆகையால் திராட்சைத் தோட்டத்தையும் அதன் சுற்றுப் புறங்களையும் சூழலையும் துப்பரவாக வைத்துப் பயிர்ச்சுகாதார வழி முறைகளைப் பேணவேண்டும். தோட்டத்தை உழுது அல்லது கொத்திப் புல் பூண்டில்லாது பாதுகாத்தலும், பழுத்து விழுந்த அல்லது கத்தரித்த இலை, குழை, தண்டு ஆகியவற்றினைத் தூர அகற்றுவது அல்லது எரித்தல் அல்லது நிலத்தில்ஆழத் தாட்டல் நல்ல பலனளிக்கும்.

விவேகமுள்ள திராட்சைச் செய்கையாளர்கள் தமது தோட்டத்தைக் கண்ணும் கருத்துமாகக் கவனித்துக் கொடிகளை தினமும் அவதானிப்பதால் பனிப்பூச்சிகளை மாத்திரமல்லாது வேறு பல நோய் நொடிகளும் பீடைகளும் பெருகிச் சிரமம் ஏற்பட இடமளிக்கமாட்டார்கள். பிரச்சினைகள் ஏற்படுமுன் அல்லது ஏற்பட்டவுடன் முளையில் கிள்ளியெறிவதால் விவசாயி தனது பணத்தையும் நேரத்தையும் மீதப்படுத்துகிருன்.

#### இரசாயனக் கட்டுப்பாடு

யாழ்ப்பாணம், கிளிநொச்சிப் பகுதிகளிலிருந்து கிடைக்கப்படும் அறிக்கைகளில் இங்கு

புற்று நோயாளர் தொகை மற்றய மாவட்டங்களை விட மிகக்கூடுதலாக இருப்பது, எமது சூழல், உணவு வாழ்க்கை முறையில் ஏதோ ஒரு சில குறைபாடுள்ளதென்பதைச் சுட்டிக்காட்டுகின்றது இப்பகுதிகளில் விற்பனையாகும் சுமார் ரூ.2 கோடி பெறுமானமுள்ள இரசாயன மருந்து வகைகள் மற்றைய பகுதிகளினதைவிட மிக அதிகம். எம்மையறியாது உணவுடன் சேர்ந்து உடலையடையும் இரசாயன நச்சுப் பதார்த்தங்கள் புற்றுநோய்க்கு ஒரு முக்கிய காரணியாக அமைகின்றது. ஆகையால் இரசாயன

> பனிப் பூச்சியை கட்டுப்படுத்தும் வழி முறைகள்

நச்சுப் பொருட்களின் துஷ்பிரயோகத்தை விவசாயப் பெருமக்கள் தயவுசெய்து கண்டிப்பாகத் தவிர்க்க வேண்டும்.

நச்சு மருந்து வகைகளைத் தேவையேற்படும்போது மட்டும் மிக அவதானமாகக் குறிப்பிட்ட செறிவு அளவை மட்டும் கொடிகளிற்கு விசிறிக் சொல்லப்பட்ட கால அவகாசம் விட்டுப் பழங்களை அறுவடை செய்யவேண்டும் பொதுவாக மருந்துவகைகளைத் தெளித்தபின் 2-3 வாரங்கள் வரையிலாவது பொறுத்திருந்தபின் மாத்திரம் அறுவடை செய்யவேட்டும் பீடைநாசினிப் போத்தல்களில் குறிப்பிடப்பட்டிருக்கும் கால அவகாசம் ஆகக் குறைந்த கால அவகாசமென்பதை மனதிற்கொள்ளவும் சிலவகை நாசினிகள் மரத்தின் ஒரு பகுதிக்குட்பட்டாலும் மரத்தின் எல்லாப் பகுதிகளிற்கும் பரந்து செல்லக்கூடியன

உட்கொள்ளப்படும் தானியங்களை விட மரக்கறி வகைகளினுலும் பழவகைகளினுலும் பயிர் பாதுகாப்பிற்காக விசிறப்படும் இரசாயனப் பொருள்கள் எம்மைய

யாது எமது உடலிற் சேர்ந்துகொள்ளும் சாத்தியக்கூறுகள் அதிகம் பழங்களை வேகவைக்காது அப்படியே உண்ணுகிருேம், இதனுல் வெப்பத்தினுல் அழிக்கப்படக்கூடிய இரசாயன நஞ்சுவகைகள்கூட பழங்களினூடாக அதிக தீங்கு விளைவிக்கும். அநேகமானோர் வாங்கும் திராட்சைப்பழங்களை நீரில் கழுவாது உட்கொள்கிருர்கள் இதனைவிடத் திராட்சைத் தோட்டங்களில் விசிறப்படும் மருந்துவகைகள், உட்கொள்ளப்படும் பழங்களில் நேரடியாகப் பிடிக்கின்றது.

பனிப்பூச்சியைக் கட்டுப்படுத்த பலவகை இரசாயன மருந்து வகைகள் இருக்கின்றன. தயோடன் (Thiodan)

வேறு செவின் (Sevin எனப்படும் காபறயில் (Carbaryl) இல் பூச்சிகளைக் கட்டுப்படுத்தும். இம்மருந்து வகைகளைப் புட்டிகளில் குறிப்பிட்ட பிரகாரம் அல்லது ஒரு அவுன்சை மூன்று கலன் நீரில் கலந்து கத்தரித்த பின்வரும் பூக்கொத்துகளுக்கு தேவையேற்படும்போது விசிறவும். விசிறி 2-3 வாரத்திற்கு முன் பழ அறுவடை கூடாது. விவசாயப் பெருமக்கள் நச்சுத் திரவங்களை உபயோகிக்கும் போது மெத்தக் கவனமாகப் பொறுப்புணர்ச்சி

என்றழைக்கப்படும் என்டோசல்பான் (Endosulphan) மருந்து பனிப்பூச்சிகளைப் பாதித்தாலும் மனிதர்களையும் தேனீகளையும் அதிகளவு பாதிப்பதில்லை லெபசிட் (Lebacid) அல்லது பேய்டெக்ஸ் (Baytex) என்றழைக்கப்படும் பென்தயோன் (Fenthion)

யுடன் கண்ணியமாக நடந்து கொள்ளவேண்டும் தோட்டங்களை உரியமுறையில் பராமரித்து பயிர்ச்சுகாதார வழிமுறைகளைப் பின்பற்றுவதால் நாசினிகளுக்குச் செலவு செய்யும் பணத்தில் பெரும்பகுதியை மீதப்படுத்தலாம். மேலதிக விவரங்களுக்கு

'ஆராய்ச்சியாளன்'

பனிப்பூச்சியைக் கட்டுப்படுத்தப்படுகின்றது. அதே போல் பேயிருசில் (Bayrusil) அல்லது எக்கலக்ஸ் (Ekalux) என்றழைக்கப்படும் குயினல்பொஸ் (Quinalphos) கட்டுப்பாடு கொடுக்கும்

திருநெல்வேலியிலுள்ள விவசாய ஆராய்ச்சி நிலையத்திலுள்ளோரை அல்லது விஸ்தரிப்பு நிலையத்திலுள்ளோரை நாடவும்

(முற்றும்)

## சந்திரா சுவாமி---

(3ம் பக்கத் தொடர்ச்சி)

களா?

சுவாமிகள் பற்றிய பல விஷயம் என்னிடமிருப்பதாகக் கூறப்படுகிறது எனக்குப் பல சுவாமிகளைத் தெரியும். பைலட் பாபாவையும் தெரியும். ஆத்மீகவாதியைக் காணும் ஒவ்வொரு முறையும் நான் சில உண்மைகளை உணருகின்றேன்.

**ஆச்சரியமான மனிதர்**

சந்திரா சுவாமி அந்த ரகத்தைச் சேர்ந்தவர் அல்லர். அவருடன் நான் ஆத்மீக உரையாடல் எதையும் நடத்தவில்லை. ஆச்சரியமான மனிதர் அவர்.

அவர்மீதுசுமத்தப்படும் புகார்கள் உண்மையானுல் நிச்சயம் அவை விசாரணை செய்யப்பட வேண்டும்

பிரதமர் ராஜீவ் காந்தி ஒரு தரமாவது சந்திரா சுவாமியைச் சந்திக்கவில்லை பிரதமருக்கு சந்திரா சுவாமியை தெரியவே தெரியாது; அவருடன் பேசவே இல்லை;

சுவாமி எனக்கு புத்திமதி சொல்லவில்லை. நான் புத்திமதி கேட்பவன் அல்லன். பிரதமருடன் சந்திரா சுவாமி எடுத்தபடம் எனது மகனின் திருமணத்தில் எடுக்கப்பட்டதாகக் கூறப்படுகிறது பிரதமர் அன்று கறுப்பு ஷர்வாணி' தான் அணிந்திருந்தார். படத்தில் வெள்ளை உடுப்பு அணிந்து காணப்படுகிருர்

திரித்துக் கூறும் நடவடிக்கைகள் குறித்து மிகவும் கவனமாக இருக்கவேண்டும்.

இப்படி ரொமேஷ் பண்டாரி சொன்னுர்.

## ஞான சஞ்சீவி..

(3ஆம் பக்க தொடர்ச்சி)

நாக்கு முழுவதிலும் சுவாசத்தை ஓடவிடும் காரியத்தை எடுத்துக் காட்டுகிறது. உயிர் வாழ்வதற்குச் சுவாசம் இன்றியமையாதது

'மகர' ஒலி உதடுகளை மூடி உண்டாக்கும் சப்தம். மனித வாழ்வு முடிவடையும் பொழுது அவனுல் இறுதியாக வெளிப்படுத்தப்படும் ஒலியானது 'ம்' ஆகும்

எனவே, 'ஓம்' மனிதனின் பிறப்பு, வாழ்வு, இறப்பு ஆகிய அம்சங்களைப் பிரதிபலிக்கின்றது.

அகரம் ஜீவாத்மாவையும் மகரம் பரமாத்மாவையும் குறிக்கும் என்றும் உகரம் இரண்டையும் இணைக்கும் பாலமாக அமைகிறது எனறும் தத்துவ ஞானிகள் கூறுவர்.

எல்லா ஆத்மீக காரியங்களும் 'ஓம்' என்ற ஒலியுடன் ஆரம்பிக்கப்படுகின்றன.

'வேதமறிந்தவர்கள் வேத விதிப்படி செய்யும் யக்ரு - தான - தபக் கிரியைகளை எப்பொழுதும் 'ஓம்' என்று உச்சரித்துத் தொடங்குகின்றனர் எனக் கூறுகிறது கீதை.

(அத் 17- சா:24)

பிரணவ மந்திரத்தை உச்சரிக்கும்பொழுது உந்தியில் இருந்து 'ஓம்' என்ற ஒலி கிளம்புவதாக பாவனை செய்து, அதிர்வுகளை ஏற்படுத்தி, உச்சந்தலையில் 'ம்' முடிவுறச் செய்தல் வேண்டும் ஒன்றரை மாத்திரைகள் நேரத்துக்கு இது செய்யப்படுகிறது

இதை முறையாகச் செய்து வருபவர்களுடைய கோஷங்கள் (சூட்சும சரீரங்கள்) ஒரு லயத்துடன் அதிர்வு பெறுவதால் அவர்கள் மிகச் சக்தி வாய்ந்தவர்களாகவும், ஆன்மீக நாட்டம் உள்ளவர்களாகவும் மாறி விடுகிருர்கள்.

மனச்சோர்வடையும் நேரங்களில் ஐம்பது தடவைகள் பிரணவ மந்திரத்தை முறையாக உச்சரிக்க சோர்வு நீங்கி, உடல் புத்துயிர் பெறும்.

# எரியூட்டும் குண்டுத்தாக்கம்:

## பாதுகாக்க சில மார்க்கம்

அடுத்து நீங்கள் அவ்வறையினுள் நுழைந்துதேடுதல் முயற்சியில் ஈடுபட வேண்டும். அவ்வறையானது முழுமையாகப் புகையினுல் நிறைந்திருப்பின். அதனூடு நடந்து செல்வது சாத்தியமானதல்ல. எனவே படத்தில் காட்டியுள்ளபடி நிலத்துடன் ஊர்ந்தே செல்ல வேண்டும் ஏனெனில் பொதுவாக புகையானது தரையிலிருந்து ½ அடிக்கு மேற்பட்ட உயரத்திலேயே காணப்படுகிறது. கீழேயுள்ள அந்த அரை அடி உயரப் பிரதேசத்தில் புகை மிகக் குறைவாகக் காணப்படுவதோடு வெப்பமும் குறைவாகக் காண படும். உங்களது முகம் அப்பகுதியினுள் இருக்குமாறு ஊர்ந்து செல்வீர்களாயின், உங்களால் சூழலை நன்கு பார்க்க முடிவதோடு, பாதிக்கப்பட்டவருக்காக குரல் கொடுத்துக் கொண்டே இலகுவாக தேடுதலை மேற்கொள்ள முடியும்.

எரிந்து அணைந்த இடங்களினூடே நீங்கள் தேடுதலை மேற்கொள்ளும் போது கூட மிகவும் அவதானமாகவே நடக்க வேண்டும் முக்கியமாக மாடிப்படிகள், மாடி அறையொன்றின் தரைப் பகுதி போன்றவை எரிந்து, உறுதியற்றுக் காணப்படும் எனவே இவற்றைக் கடந்து செல்ல வேண்டுமாயின் சுவரோரங்களுடன் மிக மெதுவாகவே நடக்க வேண்டும்.

பாதிக்கப்பட்ட ஒருவரை, நினைவிழந்த நிலையில் நீங்கள் கண்டு கொண்டால் உடனடியாக அவரை பாதுகாப்பான இடமொன்றுக்கு அப்புறப்படுத்த வேண்டும். நினைவிழந்த ஒருவரை அதுவும் உங்களை விடப் பாரமான ஒருவரைத் தூக்கி, அப்புறப் படுத்தவதென்பது அந்நிலையில் சிரமமான ஒரு காரியமேயாகும் எனினும் முதலில் நினைவிழந்

### பகுதி 4

தவரை மல்லாக்கப் படுக்க வையுங்கள். பின், அவரது இரு கை மணிக்கட்டுகளையும் ஒன்று சேர்த்து ஒரு கைக்குட்டையால் அல்லது ஒரு துணித்துண்டினுல் இறுகக் கட்டுங்கள். பின்னர் அவரது இரு புறமும் உங்களது இரு கால்களும் இருக்கத்தக்கவாறு முழந்தாளில் இருந்து, உங்கள் தலையை பாதிப்புற்றவரின் கைகளினூடு நுழைத்து உங்கள் கழுத்தின் பின் பகுதியில் அவரது மணிக்கட்டுகள் இருக்குமாறு செய்யவும் இப்போது கைகளாலும், முழந்தாள்களாலும் நீங்கள் தவழ்ந்து செல்லும்போது நினைவிழந்தவரையும் உங்களுடன் இழுத்துச் செல்லக்கூடியதாயிருக்கும்.

நினைவிழந்தவரை ஒரு படிக்கட்டு மூலம் மேலிருந்து கீழ்நோக்கிக் கொண்டுவர வேண்டியிருக்குமாஞல் படிக்கட்டின் ஆரம்பத்தில் மல்லாக்கப்படுக்க வைக்கவும். தலை படிக்கட்டை நோக்கிய வண்ணம் கீழிருக்குமாறு பார்த்துக் கொள்ளுங்கள் உங்களது இரு கைகளையும் ... தாங்கிப்படி மறு

கையால் நெஞ்சுப் பகுதியை அணைத்து மெது மெதுவாக கீழ் நோக்கி இழுத்து வருவதன் மூலம் அவரை கீழ கொண்டு வரலாம்.

நீங்கள்தேடுதல்முயற்சியில் ஈடுபடும்போது, சுயநினைவுடன் இருக்கும் ஒருவரின் மேல் தீப்பற்றியிருப்பின் உங்களுடைய செயல்படும் வேகத்திலேயே அவருடைய உயிர் தங்கியுள்ளதென்பதை நீங்கள் மறக்கலாகாது. அதிலும் முக்கியமாகத் தலைப்பகுதியில் தீப்பற்றியிருப்பின் உயிராபத்தான காயங்கள் ஏற்படுமாதலால், அவரை ஒரு போர்வையாலோ அல்லது தடித்த துணி ஒன்றினுலோ சுற்றி, நிலத்திலே மேலும் கீழுமாக நன்ருக உருட்டவும். அவ்வாருக தீப்பற்றிய ஒருவர் தீயின் அகோரத்தினுல் ஏற்பட்ட வேதனையினுல் ஓட ஆரம்பிப்பாராஞல், அவரது கால்களைத் தட்டிவிட்டேனும், அவரைக் கீழே விழுத்தி உருட்டவும். இவ்வாறு செய்வதன் மூலம் தீயினை அணைக்கக் கூடியதாயிருக்கும்

#### எரியும்கட்டடத்தினுள் தனித்திருப்பின் வெளியேறுதல்

எரியும் கட்டடம் ஒன்றினுள் சிக்குண்டிருக்கும் போது நிதானத்தை இழக்காமலிருப்பதே முதன்மையாகக் கடைப்பிடிக்க வேண்டிய ஒன்ருகும். முக்கியமாக பரபரப்புடன் அங்குமிங்கும் ஓடித்திரிவதைவிட. சிறந்... அல்லது வெளியிலிருந்து உதவி

கிடைக்கும்வரை ஓர் அறையினுள்ளே பேசாமலிருப்பதோ தான் சிறந்த வழியாகும் நீங்களாகவே தனித்து வெளியேற முயற்சிக்கும்போது, வழமையான வாசல்களைப் பாவிக்கமுடியாத சந்தர்ப்பங்களில், ஜன்னல்களையே நீங்கள் வெளியேறுவதற்காகப் பயன்படுத்துங்கள். வெவ்வேறு ஜன்னல்கள் இருந்தால் அவற்றின் வழியே எட்டிப் பார்த்து எவற்றின் கீழே கண்ணுடித்துண்டுகள், ஆணிகள் போன்ற கூரான பொருட்களோ அல்லது வேறு ஏதாவது ஆபத்தான விடயங்களோ காணப்படாதிருக்கின்றதோ அந்த ஜன்னலினூடாகவே வெளியேற முயலுங்கள்

முதலில் அந்த ஜன்னலின் கீழ்ச் சட்டத்தில் வெளிப்புறம் கால்களை தொங்கவிட்டபடி இருங்கள். பின்பு கைகளினுல் கீழ்ச்சட்டத்தைப் பற்றியபடி உங்கள் உடலை முற்ருகத் திருப்பி கீழ் நோக்கி வழுக்கவும். முற்று முழுதாக நீங்கள் உங்கள் கைப்பிடியில் தொங்கும்வரை கீழே சென்று பின் கைப்பிடியை விடுத்து கீழே குதிக்கவும். குதிக்கும்போது முதலில் பாதத்தின் முன்பகுதியே நிலத்தில் படுமாறு குதிக்கவும். மேலிருந்து நேரடியாகக் குதிக்க வேண்டாம் பொதுவாக நீங்கள் இவ்வகையில் வெளியேறும்போது, குதிக்க வேண்டிய தூரத்தை அண்ணளவாக 7 அடியினுல் குறைக்கிறீர்கள்.

(வளரும்)

## மக்கள் மகிமை

### எல்லோருக்கும் நல்ல “வீரகேசரி மனேச்சர்”

சுயநலம் கருதாக் கண்டிப்பு, அடக்கமான பணிவு நேர்மையான பணி, தீவிர இறைபக்தி, உன்னதமான நிர்வாகத் தலைமைத்துவம், தமிழ்-இன, மொழி உணர்வுகள், சைவப்பண்பு இவற்றின் மொத்த வடிவே— யாழ். மாவட்ட வீரகேசரி கிளை அலுவலக முகாமையாளர் அமரர். வே. ஸ்ரீஸ்கந்தா.

இளமையிலேயே இறையடிக்கு அழைக்கப்பட்ட பண்பாளர். 'ஸ்ரீ', 'மனேச்சர்' என்னும் மதிப்புக்குரியவர்.

'ஸ்ரீ'யின் அன்பும் ஆதரவும் கண்டிப்பும் நற்தலையும் கொண்டு 'வீரகேசரி' தினசரி மூலம் வளம் பெற்றவர்கள் பலர் ' தன்நலம் கருதாது தனது நிறுவனத்திற்கும், தலைமை ஆற்றல், உழைப்புத்திறன் மிக்கவர்களை வழிநடத்தி உயர்வடையச் செய்து பலருக்கு நல்லாசனாக வும், நண்பனாகவும், வழிகாட்டியாகவும் விளங்கியவர் அமரர். ஸ்ரீ. தன்னை எந்த நிலையிலும் விளம்பரப்படுத்த நினையாத பண்புடையவராக வாழ்ந்து குறுகியகால உலகவாழ்வை நிறைவு செய்துள்ளார்.

இவர் வகுத்த தமிழ் சமூகப் பணித்திட்டங்களைத் தொடர்வதன் மூலம் இவரின் ஆத்மாவுக்கு ஆறுதல் அளிக்க முடியும்.

சிறிது பெரிதென்றும் பாராது சமநிலைநின்று ஒப்புரவு செய்யும் ஆற்றல் நிலைப்பாடு 'ஸ்ரீ'யை நினைவுபடுத்தும்

**அ. தர்ஷன்**

நண்பர்கள் வாழ்விலும், ஊழியர் நலன்களிலும் அவர் விட்டுச் சென்ற பசுமை நினைவுகள் என்றும் எவரையும் நல்வழிப்படுத்தும்.

எவரும் எல்லோர்க்கும் நல்லவராக வாழ்வது கடினம் ஆனல் எங்கள் 'ஸ்ரீ' என்றும் எல்லோர்க்கும் நல்லவராகவே வாழ்ந்தார். இந்த வழியை தன்னை அறிந்தவரும் கைக்கொள்ளத் தாண்டி வந்த சுடரொளியாக இருந்தார்.

எங்களை விட்டு ஸ்ரீ மறைந்து இன்றைய தினம் ஒரு திங்கள் மறைந்துள்ள போதும் அவரின் நினைவுகளால் இன்றும் எங்களோடு வாழ்கின்றார். எம்மத்தியில் உறவாடுகின்றார்

நல்லவர், வல்லவர், இனியவர் பண்பாளர் ஸ்ரீயின் சடுதியான மறைவு அவரது குடும்பத்திற்கு மட்டுமன்றி நண்பர்களுக்கும் சமூகத்திற்கும் ஏற்பட்ட ஈடு செய்யமுடியாத பேரிழப்பாகும்.

## தமிழருக்கு...

(2 ம் பக்கத் தொடர்ச்சி)

உணர முடிந்தது.

தமிழ் பேசும் மக்களின் சுபீட்சம் பொருளாதார அபிவிருத்தியில் தான் தங்கயுள்ளது என்பது அவரின் சித்தந்தம். பல எதிர்ப்புகளையும் பொருட்படுத்தாதுதனது பொருளாதாரக் கொள்கைகளுக்கு அவர் உயிர் கொடுத்தார். இது யாவரும் ஏற்றுக் கொண்ட உண்மை.

தமிழ் பேசும் மக்களின் மேம்பாட்டுக்காக உழைத்து தலைமைத்துவத்துக்கு ஒரு இலக்கணம் வகுத்த ஜீ. ஜீ.யின் பெயர் தமிழர் வரலாற்றில் என்றென்றும் நிலைத்து நிற்கும்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

**மில்க்வைற் செய்தி 131**

10 மில்க்வைற் நீலசோப் மேலுறைகளை அனுப்பி மில்க்வைற் செய்தி 131 ஐப் பெற்றுக் கொள்ளுங்கள்.

**மில்க்வைற் - யாழ்ப்பாணம்**



# சஞ்சீவி

08 - 11 - 1986 சனிக்கிழமை



**நுளம்பு குத்துகிறதா?**

பொன்னின் குழல் ஊதிவந்து உங்கள் பொன்னன மேனியில் ஊசிபோடுகிறதா? ஒன்று செய்யுங்கள் சாம்பிராணி புகைப்பது போல, மில்க்வைற் நீம் தாபத்தைப் புகைத்துப்பாருங்கள்.

**மில்க்வைற் - யாழ்ப்பாணம்**


## அதிபர் றேகன் இப்போது ஒரு நொண்டி வாத்து!

கடந்த செவ்வாய்க் கிழமை நடைபெற்ற அமெரிக்க இடைக் காலத் தேர்தலில் அமெரிக்க அதிபர் றெனல்ட் றேகனின் ஆளும் குடியரசுக்கட்சி தோல்வி அடைந்துள்ளது.

தமது இரண்டாவது நாலாண்டுப் பதவிக் காலத்தில் அரைவாசித் தூரத்தைத் தாண்டி உள்ள 75 வயதான அதிபர் றேகனுக்கு இது ஒரு பலத்த அடி ஆகும்.

அதிபர் றேகன் வெற்றி வாகை சூடிய 1980ஆம் ஆண்டு ஜனதிபதித் தேர்தலின் போது அமெரிக்க நாடாளுமன்றத்தின் மேல் சபையான செனட்சபை குடியரசுக் கட்சியின் ஆதிக்கத்தின்கீழ் வந்தது.

மொத்தம் 100 அங்கத்தவர்களைக் கொண்ட செனட்டில் 53-47 என்ற பெரும்பான்மை றேகனின் குடியரசுக் கட்சிக்கு கடைசியாக இருந்தது.

6 ஆண்டு பதவிக் காலத்தைக் கொண்ட செனட்டில் 34 உறுப்பினர்களின் பதவிக்காலம் முடிவடைந்து 34 ஆசனங்களுக்கு மட்டும் கடந்த செவ்வாய்க் கிழமை தேர்தல் நடந்தது.

இந்த 34 ஆசனங்களில் 22 குடியரசுக்கட்சியிடமும் 12 ஜனநாயகக் கட்சியிடமும் ஏற்கனவே இருந்தன என்பது குறிப்பிடத்தக்கது.

செனட் இடைக்காலத் தேர்தலில் குடியரசுக் கட்சி சொற்ப வாக்குகளால் வெற்றி பெறும் என்று ஊகங்கள் தெரிவிக்கப்பட்ட போதிலும் தோல்வியே ஏற்பட்டுள்ளது.

தற்போதைய இடைக் காலத் தேர்தல் முடிவின் போது 52-48 என்ற ரீதியில் செனட்சபையின் ஆதிக்கம் ஜனநாயகக் கட்சியின் கைக்கு மாறி உள்ளது.

அதே போன்று கீழ்ச் சபையான காங்கிரஸின் 435 ஆசனங்களுக்கு நடந்த தேர்தலிலும் முன்னைய ஆசனங்களை விட அதிகப்படியான ஆசனங்களை ஜனநாயகக்கட்சி கைப்பற்றி இரு சபைகளிலும் தனது ஆதிக்கத்தை நிலைநாட்டி உள்ளது.

ஏற்கனவே ஜனநாயகக் கட்சிக்கு 253 ஆசனங்களும் குடியரசுக் கட்சிக்கு 182 ஆசனங்களும் காங்கிரஸில் இருந்தால் செனட் வெற்றியே ஜனநாயகக் கட்சிக்குக் கிடைத்த குறிப்பிடத்தக்க வெற்றி ஆகும்.

### உலக உலா

* என். பி சிலன்

### வெற்றிக்கு அறிகுறி

1988 ஆம் ஆண்டு அமெரிக்காவில் ஜனாதிபதித் தேர்தல் நடைபெற இருக்கிறது.

தற்போது நடைபெற்ற இடைக்காலத் தேர்தலில் ஜனநாயகக் கட்சிக்குக் கிடைத்த வெற்றி எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தல் வெற்றிக்கு ஓர் ஆரம்ப அறிகுறி என்றே கருதப்படுகிறது.

இரு சபைகளிலும் அதிகாரத்தை இழந்த நிலையில் அதிபர் றேகனின் அடுத்த இரண்டு வருட கால ஆட்சி எப்படி இருக்கப் போகிறது? என்பதே இன்று எழும் முக்கிய கேள்வி.

### நொண்டி வாத்து

கடந்த மாதம் ஐஸ்லாந்தின் தலைநகரான ரெக்யாவிக்கில் சோவியத் அதிபர் கோர்பச்சேவைச் சந்திக்க செல்லு முன்னர் தமது கைகளுக்குக் கட்டுப்போட வேண்டாம் என்று அமெரிக்க நாடாளுமன்றத்தை றேகன் கேட்டிருந்தார்.

ஆனால் இந்த இடைக் காலத் தேர்தல் மூலம் அதிபர் றேகனுக்கு அமெரிக்க மக்கள் கட்டுப் போட்டு விட்டார்கள்.

அதனால்தான் தமது அடுத்த இரண்டு ஆண்டு பதவிக் காலத்தையும் அதிபர் றேகன் நொண்டி வாத்தின் (Lame Duck) நிலைமையில் தவிக்கப் போகிறார் என்று அரசியல் அவதானிகள் கருத்துத் தெரிவிக்கின்றனர்—

### கென்னடி குடும்பம்

இந்த இடைக்காலத் தேர்தலின் மற்றொரு சிறப்பம்சம் கென்னடி குடும்பத்தின் அரசியல் பிரவேசம்.

பூர்வாங்க தேர்தல் ஒன்றின்போது பல வருடங்களுக்கு முன்னர் சுட்டுக் கொலை செய்யப்பட்ட செனட்டர் றொபர்ட் கென்னடியின் மகன் ஜோசப் கென்னடி (34 வயது) மாஸாசூசெட் மாநிலத்தில் வெற்றி சூடி உள்ளார்.

கென்னடி குடும்பம் என்றுமே தோல்வி கண்டிராத மாஸாசூசெட் மாநிலத்தில் ஜோசப் கென்னடி ஈட்டிய வெற்றி அவரின் எதிர்கால அரசியலுக்கு ஓர் ஆரம்ப அறிகுறியாகும்.

இவரின் பெரிய தகப்பனார் ஜோன் எப். கென்னடி தமது அரசியல் வாழ்க்கைக்கு அடித்தளம் அமைத்த இடம் இந்தமாஸாசூசெட் மாநிலம்தான்

### நட்சத்திரப்போர்

இடைக்காலத் தேர்தலில் அதிபர் றேகனுக்கு ஏற்பட்ட தோல்வி அவரின் நட்சத்திரப் போர்த் திட்டத்துக்கு கிடைத்த தோல்வி என்று கிழக்கு ஐரோப்பிய நாடுகள் கருத்துத் தெரிவிக்கின்றன.

சோவியத் அதிபர் கோர்பச்சேவுடன் ரெக்யாவிக் நகரில் கடந்த மாதம் நடந்த உச்சிப் பேச்சில் அதிபர் றேகன் அணு அளவும் விட்டுக் கொடுக்காது நடந்து கொண்டது இந்த நட்சத்திரப் போர்த் திட்டத்தில்தான்.

இதற்காக பெரும் தொகையான பணத்தைச் செலவிடும் திட்டமும் றேகனிடம் இருந்து வருகிறது.

றேகனின் நட்சத்திரப் போர்த்திட்டத்துக்கு ஜனநாயகக் கட்சி எதிர்ப்புத் தெரிவித்து வருகிறது.

இத் திட்டம் செயற்படுவதற்கு முட்டுக் கட்டைபோடுவதே இனி ஜனநாயகக் கட்சியின் முக்கிய குறிக்கோளாக இருக்கும் என்று அரசியல் அவதானிகள் நம்புகின்றனர்.

## புனிதமான இயக்கங்களுக்கு பணிவான வேண்டுகோள்

எனது அண்ணன் மகனாகிய அருணகிரிநாதன் விஜிதரன் (வணிகமாணி மாணவன் யாழ் பல்கலைக்கழகம்) கடந்த செவ்வாய் (4 - 11 - 86) இரவு முதல் காணவில்லை. அவரை மீட்டுத்தர உதவுமாறு புனிதமான இயக்கங்களை பணிவாகக் கேட்டுக் கொள்கின்றேன்.

**தளையசிங்கம் இராமநாதன்**
சிவராசா அவெனியூ, திருநெல்வேலி.

## பெங்களூர் பேச்சு என்னாகும்?

இரண்டு தலைவர்கள் சந்திப்பு அடுத்த வாரம் பெங்களூரில் நடைபெறப் போகிறது.

மூன்றும் கட்டப் பேச்சுக்கள் எப்படி அமையும்? என்பது அப்போது தான் நிர்ணயிக்கப்படுமாம்.

நான்கு யோசனைகள் (இலங்கை அரசு, கூட்டணி, போராளி அமைப்புக்கள், இந்திய அரசு ஆகியவற்றினவை) இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாண முன்வைக்கப் பட்டுள்ளன.

ஐந்து போராளி அமைப்புக்களும் தனித் தனியே யோசனைகளை எழுத்து மூலம் சமர்ப்பித்துவிட்டன.

தனித் தனியாகச் சமர்ப்பிக்கப் பட்டாலும் 'தமிழர் தாயகம்' கோட்பாட்டை வலியுறுத்துவதாகவே போராளிகள் யோசனைகள் அமைந்து உள்ளன.

இப்படி சென்னைச் செய்திகள் தெரிவிக்கின்றன.

### தமிழர் தாயகம்

பெங்களூர்ப் பேச்சுக்களில் முக்கிய இடம் பெறப் போவது வடக்கு கிழக்கு இணைப்பு அல்ல.

இலங்கைத் தமிழருக்கு ஒரு தாயகம் அமைவது தான் இரண்டு தலைவர்கள் சந்திப்பின் போது ஆராயப்பட இருக்கிறது.

வடக்கு, கிழக்கு மாகாணங்களை இணைத்தால் இலங்கையில் தமிழருக்கு ஒரு தாயகம் கிடைத்து விடும்.

1957 இல் பண்டா - செல்வா ஒப்பந்தத்தை எதிர்க்கையில் திரு. ஜெயவர்த்தனா எடுத்த நிலை இது.

எனினும் தர்மிஷ்டரான பின்னர் இன்று எப்படியும் தமிழருக்கு 'தாயகம்' கிடைக்கக் கூடிய தீர்வு ஒன்றை ஏற்படுத்த வேண்டிய நிலைக்கு தள்ளப்பட்டிருக்கின்றார்.

ஐக்கிய இலங்கைக்குள் தமிழருக்கு தாயகம் ஒன்றை உருவாக்குவது எப்படி?

இதற்கான தனது திட்டத்தை பிரதமர் ராஜீவ் பெங்களூரில் திரு. ஜெயவர்த்தனாவிடம் கூறப் போகிறார்.

இரண்டையும் இணைத்துக் கொடுக்காமல் தமிழர் பகுதிகளை 'பிய்த்து எடுத்து' ஒன்றாகக் கொடுக்கும்படி இந்தியா கோரப்போகிறதா?

பெங்களூரில் இதற்கு முடிவுகாணப்படலாம் என்று சொல்லப்படுகிறது.

இலங்கை அரசாங்கத்துக்கு பேச்சுக்கள் என்றாலே வேம்பாகக் கசந்து போன காலம் நீண்ட காலம் இருந்தது.

தர்மிஷ்டர் ஆட்சியில்

**உள்ளும் புறமும்**
குறுமுனி

1983 கலவரம் வந்தது.

அன்னை இந்திரா, சிறப்புத் தூதரை அனுப்பி மாகாண சபை யோசனைகளை அடிப்படையாக வைத்து பேச்சுவார்த்தையை தமிழர் தரப்புடன் நடத்துங்கள் என்று திரு. ஜெயவர்த்தனாவைக் கேட்டுக் கொண்டார்.

தனிநாட்டுக் கோரிக்கையை கைவிட்டால் தான் கூட்டணியுடன் பேச்சு என்றவர்கள் பின்னர் பேச்சுவார்த்தைகளைத் தொடங்கினர்.

'மாவட்ட சபை, படியைத் தாண்ட மாட்டோம் என்று கூறிக் கொண்டு, எப்படியும் பேச்சுக்களை குழப்ப வேண்டும் என்று திட்டம் போட்டு செயலாற்றினர்.

### மாட்டிக் கொண்டது

அந்த நேரத்தில் போராளிகளுடன்பேசுவதுபற்றி இலங்கை அரசு கனவு கூடக் காணவில்லை. 1985 இல் போராளிகளுடன் பேச வேண்டிய நிலை இலங்கை அரசுக்கு உருவானது.

'மாவட்ட சபை'ப்படியைத் தாண்ட மாட்டோம் என்று அடம் பிடித்த அரசு, வகையாக மாட்டிக் கொண்டது.

திம்புவுக்கு 'தம்பி' தலைமையில் தூதுக் குழுவை அனுப்பி தம்பிமார்களுடன் பேசியது இலங்கை அரசு.

அதன் பின்னர் போராளிகளுடன் பேச முடியாது என்று அடம் பிடித்து வந்தது.

இப்போது "போராளிகள் பேச்சுக்கள் நடத்த முன்வரவேண்டும்; இல்லையேல் வேறு நடவடிக்கைதான் எடுப்போம்— இப்படி அமைச்சர் அத்துலத் அடிக்கடி கூறிவருகிறார்.

பயமுறுத்துகிறாரா? அல்லது பயப்படுகிறாரா? எப்படியாயினும் போராளிகளுடன் பேச வேண்டும் என்று இலங்கை அரசு விரும்புவதையே இது காட்டுகிறது.

அதேநேரத்தில் அமைச்சர் ஆனந்தா ஓர் எச் எச்சரிக்கையைசிங்களமக்களுக்கு விடுத்திருக்கிறார்.

"எதிரி கதவைத் தட்டுகிறான்; சிலவேளை உள்ளே வந்துவிட்டானோ என்பதும் தெரியவில்லை"- இது ஆனந்தாவின் எச்சரிக்கை.

இந்தப் பயமுறுத்தல், எச்சரிக்கை ஆகியவற்றுக்கு மத்தியில் இடம் பெறப்போகும் பேச்சுக்கள் எப்படி இருக்கும்?

உருப்படியாக ஏதாவது உருவாகுமா அல்லது நிலைமை உருக்குலையும் கட்டம் ஏற்படுமா? ✯

## தமிழ் மரபு---

(2-ம் பக்கத்தொடர்ச்சி)

எனவே நானும் அங்கே இருந்தேன். போசன நேரத்தில் பல சம்பாஷணைகள் நடந்தன.

கடைசியில் உரத்தகுரலில் "பார், என்னுடைய இலையையும் உங்களுடைய இலைகளையும்" என்று தனது சகாக்களுக்குக் கூறினார். சற்று நேரம் மௌனமாக இருந்தார் மேசையிலிருந்தவர்கள் முழித்தனர்.

"எனக்கு வயசு 68, நான் வழக்கமாக எடுப்பது வேறுவிதமான உணவு; நீங்கள் இளந்தாரிகள் உங்கட்கு கார், கார் என்று பசிக்கிற வயது. அன்னத்தைச் சிந்தாதே என்பது எங்கள் தமிழ்மரபு" என்றார் ஜீ. ஜீ.

பொன்னம்பலத்தின் இலையில் ஒரு சோறு எஞ்சியிருக்கவில்லை கழிக்கப் பெற்ற மிளகாய், சிலகறிகள் இதர கழிவுகள் வரிவடிவாக இலையின் எல்லைகளை அலங்கரித்தன.

அங்கிருந்த இளைஞர்களின் இலைகளில் இட்ட அன்னத்தில் அரைவாசிக்குக் குறையாமல் எஞ்சியிருந்தது. இலைகளில் இருந்த மீதங்கள் குதப்பலாக அமைந்தன.

சிலரின் இலைகளில் தயிரும் இதர திரவ உணவுகளும் மிதமிஞ்சி வழிந்து கொண்டிருந்தன. இலைகளை அவர்களாக அகற்ற முடியாத நிலைமை இருந்தது.

தமிழரின் சீரிய பண்பாடுகளை நிதானமாகக் கடைப்பிடித்தவர் பொன்னம்பலம். ✯

## ஆயுதப் படையினருக்கு...

(1-ம்பக்கத் தொடர்ச்சி)

புலிகள் தாக்குதலை ஆரம்பித்தனர். பின்னர் ஹெலிக்கொப்டர்கள் தாக்குதலை நடத்தின.

ஊரிக்காடு, கெருடாவில், கம்பர்மலை, உடுப்பிட்டி, வல்வெட்டித்துறை, ஊறணி போன்ற பகுதிகள் ஹெலிக்கொப்டர் தாக்குதலுக்கு இலக்காகின. கடலில் இருந்து கடற்படையினர். பீரங்கித் தாக்குதலை நடத்தினர்.

முகாமிலிருந்தும், கடலிலிருந்தும், ஏவப்பட்ட ஷெல் குண்டுகள் அனேகமானவை வெளி கொண்ட இடங்களான வல்லைவெளி, மாண்டான் ஆகிய பகுதிகளிலேயே விழுந்தன.

இத் தாக்குதல்களினால் ஒரு வயோதிபர் மட்டும் காயமடைந்தார். அவர் பின்னர் மந்திகை ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப் பட்டார்.

காலைச் சம்பவத்தின் போது பாடசாலைகள் ஆரம்பித்திருந்த போதிலும், அவை யாவும் உடனடியாக மூடப்பட்டு மாணவர்கள் பாதுகாப்பாக வீடுகளுக்கு அனுப்பப்பட்டனர். கடைகளும் மூடப்பட்டன. 12 மணிக்குப் பின்னர் நிலைமை வழமைக்குத் திரும்பியது. (அ-இ-160)

## பல்கலைக்கழ ..

(1ம் பக்கத் தொடர்ச்சி)

குதலுக்கு உள்ளானார்.

இவரை அரசியல் காரணங்களுக்காக தாம் விசாரித்ததாக விடுதலை இயக்கம் ஒன்று அறிவித்தது.

இதனைத் தொடர்ந்து அ. விஜிதரன் கடந்த 4-11-86 அன்று இரவு தங்குமிடத்திலிருந்து மர்மமாக காணமல் போயுள்ளார்.

இது தொடர்பாக விஜிதரனை விசாரித்ததாகக் கூறப்படும் இயக்கத்தை அணுகியபோது இது சம்பந்தமாக தமக்கு எதுவும் தெரியாதென கூறியுள்ளனர்.

இன்று குடாநாடு விடுதலை இயக்கங்களின் பூரண கட்டுப்பாட்டினுள் இருப்பதால் இவர்களே இதற்கு பதில் கூறவேண்டும்.

இப்படி அறிக்கையில் தெரிவிக்கப் பட்டுள்ளது. (இ)

## நீத்தார் பட்டியல்

கரம்பன் C. R. சேவியர் காலமானார். இவர் நீற்று புஷ்பத்தின் அன்புக் கணவரும், சித்திராவின் தந்தையும் மகேந்திரனின் மாமனாரும், புனித பற்றிக்ஸ் கல்லூரி முன்னாள் ஆசிரியர் C.R யோசப், அலோசியஸ், சலாக்கினி, காலம் சென்ற சரோஷினி ஆகியோரின் சகோதரரும் யோ, றெச்சி, றூபேட், அரியரட்ணம் ஆகியோரின் மைத்துனருமாவார்.

அன்னாரின் நல்லடக்கம் இன்று 8-11-86 காலை 10மணிக்கு புனித செபஸ்தியார் சேமக் காலையில் நடைபெறும்.


## மீண்டும் இலங்கையில்

# லோர்ஸ்பேன்* 40 ஈ.சி

குளோர்பைரிபோஸ் 40%




எச்சரிக்கை:- எல்லா பீடை நாசினிகளும் அபாயகரமானவை கவனமாக கையாளவும்.

விவசாயிகளின் முதல் தேர்வு

# பூச்சிநாசினி

மனிதருக்கு நச்சுத்தன்மை குறைந்த பரந்து செயலாற்றும் பூச்சி நாசினி:-
நெல், மிளகாய், வெண்காயம், புகையிலை, மரக்கறி,
உருளைக்கிழங்கு போன்ற பயிர்களில் பூச்சி புழு மற்றும் வேரி எறும்புகளையும் கட்டுப்படுத்தும்,

100 மி.லீ. - ரூ. 55/-
200 மி.லீ. - ரூ. 98/-
500 மி.லீ. - ரூ. 215/-
1 லீட்டர் - ரூ. 420/-

ANGLO-ASIAN AGRO CHEMICALS

அங்லோ-ஏஷியன் பேர்ட்டிலைசர்ஸ் லிமிட்டட்,
சாற்றட் வங்கி கட்டிடம், கொழும்பு-1.

* அமெரிக்க டௌ கெமிகல் ஸ்தாபனத்தாரின் வர்த்தக சின்னம்.



இப்பத்திரிகை யாழ்ப்பாணம், மின்சார நிலைய வீதி, இரண்டாம் ஒழுங்கை 15 - ஆம் இலக்கத்தில் உள்ள உதயன் பப்ளிக்கேஷன்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் அவர்களது அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது. வெளியிட்ட திகதி: 08 - 11 - 1986.

Printed and Published by Uthayan Publications (Private) Ltd, 15 Second Lane, Power House Road, JAFFNA.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org